
# அடு நெய் ஆவுதி



புலவர் கா. கோவிந்தன்

எழிலகம் வெளியீடு : எண்: 4
முதற் பதிப்பு: மார்ச்சு 1990
உரிமை ஆசிரியர்க்கு.

விலை : ரூ. 10-00

கிடைக்குமிடம் :
சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்
T. T. K. சாலை,
ஆள்வார்பேட்டை சென்னை-18.

அச்சிட்டோர் :
கமலம் பிரஸ்,
காஞ்சிபுரம்-631 502.

# பதிப்புரை

சங்கத் தமிழ்நூல்கள் என்ற சிறப்பினுக்கு உரிய பத்துப் பாட்டு, எட்டுத் தொகை, பதினெண் கீழ்க்கணக்கு என்ற தொகை வரிசையுள் நடுவண் வைத்து மதிக்கப்பெறுவது எட்டுத்தொகை; அது, நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறு நூறு, பதிற்றுப் பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு என்னும் எட்டு நூல்களைக் கொண்டது. அவற்றுள் நான்காவதாகிய பதிற்றுப்பத்து, சேர, சோழ, பாண்டியர் என்ற தமிழ்நாடாண்ட மூவேந்தருள், முதற்கண் வைத்து மதிக்கத்தக்க சேரர்குலக் காவலர் பதின்மர் ஒவ்வொரு-வரையும், பத்துப் பத்துப் பாக்களால் தனித்தனியாக, பத்து புலவர்கள் பாடிய நூறுபாக்களைக் கொண்ட பெருநூலாகும்; அவற்றுள் இரண்டாம் பத்தும், பத்தாம் பத்தும் காணமற் போகக், கிடைத்திருப்பன, எட்டுப் பத்துக்களே.

அவற்றுள் இரண்டாம்பத்தில், இமயவரம்பன் நெடுஞ்-சேரலாதனைக், குமட்டூர் கண்ணனாரும், மூன்றும் பத்தில், பல்யானைச் செல்கெழு குட்டுவனைப், பாலைக் கௌதமனாரும், நான்காம் பத்தில், களங்காய்க் கண்ணி நார்முடிச்சேரலைக்-காப்பியாற்றுக் காப்பியனாரும், ஐந்தாம்பத்தில், செங்-குட்டுவனைப் பரணரும், ஆறும்பத்தில், ஆடுகோட்பாட்டுச் சேரலாதனைக், காக்கைப் பாடினியார் நச்செள்ளையாரும், ஏழாம் பத்தில், செல்வக்கடுங்கோ வாழியாதனைக் கபிலரும், எட்டாம் பத்தில், தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும் பொறையை, அரிசில் கிழாரும், ஒன்பதாம் பத்தில், குடக்கோ இளஞ்சேரல் இரும்பொறையைப், பெருங்குன்றூர் கிழாரும் பாடியுள்ளனர். கிடைத்துள்ள எட்டுப் பத்துக்களையும், **பத்துப் பாட்டு விளக்கம்** என்ற வரிசையில், ஒவ்வொரு,

பத்திற்குமான விளக்கங்களைத் தனித்தனி நூலாக எழுதி வரிசைப் படுத்தியுள்ளோம்.

அவற்றுள், மூன்றும் பத்தின் விளக்கம், **பதிற்றுப்பத்து விளக்கம்; வரிசை இரண்டு**; என்ற தலைப்பில் புலவர். கா. கோவிந்தன் அவர்களின் நூல், எம் வெளியீடாக வர ஒப்புதல் அளித்தமைக்குப், புலவர்க்கு எங்கள் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்ளும் அதே நிலையில், புலவர் அவர்களின் நூல்களுக்கு அளித்து வந்த ஆதரவினை, எம் வெளியீடாம் இந்நூலுக்கும் அளித்து, வெளியீட்டுத் துறையில், எம் கன்னி முயற்சிக்கு ஊக்கம் அளிக்க வேண்டுகிறோம்.

—பதிப்பகத்தார்

# முன்னுரை

தமிழ்மொழி இனிமை வாய்ந்தது. 'இனிமையால் இயன்ற இளமகளிர்' என்ற பொருள் பட வந்த ''தமிழ் தழீஇய சாயலவர்'' என்ற தொடரில் வரும் ''தமிழ்'' என்ற சொல்லே இனிமை எனும் பொருள் தருவதாகும் எனக்கூறித், தமிழ்மொழிக்குப் பெருந்தொண்டு புரிந்துள்ளார் சீவக சிந்தாமணி என்னும் பெருங்காப்பியப் பேராசிரியர் திருத்தக்கதேவர்.

இனிய சொற்களைத் தேர்ந்து, இனிமையாகச் சொல்லாட விரும்பிய தமிழர், தாம் கூற விரும்பும் ஒவ்வொரு கருத்தும் இனிமையுடைய வாதல் வேண்டும்; இனிக்கும் வகையில் உரைக்கப் பெறுதல் வேண்டும் எனவும் விரும்பினார்கள். அவ்வாறே உரைத்தும் வந்தார்கள்; செந்தமிழ் இலக்கியங்கள் அனைத்தும் இச்சிறப்புடையவாகும்.

''உள்ளத்தில் உண்மை ஒளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்'' என்றார் ஒரு பெரியார். தமிழர்வாக்கு இனிமை வாய்ந்தது என்றால், அவர் உள்ளமும், அவ்வுள்ளம் உந்த உளவாகும் அவர் செயல்பாடும், இனிமை வாய்ந்தனவே ஆகும். இது, உண்மை என்பதைப், பழந்தமிழ் இலக்கியங்கள் காட்டும், படப்பிடிப்பினைக்காணும் வாய்ப்பினைப் பெற்றார் அனைவரும் உணர்வர்.

பலநூறு ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த நம் பழம்பெரும் மூதாதையர்தம் பண்பாட்டுப் பெருமையினை, இன்றைத் தமிழரும், பிறரும் அறிந்து கொள்ளுதல் வேண்டும் என்ற அவாவின் விளைவாக, அக்காலப் புலவர் பெருமக்கள், ஆயிரமாயிரம் பாக்களைப் பாடிச் சென்றார்கள். ஆனால், அவர்கள் பாடிச் சென்ற அப்பாக்களின் களஞ்சியத்தைக்,

பத்திற்குமான விளக்கங்களைத் தனித்தனி நூலாக எழுதி வரிசைப் படுத்தியுள்ளோம்.

அவற்றுள், மூன்றும் பத்தின் விளக்கம், **பதிற்றுப்பத்து விளக்கம்; வரிசை இரண்டு**; என்ற தலைப்பில் புலவர். கா. கோவிந்தன் அவர்களின் நூல், எம் வெளியீடாக வர ஒப்புதல் அளித்தமைக்குப், புலவர்க்கு எங்கள் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்ளும் அதே நிலையில், புலவர் அவர்களின் நூல்களுக்கு அளித்து வந்த ஆதரவினை, எம் வெளியீடாம் இந்நூலுக்கும் அளித்து, வெளியீட்டுத் துறையில், எம் கன்னி முயற்சிக்கு ஊக்கம் அளிக்க வேண்டுகிறோம்.

—பதிப்பகத்தார்

காக்கத் தவறிவிட்டார்கள் விழிப்புணர்வு அற்ற சிலர் என்றாலும், நம் மூதாதையருள் விழிப்புணர்வோடு இருந்தவர்கள், அழிந்தனபோக அழியா திருந்த அப்பழம் பாக்களை எல்லாம், அரிதின்முயன்று தேடிக் கொண்டார்கள்.

அவ்வாறு தேடிப் பெற்ற அப்பாக்களை ஊன்றிப் பயின்ற புலமைசால் பெரியார்கள் பலரும் ஒன்று கூடி இருந்து, இப்பாக்களில் பொதிந்து கிடக்கும் பொருள்வளம், அப்பாக்களின் அடி அளவு ஆகியவற்றை, அளவுகோலாகக் கொண்டு, அப்பாக்களையெல்லாம், பத்துப்பாட்டு, எட்டுத் தொகை, பதினெண் கீழ்க்கணக்கு என்ற தலைப்புக்களில் தொகுத்து நமக்கு அளித்துச் சென்றனர். அவ்வாறு தொகுக்கப் பெற்ற தொகை நூல்களில், இரண்டாவது வரிசையில் நிற்பதான எட்டுத்தொகை நூல்களில் இடம் பெற்றிருக்கும் பாக்களின் நலங்களை, நம்கால மக்களும் உணர்ந்து மகிழ வேண்டும் என்ற அவாவினால் உந்தப் பட்ட காரணத்தால் அவ்வரிசையுள், முதற்கண் வைத்துப் பெருமை செய்யப் பெற்றதான நற்றிணையினை, ''நற்றிணை விருந்து'' என்ற தலைப்பிலும், இரண்டாம் நிலைபெற்ற தாயினும், ''நல்ல குறுந்தொகை'' எனச்சிறக்கப் பெற்றதான குறுந்தொகையினைக், ''குறுந்தொகைக் கோவை'' என்ற தலைப்பிலும், ஆறுவது இடம் அளிக்கப் பெற்றதாயினும் ''கற்றறிந்தார் போற்றும் கலி'' என்ற சிறப்பினைப் பெற்றதான கலித்தொகையினைப், ''பாலைச் செல்வி'', ''குறிஞ்சிக்குமரி'', ''மருத நில மங்கை'', ''முல்லைக்கொடி'', ''நெற்தற் கன்னி'' என்ற ஐந்து தலைப்புக்களிலும், முப்பது ஆண்டுகளுக்கு முன்பே விளக்கி வெளியிட்டேன்.

பழந்தமிழர் தொகுத்தளித்த வரிசையிலேயே அவ்வெட்டுத் தொகை நூல் விளக்கங்களையும் அளிக்க வேண்டும் என்

உள்ளம் விரும்பினாலும், சிலபல காரணங்களால், அவ் வரிசை வழிச் செல்ல இயலாமல் போய்விட்டது; இப்போது, அவ்வரிசையுள் நான்காவதாக நிற்பதும், "ஒத்த பதிற்றுப் பத்து" என்ற பாட்டினைப் பெற்றிருப்பதுமாகிய பதிற்றுப் பத்தின் விளக்கத்தினை அளிக்க எண்ணினேன்; ஒவ்வொரு தொகுப்பிலும் பத்துப் பத்துப் பாக்களைக்கொண்ட, பதிற்றுப் பத்தில், முதல் தொகுப்பும், பத்தாம் தொகுப்பும் கிடைத்தில; ஆகவே எஞ்சியுள்ள எட்டு தொகுப்புகளின் விளக்கங்களையே அளிக்க முடிந்தது. அவ்வாறு அளிக்கும் நிலையில், ஒவ்வொரு பத்திலும் உள்ள, பத்துப் பத்துப் பாக்களையும் பயின்று, ஒவ்வொரு பாவிலும், அப்பாவிற்குப் பெருமை சேர்க்கும் சிறுதொடரை அப்பாட்டின் தலைப்பாகக் கொடுத்து பெருமை செய்துள்ளார்கள், நம் பண்டைத் தமிழ்ச்சான்றோர்.

அவ்வாறு அவர்கள் சூட்டியிருக்கும் பெயர்களில், ஒவ்வொரு பத்தின் விளக்கத்திற்கு, அப்பத்தின் முதற் பாட்டிற்குச் சூட்டியிருக்கும் பெயரையே, அப்பத்துப் பாட்டின் விளக்கத்திற்குப் பெயர் சூட்டும் முறையினைப் பின்பற்றி, இந்த மூன்றும் பத்தின் விளக்கத்திற்கு "அடுநெய் ஆவுதி" என்ற பெயரைச் சூட்டியுள்ளேன். என் முன்னைய படைப்பு களுக்குத், தமிழகத்துப் பெரியார்களாகிய தாங்கள் காட்டிய பேரன்பையும், பாராட்டையும் இவ்வரிசைக்கும் வழங்கி, மேலும் தமிழ்ப்பணி ஆற்றும் துடிப்புணர்ச்சி, என் உள்ளத்தில் மீண்டும் துளிர்விடத், துணை நிற்க வேண்டுகின்றேன்.

கா. கோவிந்தன்

# பொருளடக்கம்


| | |
|---|---|
| பாடிய புலவர் | 1 |
| பாட்டுடைத் தலைவன் | 9 |
| பாடற் பண்பு | 20 |
| பதிகம் | 26 |
| அடுநெய் ஆவுதி | 27 |
| கயிறுகுறு முகவை | 39 |
| ததைந்த காஞ்சி | 53 |
| சீர்சால் வெள்ளி | 61 |
| கான் உணங்கு கடுநெறி | 69 |
| காடுறு கடுநெறி | 75 |
| தொடர்ந்த குவளை | 82 |
| உருத்துவரு மலிர்நிறை | 89 |
| வெண்கை மகளிர் | 96 |
| புகன்ற ஆயம் | 102 |

# பாடிய புலவன்
# பாலைக் கௌதமனார்

சங்ககாலப் புலவர் பெருமக்களுள், பல்யானைச் செல்கெழு-குட்டுவனைப் பாடிய புலவர், பாலைக் கௌதமனார் ஒருவரே. தம் பாட்டுடைத் தலைவனாகப் பாலைக் கௌதமனாரால் பாராட்டப் பெற்றோனும், பல்யானைச் செல்கெழுகுட்டுவன் ஒருவனே. பாலைக் கௌதமனார், அந்தணர் குலத்தவராவர். ''ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என்ற இவ் ஆறு தொழில் அல்லது வேறு செய்தொழில் அறியார்; என்றும் அறவுணர்வே உடையவர்; அறமே மொழிபவர்; அறவினையே ஆற்றுபவர்; எவ்வுயிர் மாட்டும் செந்தண்மை பூண்டொழுகும் சீலம் உடையார்; அவரைப் பணிந்து, அவர்காட்டும் வழிநின்று அரசாள்வார், உலகனைத்தையும் வென்று, ஒரு குடைக்கீழ்க் கொண்டு ஆள்வர்; புலவர்தம் பாராட்டைப் பெறுவர்; புகழ் அவரைத் தானே தேடிவந்து அடையும்'' எனத், தாம்பிறந்த குடிப் பெருமையைப் புகழ்ந்துபாடும் பாலைக் கௌதமனார் பண்பு, குடிசெய்வல் என்னும் ஒவ்வொருவர்க்கும் நல்ல வழி-காட்டியாம்.

''ஓதல், வேட்டல், அவைபிறர்ச் செய்தல்,
ஈதல், ஏற்றல் என்று, ஆறு புரிந்து ஒழுகும்
அறம்புரி அந்தணர் வழிமொழிந்து ஒழுகி
ஞாலம் நின்வழி ஒழுகப் பாடல்சான்று
நாடுடன் விளங்கும் நாடா நல்லிசைத்
திருந்திய இயன்மொழித் திருந்து இழை கணவ!''
—பதிற்றுப்பத்து : 24 ; 6-11.

பரிசில் பெறுவது ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு, அதுபெறுவான் வேண்டிப் பொருள்படைத்தார் உளம்மகிழும் உரைகளையே தேர்ந்தெடுத்துத் திரிவது, பண்டைத்தமிழ்ப் புலவர்க்குப் பண்பன்று. நாடு வாழ வேண்டும்; அந்நாடாளும் மன்னவன் நல்லவன் ஆதல் வேண்டும் என்பதே அவர் குறிக்கோளாம். அதனால், நாடாள்வார்பால் நற்பண் பின்மையினைக் காணுந்தோறும், அவர்நா, அறவுரை வழங்கத் தலைபட்டுவிடும். தாம்கூறும் அவ்வுறவுரை, கேட்கும் அரசர்க்குக் கொடுமையுடையவாத் தோன்ற, அதனால் அவர், தம்மீது சினங்கொள்ள, அதனால் தாம்கருதி வந்த பரிசிலுக்கு மாறாகப், பெருந்துன்பமே கிடைப்பதாயினும், அது குறித்துக்கவலார்; அந்நிலையிலும் அஞ்சாது அறம் உரைத்து நிற்பர். இப்பண்புடைமையில், பாலைக்கௌதமனார், ஒருசிறிதும் குறையுடையார் அல்லர்; அதனால், பல்யானைச் செல்கெழுகுட்டுவன் குறித்து, அவர் பாடிய பாக்கள் பத்தினும், அவன்புகழ்பாடும் பகுதியைக் காட்டிலும், அவனுக்கு அறவுரை வழங்கிய பகுதியே அதிகமாம்.

தன் பேராண்மையைப் பாரெலாம்போற்றவேண்டும் என்ற போர்வெறியால் பீடிக்கப்பெற்று, பல்யானைச்செல்கெழுகுட்டுவன், பகை நாடுகளைப் பாழ்செய்து அலைவதைக் கண்ணுற்ற புலவர், அவன் போர்வெறியைப் போக்கவிரும்பினார், விரும்பியவர், அவன், தம் உரைகேட்டு மதிக்கும் மனநிலை பெறும் வாய்ப்பினை எதிர்நோக்கியிருந்தார். தான் பெற்ற வெற்றிகளைப் புலவர், தம் பாவிடை வைத்துப்பாராட்டப், அப்பாராட்டுகேட்டு, அவர்பால் பேரன்புஉடையனானான் மன்னவன்; அந்நிலையில் அவர் கூறும் அனைத்தையும் ஏற்கும் அன்புள்ளம் அவனுக்கு உண்டாகியிருந்தது. அஃதறிந்தார் புலவர். அவ்வளவே, தாம் கூறக்கருதியதைக் கூறத் தொடங்கிவிட்டார். ''வேந்தே! உன்னைக்

காணும் ஆர்வம் உந்த, உன்நாடு நோக்கி விரைந்துவந்த யான், இடைவழியில் உள்ள உன்பகை நாட்டைக் கடந்து வந்தேன்; அப்பகைநாட்டைப் பண்டே அறிந்தவன் நான்; அந்நாட்டின் வளமும் வனப்பும் கண்டு, கழிபேரின்பம் கொண்டவன் நான். புதுமணல்பரந்த மேட்டுநிலங்களில் மருதமும், முருக்கும், காஞ்சியும் வானுற ஓங்கி வளர்ந்து நிற்கும்; அம்மரங்கள் பல்வகைப் புள்ளினங்கட்கும் வாழ்வளிக்கும் வனப்புடைய வாதலின், அங்கு அப்பறவைகளின் பல்வேறு ஒலிகளும் ஒன்றுகலந்து ஓயாது ஒலித்துக்கொண்டேயிருக்கும். முருக்கு, காஞ்சி முதலாம் மரங்களின் செந்நிற மலர்கள் உதிர்ந்து படிந்து கிடக்கும் மணல்மேடு, செந்நெருப்பு மலையெனச் சிறந்து காட்டும்; அம்மணல் மேட்டினை அடுத்துப், பெருநீர் நிலையிருப்பதால், நாரை சங்கு போலும் நீர் வாழினங்கள், அம்மணல் மேட்டில் நிரைநிரையாக உலா வரும். நீர்நிலைக்கு அணித்தாக உள்ள நன்செய்களில், வேள்வித்தீக்கு விளக்கம் காட்டும் செந்தாமரை மலர்களும், செவ்வாம்பல் மலர்களும் மலர்ந்து, சிந்தைக்கு விருந்தூட்டும். பண்டு கண்டு களித்த அக்காட்சி நலத்தை, இப்போது கண்டிலேன்; மாறுகக் காணக்கூசும் கொடுங்காட்சிகளையே காணநேர்ந்தது. மக்கள் நடமாட்டத்தைக் காண்பதே அரிதாகிவிட்டது. மக்கள் வழங்குவது அற்றுப் போகவே, அந்நாட்டுப் பெருவழிகள் எல்லாம், முள்ளும், புல்லும் முளைத்துத் தொல்லை தருவவாயின. வானளாவ உயர்ந்த மாடங்களெல்லாம் மண்மேடாக, ஆடவரும் பெண்டிருமாக மக்கள் மகிழ்ந்துறைந்த ஆங்குக், காட்டுப்பசுக்கள், காளைகளோடு கலந்து கூட்டம் கூட்டமாய்த் திரியலாயின. சுருங்கச் சொன்னல், நாடு காடாகி விட்டது. வேந்தே! அக்காட்சியைக் கண்டேன்; கலங்கிற்று என் உள்ளம். வழியிடைக் கண்டாரை அணுகி, அந் நிலைமாற்றத்திற்காம் காரணம் யாது? எனக் கேட்டேன். அவர் கூறியது, என்னை

மேலும் கலக்கிவிட்டது. அத்துணைக் கேடும் உன்படை-விளைவு என அறிந்தேன்; வேந்தே! அந்நாடாளும் அரசர் அறிவு குறையுடையவர்; உன் பெருமையறியாது உன்னைப்-பகைத்துக் கொண்டார்கள்; அதனால் அவர் கேடுற வேண்டுவது பொருத்தமே; ஆனால், அவர் அறிவிலர் என்று எண்ணாது, அவர் பகையைப் பெரிதெனக்கொண்டு, நீ போர் தொடுத்ததன் பலனாய், அவர்நாடும், நாட்டவரும் அல்லவோ கேடுற்றுப் போயினர்; காட்டை அழித்து நாடுகாண்பதே நல்லவர் கடன்; ஆனால் நல்லோன் என, நாட்டவர் போற்றும் நீ, நாட்டைக் காடாக்கிக் கெடுத்தொழிந்தனையே! இது நின் பெருமைக்குப் பொருந்துமோ?'' என்று, நாம் கூறப்புகுந்த அறிவுரையினை, அவன் பகைநாட்டுப் பாழ்பட்ட நிலையைக்-காட்டி, அவனைப் புகழ்ந்துரைக்கும் வகையால், அவன் உளங்கொளப்பண்ணிய, புதுமை போற்றற்குரியது;

''நின் நயந்து வருவேம் கண்டனம்; புல்மிக்கு
வழங்குநர் அற்றென, மருங்குகெடத் தூர்த்து
பெருங்கவின் அழிந்த ஆற்ற; ஏறுபுணர்ந்து
அண்ணல் மரையா அமர்ந்து இனிது உறையும்
விண்ணுயர் வைப்பின் காடாயின; நின்
மைந்துமலி பெரும்புகழ் அறியார், மலைந்த
போர் எதிர் வேந்தர்; தார் அழிந்து ஒராலின்
மருது இமிழ்ந்து ஓங்கிய நளிஇரும் பரப்பின்
மணல்மலி பெருந்துறைத் ததைந்த காஞ்சியொடு,
முருக்குத் தாழ்பு எழிலிய நெருப்பு உறழ் அடைகரை,
நந்து நாரையொடு செவ்வரி உகளும்
கழனிவாயில் பழனப் படப்பை
அழல் மருள் பூவின் தாமரை, வளைமகள்
குறுஅது மலர்ந்த ஆம்பல்
அருஅ யாணர், அவர் அகன்தலை நாடே''.

—பதிற்றுப்பத்து: 23: 11-25

புலவர்தம் பொன்னுரை கேட்டும், மன்னன் மறணவர்வு மங்கிற்றிலது; அதுகண்டார் புலவர்; கல்விச் செல்வத்தையும், கேள்விச்செல்வத்தையும், ஒருவர் எவ்வளவுதான் சிறக்கப் பெற்ருலும், கல்வியாலும், செல்வத்தாலும் உளவாகும் இவ்வுலக இன்பம், இறவாப்பேரின்பம் பயக்கவல்லதாகத் தோன்றினும், இறுதியில் அழியக் கூடியதே; ஆகவே, நிலையிலா அவற்றைத் துணையாக்கொண்டு, நிலைபேறுடைய பெருநிலையைப் பெறுதல் வேண்டும் என்ற உணர்வு வரப்பெற்-ருல்லது, அவர் உள்ளத்தில், பிறர் உரைக்கும் அறவுரைகள் சென்று புகா, என்ற உள்ளத்தின் இயல்பை உணர்ந்தவர் பாலைக்கௌதமனுர். அதனுல், செல்வம் நிலையற்றது, இளமை நிலையற்றது, யாக்கை நிலையற்றது என நிலையாமை உணர்வினை அவன் உள்ளத்தில் புகுத்த விரும்பினுர்; ஆனுல், அதை, அவர் அப்போதே செய்துமுடித்தார் அல்லர்; அரசப்-பெருவாழ்வில் வாழ்ந்து பழகிய ஒருவர் உள்ளத்தில், நிலையாமை உணர்வை நினைத்தபோதே, புகுத்திவிடுதல் இயலாது; அதை ஏற்கும் வகையில், அவ்வுள்ளத்தைப் பக்குவப் படுத்தியபின்னரே அதைச் செய்தல் வேண்டும் என்றும் அறிந்தார்; அதனுல், பல்யானைச் செல்கெழு குட்டுவனைப் பயந்த, சேரர் குடியில் பிறந்து பாராண்ட அவன் முன்னேர் பெருமையை, அவன் மனம் உவக்கும் வகையில் உரைக்கத் தொடங்கினுர்; ''பல்யானைச் செல்கெழுகுட்டுவ! நின்குடி முதல்வர் கோலோச்சிய காலத்தில், நாடு நால்வேறு நலங்களையும் நனிமிகப் பெற்றுத் திகழ்ந்தது; காடென்றும் கடல் என்றும் கழித்து ஒதுக்கத்தக்க நிலப்பகுதிகளும், நிறை பயன் அளித்தன. நாட்டுமக்கள் ஒருவரை ஒருவர் துன்புறுத்துவது மறந்து, துணைவர்களாய் வாழ்ந்தார்கள். பிறர் பொருள் அவாவும் பீடின்மை, அவர்பால் பொருந்தா-தாயிற்று; ஐயமறக்கற்றுத்தெளிந்த அறிவுடையராய் விளங்கினர்; காதலித்து கடிமணம்கொண்ட மனைவியரை

மறவாது, மனையற வாழ்வு மேற்கொண்டு மாண்புற்றனர்; ஈட்டிய இருநிதியனைத்தும் தமக்கே உரியவாம் என எண்ணி விடாது, வருவார் அனைவர்க்கும் வழங்கி வான்புகழ் ஈட்டினர். உலகவாழ்வை இளமையிலேயே இழந்துவிடாது, கடைபோ-களவும் கண்டு களித்தனர்; இடையே, பிணியுற்று வீழ்ந்ததும் இல்லை; இவ்வாறு நாடும் மக்களும் நல்லவர் ஆனது, அக்காலை, அரியணை அமர்ந்திருந்த, நின் முன்னோர்தம் ஆட்சி நலத்தால்; கொடிய சினமும், கழிபெரும் காமமும், அளவிற்கு மீறிய கண்ணோட்டமும், அஞ்சத் தகாதனபாலும் அஞ்சுவதும், பொய்யும், புரைதீர் அன்பே ஆயினும், வரம்பிறந்துபோதலும் கைமிகந்த தண்டமும் போல்வன நல்லரசழிந்து வல்லரசாக்க, நற்றுணை புரிவன எனஅறிந்து, அவற்றை அறவே கடிந்தும் அவற்றிற்கு மாறான அறப்பண்புகள் அனைத்தையும் ஆட்கொண்டும், ஆட்சிபுரிந்து மாட்சி பெற்றனர்; அத்தகு பெரியோர், தோன்றிய பெரிய குடிவந்தவன் நீ'' என அவன் குடிப்பெருமை கூறுவார் போல், அரசாள் முறையினை, அவன் அறிந்து நெஞ்சகத்தே ஏநறிப் புகுத்திவிட்டார்.

''சினனே, காமம், கழி கண்ணோட்டம்,
அச்சம், பொய்ச்சொல், அன்பு மிகஉடைமை,
தெறல்கடுமையொடு பிறவும், இவ்வுலகத்து
அறம்தெரி திகிரிக்கு வழியடை யாகும்
தீதுசேண் இகந்து, நன்று மிகப் புரிந்து,
கடலும் கானமும் பலபயம் உதவப்,
பிறர் பிறர் நலியாது, வேற்றுப் பொருள் வெஃகாது,
மையில் அறிவினர் செவ்விதின் நடந்து, தம்
அமர்துணைப் பிரியாது, பாத்து உண்டு, மாக்கள்
மூத்த யாக்கையொடு பிணியின்று கழிய
ஊழி உய்த்த உரவோர் உம்பல்!''

—பதிற்றுப்பத்து : 22 : 1-11

தாம் கூறிய முன்ஞோர் பெருமையையும், அவர் நாடாண்ட முறைமையையும் எண்ணி எண்ணி, பல்யானைச் செல்கெழுகுட்டுவன், இன்பம் துய்த்திருக்கும் நிலையில், புலவர் தாம் இறுதியாகக் கூறக்கருதியதைக், கூறத்தொடங்கி ''சேரலர் வேந்தே! அவ்வாறு உலகமெல்லாம் ஒருசேரப் புகழப், பேரரசு ஆண்ட அவர்களும், இறுதியில் மாண்டே போயினர்; இன்று அவர் புகழ் நிலைபெற்றுளதே யல்லாது, அப்புகழை ஈட்டிய அவர்கள் இல்லாதுபோயினர்; வேந்தே இவ்வுலக வாழ்வு நிலையற்றது; நின் நாட்டுச் சோலைகள் தோறும், நின் நாட்டுமக்கள் எடுக்கும் வெறியாட்டுவிழாக் குறித்து வந்துகுமுழும் ஆட்டுக்கிடாய்கள் அனைத்தும், வெட்டுண்டு அழிந்துபோவது எத்துணை உறுதியோ, அத்துணை உறுதி, உலகில் பிறந்தார் அனைவரும் இறப்பது; ஆகவே, இறவாப் பெருநிலைவேண்டி அறவுணர்வினை ஆற்றவும் பெறுவாயாக'' எனக் கூறிப் பயன்கண்டார்.

''ஒருதாம் ஆகிய பெருமையோரும்
தம் புகழ் நிறீஇச் சென்று மாய்ந்தனரே;
அதனல் அறவோர் மகனே! மறவோர் செம்மால்!
நின் ஒன்று உரைப்பக் கேண்மதி!
காவு தோறும் இழைத்த வெறிஅயர் களத்தின்
இடம்கெடத் தொகுத்த விடையின்
மடங்கல் உண்மை, மாயமோ அன்றே''

—புறநானூறு : 366

தன் அரசவை வந்தடைந்து தாமும் தம் சுற்றமும் பசியின்றி வாழ்தற்குப் பரிசில் பெறுவது விடுத்து, தன்னைவாழ்விக்கும் விழுமிய உண்மைகளை, விளங்க உரைத்த புலவர்க்கு, வேண்டுவ அளிக்க விரும்பினன் வேந்தன்;

அஃதறிந்த புலவர், தாமும் தம் மனைவியும் இறவாப் பேரின்ப வீடடைதலே, தாம்விரும்பும் பரிசிலாம் என்றனர்; அது கேட்ட அரசனும், அந்தணர் வழிநின்று, செந்தழல் வளர்த்துப் பத்துப் பெருவேள்விகள் பண்ணிப், புலவரைப் பிறவாப்-பெருநிலையில் இருத்தினன். புலவர் பாலைக்கௌதமனார் பெற்ற இப்பரிசிற் பெருமையை, "பாடிப் பெற்ற பரிசில், 'நீர் வேண்டியது கொண்மின்' என, 'யானும் என் பார்ப்பினி-யும் சுவர்க்கம் புகல்வேண்டும்' என, பார்ப்பாரில் பெரியோரைக் கேட்டு ஒன்பது பெருவேள்வி வேட்பிக்க, பத்தாம் பெருவேள்வியில் பார்ப்பானையும் பார்ப்பனியையும் காணாராயினர்" எனப், பதிற்றுப்பத்து மூன்றும்பத்தின், பதிக-ஆசிரியரும், "தொடுத்த பெரும் புலவன் சொற்குறை தீர அடுத்துத்தா என்றற்கு வாழியரோ?" என்ற பழமொழி ஆசிரியர், முன்றுரை யரையனுகும், "பல்யானைச் செல்கெழு-குட்டுவன் புகழைச் செய்யுளாகத் தொடுத்த, கௌதமன் என்னும் பெயரிய புலவன், 'யானும் என் சுற்றமும் துறக்கம் புகும்படி பொருந்திய அறங்களை முடித்துத் துறக்கத்தைத் தா என்றற்கு, அவன் சொற்குறை தீர்ப்பான் பொருட்டு, உவந்து யாகங்களை நடத்தி, நீ வேண்டிய துறக்கத்தின்கண் நீடு-வாழ்வாயாக என்றான்" எனக் கூறும் அதன் உரை-யாசிரியரும், (பழமொழி : 316) "பாடாண் பகுதி கைக்கிளைப் புறனே" என்ற தொல்காப்பியத்திற்கு (தொல்: பொருள்: 78) "இமயவரம்பன்தம்பி, பல்யானைச்செல்கெழுகுட்டுவனைப் பாலைக்கொளதமனார் துறக்கம் வேண்டினார், என்பது குறிப்பு வகையாக் கொள்ள வைத்தலின் இது பாடாணாயிற்று" என உரை வகுத்த நச்சினார்க்கினியரும், "நான் மறையாளன் செய்யுட் கொண்டு மேனிலை உலகம் விடுத்தோன்" என இளங்கோவடிகளாரும் (சிலம்பு : 28: 137-138) பாராட்டிப் பெருமை செய்துள்ளார்கள்.

# பாட்டுடைத்தலைவன்
# பல்யானைச் செல்கெழுகுட்டுவன்

''வேழம் உடைத்து மலைநாடு'' என்றார் ஒரு பெரியார். குறவரும் மருளும் குன்றுகளைக் கொண்டது ஆதலின், வேழங்களால் மலிந்து விளங்கிய, சேர நாடாண்ட பெருவேந்தர் நாற்படையுள், வேழப்படையே சிறந்து விளங்கும். அவ்வேழப் படையின் பெருமைகண்டு வியந்த புலவர் ஒருவர், ''ஆனிரை ஓம்பும் அருந்தொழில் மேற்கொண்டவராய அந்நாட்டுக் கொங்கரின் ஆணிரைச்செல்வங்களைப் போலவே, அந்நாட்டு நாற்படையைச் சேர்ந்த வேழங்களை, எண்ணிக் காண்பதும் இயலாது ஆதலின், அக்களிற்றுப் படைக்காட்சி, கொங்கரின் ஆனிரைக் காட்சியையே நினைப்பூட்டும் எனக் கூறிப் பாராட்டியுள்ளார்.

''சேண்பரன்முரம்பின் ஈர்ம்படைக் கொங்கர்
ஆபரந்தன்ன பல்செலவின்
யாமி காண்பல் அவன் தானையானே''.

—பதிற்றுப்பத்து: 77: 10-12.

தன் நாட்டு நாற்படையுள், வேழங்களே நிறைந்து விளங்குமாறு, வேழங்களை, இயல்பாகவே மிகுதியாகப் பெற்றிருந்த அச்சேர நாட்டுள்ளும், வேழங்களை நனிமிக மிகுதியாகப் பெற்று, அதனால், வேழக்காடு அல்லது உம்பற்காடு எனப் பெயர் பெற்ற, காட்டுநாடு ஒன்றும், அந்நாட்டகத்தே இருந்தது. முள்நிறைந்த இண்டஞ்செடிகளோடு, பிரம்புக் கொடிகள் பின்னிக்கிடக்கும் புதரிடத்தே, சூல்கொண்டு

உணவு ஒழித்துக் கிடக்கும் பெண்புலிக்கு, அது விரும்பும் வேழஉணவைத் தருவான்விரும்பி, வேட்டை மேற் சென்று, பெருங்கோடுகள் படுமாறு, ஆண்டுமுதிர்ந்த ஆண்யானையை, வலப்பக்கத்தே வீழுமாறு வீழ்த்திக் கொன்று, வழியிடைப் பாறைகளின் அகன்ற இடமெல்லாம் அதன் குருதிக்கறை படிந்து சிவந்து தோன்றுமாறு ஈர்த்துச்சென்று களித்து, அவ்வெற்றிக் களிப்பால், புல்தரையில் வீழ்ந்து புரண்டுபுரண்டு எழும் புலிப்போத்து உலாவும் கொடுமையுடையது, உம்பற்-காடு எனக்கண்ட, அக்காடுவாழ் வேழங்கள், அக்காட்டு வாழ்வை வெறுத்துப், பெருங்கூட்டமாக வெளியேறி, வழியில் கிடைக்கும் பலாச்சுளைகளைத் தின்று பசியாறியவாறே, வழி-நடந்து வேற்றிடம் செல்லும், அம் உம்பற்காட்டின் இயல்பினை அழகுறப் பாடியுள்ளார் ஒரு புலவர்.

கொடுமுள் ஈங்கைச் சூரலொடு மிடைந்த
வான்முகை இறும்பில் வயவொடு வதிந்த
உண்ணாப் பிணவின் உயக்கம் தீரிய
தடமருப்பு யானை வலம்படத் தொலைச்சி
வியலறை சிவப்ப வாங்கி, முணங்கு நிமிர்ந்து
புலவுப்புலி புரண்ட புல்சாய் சிறுநெறி
பயில் இருங்கானத்து, வழங்கல் செல்லாது
பெருங்களிற்று இனநிரை கைதொடூஉப் பெயரும்
தீஞ்சுளைப் பலவின் தொழுதி உம்பற்
பெருங்காடு''. —அகம் : 357

அவ்வும்பறக்காட்டு நாட்டாட்சியைத் தனதாக்கிக் கொண்டு, அக்காட்டு வேழங்களையெல்லாம் தன்படையில் பணிகொண்டமையால், பிற சேரநாட்டு அரசர்களின் நாற்-படையில் காணலாகும் வேழங்களைக் காட்டிலும் மிகுதியான வேழங்களைக்கொண்ட நாற்படையால் சிறந்து விளங்கினான்

ஒரு சேர அரசன்; அதனுல் அவனுக்குப், பல்யானைச் செல்கெழுகுட்டுவன் என்ற பெரும்பெயர் சூட்டிப் பாராட்டினுர்கள், அக்காலப் புலவர்களும் பெருங்குடிமக்களும்.

கொல்லும்ஆனேற்றின் தோலைஉரித்து, சீவாதுவிட்ட அதன் மயிர், அகத்தே மறையுமாறு போர்த்துப்பண்ணிய போர்முரசு, செந்தினை முதலாம் பல்வேறு கூலங்களைக், குருதியொடு கலந்து, பலியாக ஊட்டப்பெற்று, சேணிடத்துள்ளார் காதுகளும் செவிடுபடுமாறு முழங்க, போர்க்களம் புகும் பேரார்வம் உந்த, விரைந்து முன்னேறிச்சென்று, பகைவர்களின் கடத்தற்கரிய கற்கோட்டைகளை யெல்லாம் வென்று கைக்கொள்ளும் விறல்மிக்க வேழங்களால் மலிந்த குட்டுவனின், வரம்பறியாப்பெருந்தானை என, அவன் படைப் பெருமை பாராட்டப் பெற்றுள்ளது காண்க.

''விரவு வேறு கோலமொடு குருதி வேட்ட
மயிர்புதை மாக்கண் கடிய கழற,
அமர்கோள் நேர்இகந்து ஆர்எயில் கடக்கும்
பெரும்பல் யானைக் குட்டுவன்
வரம்பில் தானை''

—பதிற்று: 29: 11-16

பாரதப்போரில், பாண்டவர் கௌரவர் என்ற இரு திறத்தவர் பெரும்படைக்கும், அப்போர் நிகழ்ந்த பதினெண்-நாட்கள் வரையும் உணவளித்துப் புரந்தமையால், பெருஞ்-சோற்றுதியன் சேரலாதன் எனும், புகழ்மிகு பெயர்பெற்றுன் என்றும், தம் முன்னேன் செய்த அவ்அரும் பெரும் செயல் நினைவாகவோ, அல்லது, மாண்டு மறைந்துபோன தன்குல முன்னேர்களின் நினைவாகவோ, ஆண்டுதோறும் விழா-

வெடுத்துப் பெருஞ்சோறு அளிக்கும் வழக்கத்தை மேற்கொண்டு வாழ்ந்தமையால், அப்பெயர் பெற்றுன் என்றும், பாராட்டத்தக்க பேரரசின் மகனுய்ப்பிறந்த பெருமையுடையவன், பல்யானைச்செல்கெழுகுட்டுவன். தம்பியுடையான் படைக்கு அஞ்சான் என்பது உலகியல் உண்மை; உடன் பிறப்பாளராலும், உயர்ந்து விளங்கினுன் பல்யானைப்செல்கெழுகுட்டுவன். வடபேரிமயங்காறும் சென்று, வெற்றி கொண்டு, அதன் நினைவாய், இமயத்தில் தன் விற்கொடியைப் பொறித்து, குமரியொடு வடவிமயத்து ஒருமொழி வைத்து உலகாண்ட சேரலாதன் என்ற, சிறப்புடையோனுகிய இமயவரம்பன், நெடுஞ்சேரலாதனின் தம்பியாம் தகவுடையான், இக்குட்டுவன். வெளியத்தே வாழ்ந்திருந்த, வேளிர்குலத் தலைவனுகிய வேண்மான் என்பானின் மகளாம், நல்லினிஎனும் நல்லாள், இவனை ஈன்ற நற்பேறு உடையாள்; இவ்வரலாற்று விளக்கங்கள்,

''மன்னிய பெரும்புகழ் மறுவில் வாய்மொழி
இன்னிசை முரசின் உதியன் சேரற்கு
வெளியன் வேண்மான் நல்லினி ஈன்றமகன்
இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்.'
இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் தம்பி
பல்யானைச் செல்கெழுகுட்டுவன்''

என்ற பதிற்றுப்பத்து, இரண்டு, மூன்று பத்துக்களின் பதிகங்களான் தெளிவுறப் புலனும்.

வேழங்கள் மலிந்த உம்பற்காட்டைத் தன்னகத்தே கொண்ட உம்பற்காட்டு நாடு, நல்லவளம் மிக்க பெருநாடாம். அதனுலேயே, தன்னைப்பாடிய புலவர் குமட்டூர்க் கண்ணனுர்க்கு, அந்நாட்டகத்தனவாய ஐந்நூறு சிற்றூர்களைப் பிரமதாயமாகக் கொடுத்தான் இமயவரம்பன் நெடுஞ்-

சேரலாதன், பெரும்புலவர் பரணர்க்கு அந்நாட்டு வருவாய் அனைத்தையுமே வாரி வழங்கினன், கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவன். இவ்வாறு, சேரர்க்கு உரிமையுடையதும், சிறந்தபல செல்வநலம் வாய்க்கப் பெற்றதுமான அவ்வும்பற்-காடு, ஒருகாலத்தில், சேரஆட்சியின் எல்லைக்கு அகப்படாது அகன்றுகிடந்தது. அதனல், அரியணை அமர்ந்த பல்யானை செல்கெழுகுட்டுவன், தன்முதற்பெரும் பணியாக, ஆங்குத் தன் கோல்நிலவப் பண்ணிப் புகழ்கொண்டான்.

பல்யானைச் செல்கெழுகுட்டுவன் கோலோச்சத் தொடங்கிய காலத்தே, சேரநாட்டின் அகத்தும் புறத்துமாகக், கொங்கர், பூழியர், மழவர் போலும், கொற்றம்மிக்க மறவர்குலத்து மக்கள் வாழ்ந்து வந்தனர். ஆனிரைச் செல்வங்களை அரும்-பாடுபட்டுப் பேணி வந்தமையால் பெறலாகும் பெருவாழ்வின ராதலோடு, வாட்போரில் வல்லராகவும், கல்கால்கவணை எனும் அருங்கலப்பொறியால், பகைவர் தம் பற்றற்கரிய பேரரண்களையும் பாழ்செய்ய வல்லவராகவும் விளங்கின-மையால், கிள்ளிவளவன் போலும் சோழர்குலத்தவரும், பசும்பூண்பாண்டியன் போலும் பாண்டியர் குலத்தவரும் ஆய்அண்டிரன் போலும் குறுநிலத்தலைவர்களும், அஞ்சவல்ல ஆற்றல்வாய்ந்தவர் கொங்கர். கொங்கரைப் போலவே, ஆடு மாடு மேய்க்கும் தொழில் உடையராதலோடு, காடுவாழ் களிறுகளைக் கைப்பற்றிவந்து பழக்கிப் பணிகொள்ளவும் வல்லராய் வாழ்ந்தும், கறவைகளைக் காட்டில் மேயவிடுத்து, மலைக்காட்டு மண்ணில், கற்களோடுகலந்துகிடந்து மின்னும் மாணிக்கமணிகளைத் திரட்டி வந்தும், வாழ்வாங்கு வாழும் விழுமியோர் பூழியர். காற்றென்விரையும் குதிரைப்படை-யுடைமையால் சேணெடும் நாட்டினுள்ளும் புகுந்து அந்நாட்டு ஆனிரைச்செல்வங்களைக் கவர்ந்துவந்தும், தம் வாழிடத்து வழிகளைக், கடந்துசெல்லும் செல்வர்களை

ஆறலைத்து அவர்தம் அரும்பொருள் கொள்ளைகொல்லும் கொடுமைமிகு வாழ்வுடையராய் வாழ்ந்தமையால், பொதினிக்குரிய நெடுவேள் ஆவியாலும், வேங்கடத்துக்கு உரிய கள்வர்கோமான் புல்லியாலும் வென்று அடக்கத்தக்க விறல்படைத்தவர் மழவர். அன்னார் இன்னர்ஆதல் அறிந்து, பல்யானைச்செல்கெழுகுட்டுவன், கொங்கரை வென்று அவர் நாட்டைத் தனதாக்கிக் கொண்டான்; பூழியரையும், மழவரையும் தன்படையாளராக ஏற்றுப் பணிகொண்டு பயன் பெற்றான். பல்யானைச் செல்கெழுகுட்டுவனின் இப்பெரும் செயல்கண்ட புலவர் பெருமக்கள், "கொங்கர் நாடு அகப்படுத்த வேல்கெழுதானை வெருவருதோன்றல்!" (பதிற்றுப் பத்து: 22) "பூழியர் கோவே", "மழவர் மெய்ம்மறை" (பதிற்றுப்பத்து: 21) என்பனபோலும் புகழ்மிகு பெயர்கள் சூட்டிப் பாராட்டினார்கள்.

கொங்கர்தம் நாடும், பூழியர், மழவர்களின் கொற்றமும் துணைசெய்யக், கோலோச்சிய பல்யானைச் செல்கெழுகுட்டுவன், அகப்பா என்ற அரணுக்கு உரியான் ஒரு வீரன், தன் தாள்பணிய மறுத்துத் தருக்கித் திரிவதுகண்டு கடுஞ்சினம் கொண்டான். அவன் பணியாமைக்குக் காரணம், அவன் அகப்பாஅரணின் அமைப்புநலனே என அறிந்தான். முற்றியிருந்து முறியடிக்கத் துணியும், மாற்றார் படைகளைப், பாய்ந்தழித்துப் போரிடற்காம் பரந்து அகன்ற செண்டு வெளியினையும், கணையமரம் செறிக்கப் பெற்ற கதவுகள் பொருந்திய வாயில்களையும், ஐயவித்துலாம் போலும் அரியபொறிப்படைகளையும், கண்ணொளி புகாக் காவற்காட்டினையும், ஆழ்ந்து அகன்ற அகழியினையும், நெடிய பெரிய மதில்களையும் உடையது அவ்வகப்பா அரண். அத்தகு அரண் அமையப் பெற்றமையால், அவ்வரணுக்குரியான், அடிபணிய மறுத்து வந்தான்; ஆற்றல்மிகு அரசர்களும், அரண்அருமை அறிந்து

அஞ்சி நடுங்குவராயினர்; இவ்வுண்மையை அறிந்து கொண்டான் பல்யானைச் செல்கெழுகுட்டுவன்; அவன்பால், அரண் வாயிற்கதவுகளைத், தம்கோடுகளால் பிளந்து பாழாக்க வல்ல களிற்றுப் படையும், அரண்மதில்களைத் தம்கல்கால்-கவண் பொறியால் பொடியாக்கவல்ல படையும் இருந்த-மையால், அகப்பா அரணை அழிக்கத் துணிந்தான்; துணிந்தானுக்கு அவ்விருபடைகளும் துணைநின்றன; அகப்பா அழிந்தது; வானக சூடி வீறுகொண்டான் வேந்தன். புலவர்கள் பின்வரும் வாழ்த்துரையினை வழங்கினார்கள்.

''துஞ்சுமரம் துவன்றிய மலரகன் பறந்தலை,
ஓங்குநிலை வாயில், தூங்குபு தகைத்த
வில்விசை மாட்டிய விழுச்சீர் ஐயவி,
கடிமிளை, குண்டு கிடங்கின்,
நெடுமதில், நிரைப் பதணத்து
அண்ணலம் பெருங்கோட்டு அகப்பா எறிந்த
பொன்புனை உழிஞை வெல்போர்க் குட்டுவ!''

—பதிற்றுப்பத்து: 22: 21-27

தமிழகத்துப் பேரரசர்களாகிய சேர, சோழ, பாண்டியர்கள் ஒற்றுமையோடிருந்து ஊராண்டவரல்லர்; ஒரு குடியில், பெருவீரன்ஒருவன் பிறந்துவிட்டால், அவன், பிறஇருகுடிப் பேரரசர்களையும் வென்றழிக்க விரும்புவதும், அவ்விருகுடியிலும் வந்தவர்கள், பிறகுறுநிலத்தவர் துணை பெற்று, அப்பெருவீரனை அழிக்க முனைவதும் அக்காலத்-தமிழகத்தின் அரசியல் நிகழ்ச்சிகளாம். அதற்கு ஒப்ப, சேரர்குடியில், பல்யானைச் செல்கெழுகுட்டுவன் செங்கோல் ஏந்தியதும், சோழனும், பாண்டியனும் தம்பகை ஒழிந்து ஒன்றுபட்டனர்; தம் ஆட்சிக்கு அடிபணிந்தும் அடிபணியாதும் ஆங்காங்கு இருந்து அரசாண்டுவந்த குறுநில மன்னர்களாம்

வேளிர்களின் துணையை வேண்டிப் பெற்றனர். நில அரண், நீர் அரண், மலையரண், முதலாம் தம்நாட்டகத்து அரண்களைச் செப்பம் செய்து, வலுவுடையவா ஆக்கினர். இவ்வாறு அரியபெரிய துணைகளைப் பெற்றும், அழிக்கலாகா அரண்பல பெற்றும், அவர்தம் அச்சம் அகன்றிலது. பல்யானைச் செல்கெழுகுட்டுவனுல் பாழுற்றுப்போகும் போகூழ், எந்த நேரத்தில் வந்து, தம்மை அண்டிவிடுமோ எனும் நினைவால் நடுங்கி வாழ்வாராயினர்; அத்துணைப் பேராற்றல் வாய்ந்தவனுக வளர்ந்துவிட்டான், பல்யானைச் செல்கெழுகுட்டுவன். அப்பேரரசர்களின் நடுங்கு நிலைகண்டு பழிப்பார்போல், இவன் புகழ்பாடி மகிழ்ந்தார்கள் புலவர்கள்.

> ''பணைகெழுவேந்தரும் வேளிரும் ஒன்றுமொழிந்து
> கடலவும் காட்டவும் அரண்வலியார் நடுங்க''.
>
> —பதிற்றுப்பத்து: 30

வேங்கடம்முதல் குமரிவரைப் பரவிய பெருநாடுமுழுவதையும் தன் ஒருகுடையே நிழல்செய்ய உலகாளும் பெருநிலை வாய்க்கப்பெற்ற பல்யனைச் செல்கெழுகுட்டுவன், அவ்வெற்றிக்கு வழித்துணை புரிந்தவள், தன் நாட்டகத்ததாகிய அயிரைமலைவாழ் கொற்றவையே என உணர்ந்து, அவளை வழிபட விரும்பினுன். அயிரைமலை அடைந்தான்; பரந்தகன்ற தன்மார்பில் கொற்றவாள் கொண்டு ஆக்கிய விழுப்புண்ணிலிருந்து வழியும் குருதி கலந்த செஞ்சோற்றைப் படைத்துப் பரவிப் பேரின்பம்கண்டான்.

கொற்றவைக்கு வழிபாடாற்றிக் குறை தீர்த்த கொற்றவன், தன் வெற்றிப்புகழ் இவ்வையகமெங்கும் சென்று பரவவேண்டும்; தமிழகம் முழுவதும், தன் ஆணைக்கீழ் அடங்கியுலது என்பதை உலகோர் உணரவேண்டும் என்று

விரும்பினன்; அதனல் தன் வேட்கைதீர்க்கும் விழாவொன்று எடுக்க விழைந்தான். உடனே, தன் யானைப் படையின் ஒரு பகுதியைச், சேரநாட்டைச் சேர்ந்த கீழ்க்கடலுக்கும், மற்றொரு பகுதியைத் தன்குலத்தவர்க்கே உரித்தாகிய மேலைக்-கடலுக்கும் போக்கி, இரு கடல்நீரையும் குடம் குடமாக ஒரேபகலில் கொணர வழிவகுத்தான்; அவ்வாறு அவை கொணர்ந்த, அவ்விருகடல்நீரிலும் படிந்துஆடிப், பெருவிழாச் செய்து பேரின்பம்கொண்டு பெருநிலை பெற்றான். பல்யானைச் செல்கெழுகுட்டுவனின் இப்பெருஞ்செயல் இரண்டும், அவன் குலக்குருசிலாம் இளங்கோவடிகளாரின் பாராட்டுப் பொருளாகும், பெருமையுடையவாயின.

"உருகெழு மரபின் அயிரை மண்ணி
இருகடல் நீரும் ஆடினோன்".

சிலம்பு : 28 : 145-146.

அரியணையேறிய அந்நாள் தொட்டு, போர் போர் என ஓயாப்போரே மேற்கொண்டுவந்த பல்யானைச் செல்கெழு-குட்டுவன், தமிழகம் முழுவதையும் தன்ஆணைக்கீழ்க் கொண்டு விட்ட பின்னர், அப்பெருநாட்டில் அமைதிநிலவும் நல்லரசு நடாத்த விரும்பினன். தன்ஆட்சிக்கீழ் வந்துற்ற நாடு, தன் ஒருவனல் தனித்திருந்து ஆளமாட்டாப் பரப்புடையது என்பதை உணர்ந்தான்; மேலும், அப்பெருவாழ்வளிக்கும் பேரின்பத்தைத், தான்ஒருவனே தனித்திருந்து நுகர நினைத்தால், அது தன்குலத்து வந்தார்க்கு வருத்தம் தரும்; விளைவு உட்பகை வளர்ந்து, அரசப்பெருந்தேரின் ஆணியை அழித்துவிடும் என்றும் அறிந்தான்; அதனல், தன்குடி-வந்தார் ஒவ்வொருவரையும், அவரவர்தம் தகுதிக்கொத்த நிலைகளில் இருத்தி, நல்லரசு நிலவச்செய்து நீள்புகழ் கொண்டான்.

பல்யானைச் செல்கெழுகெட்டுவன், இவ்வாறு கொற்றம் விளங்கக் கோலோச்சியிருந்தமை கேட்டு, அவன் அரசவை அடைந்து, அழகிய பத்துப்பாக்களை ஆக்கி, அவன் வெற்றிப் புகழை விளங்கப்பாடினார், புலவர் பாலைக்கௌதமனார்' அப்பாக்களின் அரும்பெரும் சொற்சுவை பொருட்சுவைகளை நுகர்ந்து பேரின்பம் கண்ட புரவலன், அப்புலவர்பால் பேரன்புகொண்டு, அவர்விரும்பும் பரிசில் அளிக்க முன் வந்தான்; அரசன் குறிப்பறிந்த புலவர், ''வேந்தே! யாம் விரும்பும் பரிசில் பொன்னோ, பொருளோ அன்று; யானும் என்மனைவியும் இறவாப் பெருவாழ்வளிக்கும் வீட்டுலகம் அடைதல் வேண்டும்; அதுவே யாம்விரும்பும் பரிசில்; ஆகவே, அதற்கு வழிசெய்ய வேண்டுகின்றேன்.'' என்றார்; அதுகேட்ட அரசன், அப்பெருவாழ்வு அளிக்கவல்ல பத்துப் பெருவேள்வி-களை முறைப்படிச் செய்து முடித்து, அவர்க்கு அவ்வாழ்வு அளித்து, அகம் மகிழ்ந்தான்; பல்யானைக் செல்கெழு-குட்டுவனின், இப்பெரும்பணியையும் பாராட்டி மகிழ்ந்தார் இளங்கோவடிகளார்.

''நான்மறையாளன் செய்யுள் கொண்டு
மேனில உலகம் விடுத்தோன்''.

இவ்வாறு, வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து, வான்-உறையும் தெய்வமா மதித்துப் பாராட்டத்தக்க பெருநிலை-பெற்ற பல்யானைச் செல்கெழுகுட்டுவன், தன்வாழ்நாளின் இறுதிக் காலத்தை, இடையறவில்லா இன்பநிலையில் கழிப்பான் விரும்பி, நெடும்பாரதாயனார் அடிச்சுவட்டினைப் பின்பற்றிச்சென்று, துறவு மேற்கொண்டு, நாடுவிட்டுக் காடு புகுந்து நோன்பு மேற்கொண்டான். இவ்வாறு எவ்வகை நோக்கினும் இயற்கையோடியைந்த இனிய வாழ்வுகண்ட விழுமியோனாகிய, அவன்புகழ் அனைத்தையும், தொகுத்துத் தொடுத்து அளித்துள்ளார் புலவர் ஒருவர்;

‘ இமயவரம்பன் தம்பி, அமைவர
உம்பற்காட்டைத் தன்கோல் நிறீஇ,
அகப்பா எறிந்து, பகல் தீ வேட்டு,
மதியுறழ் மரபின் முதியரைத் தழீஇ,
கண்ணகன் வைப்பின் மண்வகுத்து ஈத்து,
கருங்களிற்று யானைப் புணர்நிரை ஒட்டி,
இருகடல் நீரும் ஒருபகல் ஆடி,
அயிரை பரைஇ, ஆற்றல்சால் முன்பொடு
ஒடுங்கா நல்லிசை உயர்ந்த கேள்வி
நெடும்பாரதாயனார் முந்துறக் காடுபோந்த
பல்யானைச் செல்கெழு குட்டுவன்”.

—பதிற்றுப்பத்து: பதிகம்: 3

# பாடற் பண்பு

பல்யானைச்செல்கெழுகுட்டுவன் பெருமைகளைப் பாராட்ட, பெரும்புலவர் பாலைக்கௌதமனார் பாடிய பாடல்களே, பதிற்றுப்பத்து, மூன்றாம்பத்தின், பாக்கள் பத்தும். அப்பாக்கள், பல்யானைச்செல்கெழுகுட்டுவனின் வரலாற்றினை விளங்க உரைப்பதோடு, பூழியர், கொங்கர்போலும் பண்டைத் தமிழ்குடிகளின் இயல்புகளையும், அயிரை போலும் அழகிய மலைகளின் மாண்புகளையும், அகப்பா போலும் அக்கால அரண்களின் அமைப்பு முறைகளையும் இனிது எடுத்து இயம்புகின்றன.

மணமாகா இளமகளிர், மனையகத்தே வறிதேகிடந்து வம்பு மொழி பேசி வாழ்நாட்களை வீணாட்கள் ஆக்கிவிடாது, பொழுது புலர்ந்ததும், நிறையமலர்ந்து மணக்கும் குவளைமலர்களையும், அன்றலர்ந்த ஆம்பல் மலர்களையும், இடையிடைவைத்து அழகுறத்தொடுத்த தழையாடை உடுத்து, அடர்ந்துநீண்ட தம்கூந்தலைச் சுருள்சுருளாக ஒப்பனை செய்து, மலர்க்கண்ணிகளை மாண்புறச்சூடி, நெற்கதிர் முற்றித் தலைசாய்ந்து கிடக்கும் வயல்களுக்கு ஓடி, ஆங்குப், பாணர் முதலாம் இசைவாணர்க்கு இனியஉறையுளாம் மணல்மேட்டில் வானுற வளர்ந்து நிற்கும் மருதமரத்துக் கிளைகளில் ஏறி அமர்ந்து, வயல்களில் வந்துபடியும் புள்ளினங்களை ஓட்டும் கருத்தினராய்க் குரல் எடுத்துக் கூவும், தம் குரலினிமைக்கு மகிழ்ந்து, அணித்தாக உள்ள மலர்ச்சோலை மயில்கள், தம்தோகை விரித்து ஆடக்கண்டு அகம்மிக மகிழ்வர்.

வயல்களுக்குவளம் குறையாமை வேண்டி, வானம் வழங்கிய காலத்தில் தண்ணீரைத் தேக்கிவைத்திடும் பெரிய

நீர் நிலைகளின் மதகுகளிடையே, செறித்து வைத்திருக்கும் கதவுகளின், ஊடே நீர்கசிந்து வரும் கசிகால்களில் நெய்தல் மலர்கள் நிரைநிரையாக மலர்ந்து கிடக்கும், நீர்வளம்மிக்க நஞ்செய் நாட்டு ஆடவர்கள், தாம் ஓட்டிச்செல்லும் வண்டி-களின் வலிமைமிக்க உருளைகள், சேற்றில் சட்டெனா இறங்கி அழுந்திவிடக் கண்டதும், வண்டிகளை ஈர்த்துச் செல்லும் தம் நல்லெருதுகள், அவ்வாழ்ச்சியைத் தம்முயற்சியால் போக்கு-வான்வேண்டி, மண்டியிட்டு ஈர்ப்ப, அவற்றிற்கு ஊக்கமும் உரமும் ஊட்டுவான்வேண்டி, உரத்துக் குரலெடுத்து உறுதுணைபுரிவர்.

பண்டைக்காலப் பாவையர்பாலும், அக்கால ஆடவர் பாலும் அமைந்து கிடந்த இப்பெரும்பெரும் பண்புகளைப் பாராட்டும் முகத்தான், பண்டைத் தமிழகத்தின் பண்பு-நலத்தைப் பாரோர்அறியப் பண்ணியபெருமை அப்புலவர் பெருமக்களுக்கே உரித்து,

''தொடர்ந்த குவளைத் தூநெறி அடைச்சி
அலர்ந்த ஆம்பல் அகமடி வையர்
கரியல் அம்சென்னிப் பூஞ்செய் கண்ணி
அரியல் ஆர்கையர் இனிது கூடு இயவர்
துறைநணி மருதம் ஏறித் தெறுமார்
எல்வளை மகளிர் தெள்விளி இசைப்பின்
பழனக் காவில் பசுமயில் ஆலும்''.

—பதிற்றுப்பத்து : 27 : 2-8

''பொய்கை வாயில் புனல்பொரு புதவின்
நெய்தல் மரபின் நிரைகட் செறுவின்
வல்வாய் உருளி கதும் என மண்ட

அள்ளல் பட்டுத் துள்ளுபு துரப்ப
நல்லெருது முயலும் அளறுபோகு விழுமத்து
சாகாட்டாளர் கம்பலை''

—பதிற்றுப்பத்து :27 : 9-14.

உலகில் எண்ணற்ற நாடுகள் உள்ளன என்றாலும், அவை ஒவ்வொன்றும், காடு, மலை, கடல், வயல் என்ற நில வகையுள் ஒவ்வொன்றையே உடையவாக இருக்கும்; இந் நால்வேறு நிலவகைகளையும் ஒருசேரப் பெற்ற நாடு, அவற்றுள் ஒன்றுகூட இராது. ஆனால் தமிழகம், அந்நில வகை அனைத்தையும், தன்னகத்தேகொண்ட தன்னேரில்லாத் தனிப்புகழ் உடையதாகும். நிலம் இயல்பாகவே நான்கு வகையுடையதாகவே, அந்நிலங்களில் வாழும் மக்களின் வாழ்க்கை முறைகளும், தொழில் முறைகளும் அதற்கேற்ப வேறுபட்ட இயல்புடையவாயின; தமிழகத்தின் இவ்வியற்கை அமைப்பு முறையினை ஒரேபாட்டில் வைத்துக் காட்டும் பெருமையும், பதிற்றுப்பத்திற்கே உரித்து.

கடலும், கடல் சார்ந்த நிலமும் ஆகிய, நெய்தல் நிலத்தில், புலிநகக் கொன்றை மரங்களின் மலர்கள் உதிர்ந்து படிந்து கிடக்கும் மணல்மேடு, ஒருபால் காட்சி அளிக்கும்; அத்தகு மணல்மேடுகள் நாற்புறக்கரைகளாக, நடுவே உள்ள உப்பு நீர்க்கழியில், பச்சைப்பசேலென்ற இலைகள்நிறைந்த நெய்தல் கொடிகள் படர்ந்துதோன்றும் காட்சி, நீலமணியாற் பண்ணிய பெரியகலம் போலத் தோன்றும்; அக்கழிகளில் உள்ள மீனைக் கவர்ந்துண்ணும் நீர்ப்பறவைகள், கானற் சோலையிடத்துப், புன்னைமரங்களில் சென்றுஉறங்கும், காணக் களிப்பூட்டும் அக்கானற்சோலை மணல்மேடுகளில் வீற்றிருக்கும் மக்களின் காதுகளில், அடும்பங்கொடியீர்க்கும் கடல் அலைகள் கொண்டுவந்து கரைசேர்த்த, சங்குப்பூச்சிகள் எழுப்பும்

பேரொலி சென்றுபுக, ஆங்குப்புகும் அவர்கள், ஆங்கே சிதறிக்கிடக்கும் முத்துச்சிப்பிகளையும், பவளக்கொடிகளையும் வாரிச்சென்று பயன்கொள்வர் என, அது உரைக்கும் நெய்தல் நிலநலம், நினைந்து நினைந்து மகிழ்தற்கு உரித்து.

"இணர்ததை ஞாழல் கரைகெழு பெருந்துறை
மணிக்கலத்தன்ன மாயிதழ் நெய்தல்
பாசடைப் பனிக்கழி துழைஇப் புன்னை
வால் இணர்ப் படுகினைக் குருகு இறைகொள்ளும்
தாழ் அடும்பு மலைந்த புணரி, வளைஞரல
இலங்குநீர் முந்தமொடு வார்துகிர் எடுக்கும்
தண் கடல் படப்பை".

—பதிற்றுப்பத்து: 30: 1-8

காட்டு நாட்டு வாழ்வினர் வேட்டுவர்; அவர்கள் எக்காலமும் காந்தள்மலர்க் கண்ணிசூடி, கையில் வில்லேந்தியே திரிவர். தம் வேட்டையில் பட்ட விலங்குகளே தம் வாழ்வுச்செல்வமாம் ஆதலின், வேட்டுவர் காட்டுப் பசுவைக் கொன்று, அதன் இறைச்சியையும், வலிமைமிக்க வேழங்களை,வீழ்த்தி, அதன் வெண்கோடுகளையும் விலையாகக்கொடுத்துத், தமக்குவேண்டும் மதுமுதலாம் பொருள்களைப்பெற்று மகிழ்வர் என மலைக்காட்டு நாட்டின் மாண்பினையும் உணர்த்துகிறது அப்பத்து.

"காந்தளங் கண்ணிக் கொலைவில் வேட்டுவன்
செங்கோட்டு ஆமான் ஊனொடு, காட்ட
மதன் உடை வேழத்து வெண்கோடு கொண்டு
பொன்னுடை நியமத்துப் பிழிநொடை கொடுக்கும்
குன்றுதலை மணந்த புன்புலம்".

—பதிற்றுப்பத்து: 30: 9-13

பேராறுகளின் பாய்ச்சலால் பயன்கொள்வது, வயல்கள் மலிந்த மருதநிலம். தேன்சொட்டும் மலர்நிறைந்த மருத மரங்கள் வேரொடு காய்ந்துபோமாறு விரைந்துபாயும் பெரு-வெள்ளத்திற்கு அணையாகத், தாம் பண்டுஅமைத்த வைக்கோல்புரிசெறித்துச் செய்த மணற்கரிசைகள், வெண்ணுரைபரக்க வரும் செம்புனலால் அலைப்புண்டு அழிந்து போகவே, ஊரெலாம் திரண்டு ஓவெனும் ஆரவாரம்எழ அணைகட்டி ஆக்கம் காணும் ஆர்வம் மிக்கவர் வாழ்வதால், ஆங்குக், கரும்பு முதலாம் நன்செய் பொருள்கள் காலமல்லாக்-காலத்தும் விளைத்து பயன்விளைக்கும்; அவ்வாறு உழைத்து உறுபயன்கண்ட அம்மருதநிலத்து மக்கள், வகைவகையான விழாக்கள் பல கண்டு கழிபெரும் களிப்பில் ஆழ்ந்து போவார். அத்தகு அழகையும் அச்செய்யுள் அகத்தே கண்டு நாம் மகிழலாம்.

> ''காலம் அன்றியும் கரும்பு அறுத்து ஒழியாது
> அரிகால் அவித்துப் பலபூ விழவின்,
> தேம்பாய் மருதம் முதல்படக் கொன்று
> வெண்தலைச் செம்புனல் பரந்து வாய்மிகுக்கும்
> பலசூழ்பதப்பர் பரிய வெள்ளத்துச்
> சிறைகொள் பூசலில் புகன்ற ஆயம்
> முழவு இமிழ் மூதூர் விழவுக் காணூஉப் பெயரும்
> செழும்பல் வைப்பின் பழனப்பால்''.

—பதிற்றுப்பத்து : 30: 14-21

தினை முதலாம் புல்லுணவே விளையும் புன்மையுடைய குறுங்காட்டு நாடாம் முல்லை நிலம் என்றாலும், ஆங்கு வாழ்வார் அயராமுயற்சியும், அயரா அன்பும் உடைய-ராவர். கொல்லைகளை உழுது, தினைவிளைத்தும், வரகு வைக்கோல் வேய்ந்த குடிசைகளில் வாழ்ந்தும், வளங்

குன்றினார்போல் தோன்றினும், தம் வாழிடம் நோக்கி வந்தார்க்குத், தம்பால் உள்ள தினைஉணவை ஒருநாளிற்கு ஒருவராக, வரிசைவரிசையாக வழங்கி, வைத்துப்பேணும் பெருவாழ்வுடையவராவர். இவ்வனப்புமிகும் அவ்வாழ்வுக் காட்சியை, வரைந்துகாட்டும் பெருமையும், அப்பத்திற்கே உரித்தாம்.

''ஏனல் உழவர் வரகுமீது இட்ட
கான்மிகு குளவிய வன்புசேர் இருக்கை
மென்தினை நுவணை முறை முறை பகுக்கும்
புன்புலம் தழீஇய புறவணி வைப்பு''

—பதிற்றுப்பத்து, 30: 22-25

இவைபோலும் பாநலம் பலவும் பயிலப்பெற்றது பதிற்றுப்பத்தின் இம்மூன்றும் பத்து. அப்பாக்கள் ஒவ்வொன்றையும் தனித்தனியே பார்த்து, அப்பாநலம் அனைத்தையும் அறிந்து, ஆரா இன்பம் அடைவோமாக.

# பதிகம்

''இமைய வரம்பன் தம்பி, அமைவர
உம்பற்காட்டைத் தன்கோல் நிறீஇ,
அகப்பா எறிந்து, பகல் தீ வேட்டு,
மதிஉறழ் மரபின் முதியரைத் தழீஇக்,
கண்ணகண் வைப்பின் மண்வகுத்து ஈத்துக்,
கருங்களிற்று யானைப் புணர்நிரை நீட்டி
இருகடல் நீரும் ஒருபகல் ஆடி,
அயிரை பரைஇ, ஆற்றல்சால் முன்பொடு
ஒடுங்கா நல்லிசை உயர்ந்த கேள்வி
நெடும்பாரதாயனர் முந்துறக் காடுபோந்த
பால்யானைச் செல்கெழுகுட்டுவனைப்

பாலைக்கௌதமனர் பாடினர் பத்துப்பாட்டு. அவைதாம், அடுநெய் ஆவுதி, கயிறுகுறு முகவை, தைைந்த காஞ்சி, சீர்சால் வெள்ளி, கான் உணங்கு கடுநெறி, காடுறுகடு நெறி தொடர்ந்த குவளை, உருத்துவருமலிர்நிறை, வெண்கை மகளிர், புகன்ற ஆயம், இவை பாட்டின் பதிகம்.

பாடிக்பெற்ற பரிசில், 'நீர் வேண்டியது கொண்மின்' என, 'யானும் என் பார்ப்பனியும் சுவர்க்கம் புகல் வேண்டும், என பார்ப்பாரிற் பெரியோரைக் கேட்டு, ஒன்பது பெருவேள்வி வேட்பிக்க, பத்தாம் பெருவேள்வியில் பர்ர்ப்பானையும் பார்ப்பினியையும் காணுராயினர்.

இமயவரம்பன் தம்பி, பல்யானைச் செல்கெழுகுட்டுவன் இருபத்தை யாண்டு வீற்றிருந்தான்.

# 1. அடுநெய் ஆவுதி

பல்யானைச் செல்கெழுகுட்டுவன் பெருமையறிந்து பாராட்டும் கழிபெரும் காதலோடு சேரநாடு சென்ற புலவர் பாலைக் கௌதமனார், சேரநாட்டு எல்லையை அணுகுவதற்கு முன்னரே, அந்நாட்டகத்தே எழுந்து, வானவீதியில் படர்ந்து-திரியும் புகைமண்டிலம், அவரை வருகவருக என வரவேற்றது. பல்யானைச் செல்கெழுகுட்டுவன், ஆற்றலும் ஆண்மையும் அமைவரப் பெற்ற பெரியவீரன் என்பதை அறிந்திருந்-தவராதலின், இப்புகை, அவன்பகைவர், அவனைவென்று அவன்நாட்டில் எரியூட்ட எழுந்ததாதல் இயலாது என்பதை அறிவார் என்றாலும், இப்புகைக்காரணம் யாது என்பதை அறியமாட்டாமையால், அது அறிந்து கொள்ளும் ஆர்வ மிகுதியால், அவர் கால்கள் தாமாகவே விரைந்து அடியிட்டன.

சேரநாட்டின் எல்லைக்கண், அந்நாட்டிற்கு உரிமையுடையதான காட்டுநாட்டில் நுழைந்தார் புலவர். ஆங்குக், கொன்று உயிர்வாழும் கொடு விலங்குகள் வாழ்வதற்கு மாறாக, வேள்வி செய்து வையகத்தை வாழ்விக்கும் செந்-தண்மை பூண்ட அந்தணர் பெருமக்களே வாழ்வதைக் கண்டார், ''அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய் நின்றது மன்னவன் கோல்'' என்பது வள்ளுவர் வகுத்த வழி. அரசனின் அறவழி ஆட்சிக்கு அளவுகோலாய் அமைவன இரண்டனுள், தலையாயதும் முதலாயதுமாகிய அந்தணர் ஒழுக்கத்திற்கு உறைவிடமாய் விளங்கும், அக்காட்டுநாட்டின் நலம்கண்டே, பல்யானைச் செல்கெழுகுட்டுவனின் செங்கோற்-சிறப்பினை உணர்ந்துகொண்ட புலவர், அக்காடுறையும்

அந்தணப்பெருமக்களையும், அவர்தம் வாழ்முறைகளையும் உற்றுநோக்கினார். சொல்லிலக்கணம், பொருளிலக்கணம், சோதிடம், வேதம், ஆகமம் ஆகிய ஐம்பெரும் நூல்களை ஐயந்திரிபு அறக்கற்றுத் தெளிந்த அறிவுடையவர். அவ்வுணர்வுடைமையால் உண்மைத்தவமாவது, உற்றநோய் பொறுத்தலும், உயிர்க்கு ஊறுசெய்யாமையும் அல்லது தவவொழுக்கமெனத் தனியே வேறு இல்லை என உணர்ந்து, பிற உயிர்க்கு, அவை எத்துணைக் கொடுமையுடையவேனும், சிறுதீங்கும் சிந்தையிலும் எண்ணிஅறியா ஒழுக்கநெறியுடைமையால், உலகத்து உயிர்களெல்லாம் இருகை கூப்பித்தொழும் பெருநிலை வாய்க்கப் பெற்றவர். காலைப் போதில் தோன்றிக் கனையிருள் போக்கும் ஞாயிறு, கடமையில் தவறுக் கவின்உடைமையால், அனைத்துலகத்தவராலும் போற்றி வணங்கப் பெறும் வான்புகழ் அடைதல்போல், வாய்மை வழுவா விழுமிய அறம்உடைமையால் உயர்ந்த புகழ் உடையவர். இத்தகு பெரும்பண்புகளின் நிலைக்களமாய்க் காட்சி அளிப்பதால், அவரைக் காண்பவர் எவரும், அச்சம் கலந்த அன்புடையராய் அடங்கி பணிந்து செல்வரர்யினர். இவ்வியல்பெலாம்கொண்ட உயர்பெரும் உரவோராகிய அவர்கள், முக்த்தீவேட்க, அவர் எடுத்த அத்தீ, அவர் விரும்பியவாறே ஓங்கி எழுவதைக் காணக்காண, அவர் உள்ளம் இனமறியா ஓர் இன்ப வெள்ளத்தில் ஆழ, அவ்வுணர்ச்சி வயப்பட்ட அவர் உடலும், அவ்வுள்ளுணர்விற்கேற்ற மெய்ப்பாடுடையதாகித் தன்னை மறக்கும் என்பதையும், தவவொழுக்கம் மேற்கொண்ட அத்தக்கோர் மூட்டிய வேள்வித்தீயிலிருந்து எழும் வெண்புகையே, தாம் எல்லைக்கண் கண்ணுற்றது என்பதையும் அறிந்து அளவிலா மகிழ்ச்சி அடைந்தார்.

சேரநாட்டின் காட்டகத்தே கடவுளனைய முனிவர்களின் வாழ்க்கை நலம் கண்டபோதே, புலவர் பாலைக்கௌதமனார்,

பல்யானைச்செல்கெழுகுட்டுவனின் கோல்நலத்தைக் கண்டு கொண்டார். அந்நலம் நினைந்து நெகிழும் நெஞ்சினராய் நாட்டுள் புகுந்த அவரை, ஆங்கெழுந்த பிறிதொருவகைப் புகைமண்டிலம், மேலும் வியப்பிற்குள் ஆழ்த்திவிட்டது. தம் நாடு புகுந்து தம்வீடு நோக்கி வரும் விருந்தினர், தம்மூரில் இருக்கும் வரையும், தம்மனையிலேயே இருந்து உண்பது மட்டும் போதாது; அவர்கள் தம்மனை உணவை வெறுத்தோ அல்லது அளிக்கும் உணவு போதாமையாலோ வேறிடம் செல்லும் விழைவே அவர் உள்ளத்தில் எழுதல் கூடாது. அவர்க்கு அளிக்கும் உணவுவகைகள், அனைத்துமே நல்லன வாதல் வேண்டும். அதில் ஒன்றைக் கழித்துவிட்டு, ஒன்றை உண்ணும் வகையில், ஒன்று சுவையுடையதாக, ஒன்று சுவையற்றதாதல் கூடாது. அறுசுவையுள் ஒரு சுவையும் குறைபடல் கூடாது என்று எண்ணிஎண்ணி விருந்தளிக்கும் விழுமிய, விரிந்த உள்ளம் வாய்க்கப் பெற்றவராவர் அந் நாட்டுப் பெருமக்கள். அத்தகைய விரிந்த பேருள்ளம் உடைமையால், அவர்கள், ஊனம் எனும் பெயர்பூண்ட இறைச்சிவெட்டும் மனைமீது வைத்து, ஆட்டு வணிகர் நன்குக் கொத்திக்கொடுத்த, வெண்கொழுப்பு மலிந்த கொழுத்த கறியை வேகவைத்துத் தாளிதம் செய்ய, வாணளியில் உருக்கிய நெய்யை வார்க்குந்தோறும், கடலொலிபோல் ஒலி எழ, அவ்வகநகர் மனைதொறும் எழும் புகைத்திரள், காட்டில் எழுந்த வேள்வித்தீயின் புகையொடு கலந்து வானத்தில் படரும் காட்சியைக் கண்டு களித்தார் புலவர். காட்டில் வேள்வித்தீ எழும்பிய புகை, நாட்டின் நல்லோர் வாழ்க்கையையும், அவர் துணையால் நடைபெறும் நல்லாட்சி யையும்காட்டிற்றாக, நாட்டில் அட்டிற்சாலைக்கண் எழும்புகை, மக்களின் விருந்தோம்பும் மாண்புடைமையினையும் அதற்கு வழி செய்யும் வற்றா வளப்பெருக்கையும் எடுத்துக் காட்டுவவாயின.

இவ்வாறு அவ்விருவகைப்புகை எழுப்பும் இருவேறு நறுமணங்களையும் நுகர்ந்தவாறே அரசன் பெருங்கோயிலை நோக்கி நடந்த புலவர், அப்பேரூர் வீதிகளில் கொட்டி வைத்திருக்கும் வகைவகையான பொருள் வளங்களைக் கண்ணுற்றார். வானத்தில் எழுந்து படரும் அப்புகை தரும் மணமே, வையகத்தார் அனைவரையும், ஏன், வானுலகத்-தவரையும்கூட வருகவருக என வரவேற்கத்தக்கனவாக, வீதிகளில் காணலாகும் அவ்வற்றாப் பெருவளங்களைக் காண நேர்ந்தால், வானவர், தங்கள் வானுலக வாழ்க்கையையும் வெறுத்து, அப்பெருநகர் வாழ்க்கையை விரும்பி வந்தடைவர். அத்துணை வளம்பெருக ஆளும் அந்நாட்டு மன்னனின் குன்றாப் பெரும்புகழை எண்ணி எண்ணி வியந்த-வாறே சென்ற புலவர், அரண்மனையை அணுக அணுக, வீரர்களும் விருந்தினர்களும் குறைவின்றிக் குடித்துமகிழும் வகையில், மது, மழைநீர்போல் மண்டிக்கிடக்கும் கள்ளுக் கடைகளும், அக்கடைகட்கு அணித்தாக, அடுத்தடுத்து அமைந்திருக்கும், யானைப்படை முதலாம் நாற்படை விடுதி களும், அப்படை வீடுகளை அடுத்து, அடித்தவழிக் கடுத்தஒலி எழுப்பும் போர் முரசுக்கட்டிலும், அதற்கு அணித்தாக, அரசவையை ஒட்டினாற்போல், பாடிபைந்தமிழ் வளர்க்கும் புலவர் பெருமக்கட்கும், பண் இசைத்து ஏழிசை வளர்க்கும் பாணர் முதலாம் ஏனைய, இரவலர்க்கும்,வரையாது வழங்குதற் பொருட்டுப், பகைவர் நாடுகளிலிருந்து பற்றிக் கொணர்ந்த பொன்னும் நவமணியும் போலும் பொருட் செல்வங்களைக் கொட்டிவைத்திருக்கும் அரசியற் பண்டாரமும் அமைந்து கிடக்க, அவற்றையெல்லாம் கண்டவாறே அரசவை புகுந்தார்.

அரசவை புகுந்த புலவர், ஆங்கு அரியணைக்கண் வீற்றிருக்கும் அரசனைக் கண்டார். அவன் மார்பு மண்-

மாசுற்றிருந்து. அதுகண்டு, ''என்னே! மன்னன் மார்பில் மண்படிந்திருப்பதா'' என்று எண்ணி ஏங்கினர். அந்நிலையில் அவர்க்கு அணித்தாக இருந்தவர்கள், அவர் ஏக்கம் அறிந்து ''பெருந்தகையீர்! அம்மண்ணுக்கும் ஒரு மாண்பு உளது. பகைவென்ற போர்க்களத்தில், மன்னன்நாற்படை பொருத-வழி எழுந்த புழுதிபடிந்து உண்டான மண்மாசு அது. ஆகவே, சேரநாட்டு வீரரின் சிறப்பிற்குச் சான்று பகர்ந்து திகழும் அம்மண்மாசைப்போக்க, மன்னனுக்கு மனம் இல்லை'' என்று கூறக் கேட்டு, பல்யானைச் செல்கெழுகுட்டுவன் பேராற்றல் அறிந்து பெருமிதம் உற்றூர்.

மன்னனைக் கண்டு, அவன் மாண்புணர்ந்து மகிழ்ந்த புலவர், அரசவைக்கண் மற்றும் யார்யார் அமர்ந்துள்ளனர் என்பதை அறியும் அவாவுடையராய் அரசவையை ஒருமுறை உற்று நோக்கினர். முல்லைக்கண்ணி பூண்ட பூழியரும் வெட்சி முதலாம் போர்ப்பூக்கள் பலவும் கலந்து கட்டிய கண்ணிசூடிய மழவர்குல மறவர்களும் ஆங்கு அமர்ந்-திருந்தனர். பூழியர் என்பார், செந்தமிழ் நிலம்சேர் பன்னிரு நிலங்களுள் ஒன்றுன பூழிநாட்டை, செருப்பு என்ற மலையரணை அரசிருக்கையாகக் கொண்டு ஆள்பவர். போர் ஒழிந்த காலங் களில் ஆனிரை ஒம்புவதும், மலையும் காடும் மண்டிய கடறு-களில், அரவுமிழ்ந்து விட்டுப்போன மாணிக்க மணிகளைத் திரட்டுவதுமாகிய தொழில் மேற்கொள்பவர். காவிரி யாற்றிற்கு வடக்கே, கோனாட்டின் தலைநகராம் உறையூர்க்கு மேற்கே, மழநாடு, மழகொங்கம் எனும் பெயர்களோடு விளங்கிய, ஒருசிறு நிலப்பகுதியை ஆள்பவர் மழவர். சிறந்த குதிரைவீரர், நிரை கவர்தல், நிர மீட்டல், மண்கவர்தல், மண் காத்தல், அரண் முற்றுதல், அரண் மீட்டல் ஆகிய அனைத்துப்போரிலும் வெற்றியே பெறவல்ல வீறுடைமை விளங்க, அப்பல்வேறு போர்களுக்கும் உரிய, வெட்சி முதலாம்

போர்ப்பூக்கள் அனைத்தையும் ஒருசேரத்தொடுக்கும் கண்ணி சூடிக் களிக்கும் இயல்புடையார் என்ற வரலாற்றுண்மைகளைப் பண்டே அறிந்திருந்த புலவர், அவர்களையெல்லாம் வென்று அடக்கி, அடிபணியப்பண்ணி விட்டான், பல்யானை செல்கெழு குட்டுவன் என்பதறிந்து, அவன் வீரத்தை எண்ணி வியந்து நிற்கும் நிலையில், ஆங்கிருந்த ஒரு வீரன், "புலவரே! அது மட்டுமன்று; நீவிர் அயிரை என்ற பெயரைக் கேட்டுளீரோ? அயிரை என்றதும், வெள்ளத்தை எதிர்த்து ஏறும் இயல்-புடையதும், சேய்மைக்கண் இருந்தவழியும் கண்டுகொண்டு, கொத்திச் செல்லவல்ல கொக்கின் குத்துக்கு, அஞ்சுவதுமாகிய அயிரைமீன் என்று எண்ணிவிடாதீர்கள்; பல்வேறு பயன்களை யும் தரவல்ல நெடியமுடிகளைக் கொண்ட, அயிரை எனும் பெயர் பூண்டதொருமலையுண்டே அறிவிரோ? அம்மலை உரிமையும் எம்மன்னனதே!" என்று கூறினன். அது கேட்டு அவன் ஆட்சிப்பரப்பும் பெருமையும் அறிந்து, இறும்பூது கொண்டவாறே அரசனை நோக்கிய புலவர், அவ்வரசனோடு அரியணையில் அமர்ந்திருக்கும் அரசமாதேவியைக் கண்ணுற்றார்.

கணவன் போர் முதலாம் கடமை மேற்கொண்டு சென்ற காலை, கணவன் இல்லாதபோது தண்ணீரில் மூழ்கி, கோலம் கொள்ளுதல் கூடாது என்ற உணர்வால், மண்ணுத போதும் நறுமணமே நாறும் நல்லியல்புடையதும், கற்பு நெறிகாட்ட கார்காலத்துமலரும் முல்லை மணம் மணக்கும் மாண்புடையதுமான, கருத்து நீண்ட கூந்தலும், தனக்கு இயல்புடைய இடமான குளத்தில் படர்ந்திருக்கும் கொடியில் இருந்து, அறுபட்டுவந்து ஈண்டுஅடைந்து, இரவில் கூம்பும் தன்இயல்பிற்குமாருக, இரவிலும் மலர்ந்தே கிடக்கும் மாண்புடையதாகிய தாமரை மலரோ என்று எண்ணி, மருடத்-தக்க மலர்ந்த முகம், அம்முகத்தில் ஒளிவீசும் அருள் ததும்பும்

இருகருவிழிகள், காந்தட்கொடிகள் மலர்ந்து கிடக்கும் கானுற்றங்கரைகளில் வனப்புற வளர்ந்து நிற்கும், மூங்கிலே போலும் பருத்த தோள்கள் ஆகிய உருவ நலங்களோடு, அழகின் திருவுருவாய், மங்கலமங்கையாய் வீற்றிருக்கும் அவளைக் கண்டு, மன்னவன் மனையறமும், அவன் அரசியல் நலமேபோல், மாண்புடைத்தாதல் கண்டு மட்டிலா மகிழ்ச்சி கொண்டார்.

''மன்னவன் மனையறம், மங்காது பொங்குக'' என வாழ்த்த விரும்பிற்று அவர் உள்ளம். மன்னனுக்கு அப்பெருவாழ்வு வாய்க்கவேண்டுமேல், அது, அவன் நாட்டில் மழைவளம் குறையாது, மக்கள், பசியும் பிணியும், பகையும் அற்ற வழியே உண்டாகும் என்பதை உணர்ந் திருந்தமையால், அவர் வாய், ''அவன் நாட்டில், மழை பொய்யாப் பெருவளமும், பசி அறியாப் பெருவாழ்வும் ஊழி ஊழிகாலம் உண்டாகும் வகையில், மன்னவன், மாதேவியோடு வாழ்க பல்லூழி'' என வாழ்த்திற்று,

விருந்தும் ஒரு வேள்வியே என்பர் வள்ளுவப்பெருந்-தகையார்; ''இனைத்துணைத்து என்பதொன்றில்லை; விருந்தின் துணைத்துணை வேள்விப்பயன்'' என்பது காண்க. பொய்யில் புலவன் கூறிய அப்பொருளுரையைப், பொன்னே போல் போற்றும்வகையில், விருந்தினர்க்குப் படைக்கப்படும் உணவில், வேள்வித்தீயில் கொட்டுவதுபோல் பெருகக் கொட்டும் நெய்யை, '' அடு நெய் ஆவுதி '' என்று பெயரிட்டு அழைத்த பெருமையால், இப்பாட்டிற்கும் அதுவே பெயராய் அமைந்துவிட்டது.

21. ''சொல்பெயர் நாட்டம் கேள்வி நெஞ்சம் என்று
ஐந்துடன் போற்றி, அவை துணையாக,

எவ்வம் சூழ்ந்து விளங்கிய கொள்கைக்,
காலை அன்ன சீர்சால் வாய்மொழி,
உருகெழுமரபின் கடவுள் பேணியர்
கொண்ட தீயின் சுடர் எழுதோறும்
விரும்பு மெய்பரந்த பெரும்பெயர் ஆவுதி
வருநர் வரையார் வார வேண்டி,
விருந்து கண்மாறுது உணீஇய, பாசவர்
ஊனத்து அழித்த வால்நிணக் கொழுங்குறை
குய்இடுதோறும் ஆனது ஆர்ப்பக்
கடலொலி கொண்டு செழுநகர் நடுவண்
அடுமை எழுந்த அடுநெய் ஆவுதி
இரண்டுடன் கமழும் நாற்றமொடு, வானத்து
நிலைபெறு கடவுளும் விழைதகப் பேணி
ஆர்வளம் பழுநிய ஐயம்தீர் சிறப்பின்,
மாரிஅம் கள்ளின், போர்வல் யானைப்
போர்ப்புறு முரசம் கறங்க, ஆர்ப்புச் சிறந்து
நன்கலம் தருஉம் மண்படு மார்ப!
முல்லைக்கண்ணிப் பல்லான் கோவலர்
புல்லுடை வியன்புலம் பல்லா பரப்பிக்
கல்உயர் கடத்திடைக் கதிர்மணி பெறூஉம்
மிதிஅல் செருப்பின் பூழியர் கோவே!
குவியல் கண்ணி மழவர் மெய்ம்மறை!
பல்பயம் தழீஇய பயங்கெழு நெடுங்கோட்டு
நீர்அறல் மருங்கு வழிப்படாப் பாகுடிப்
பார்வல் கொக்கின் பரிவேட்பு அஞ்சாச்
சீருடை தேஎத்த முனைகெட விலங்கிய
நேருயர் நெடுவரை அயிரைப் பொருந!
யாண்டு பிழைப்பு அறியாது பயமழை சுரந்து
நோய்இல் மாந்தர்க்கு ஊழியாக,
மண்ணுவாயில் மணம் கமழ்கொண்டு

கார்மலர் கமழும் தாழ் இரும் கூந்தல்
ஒரீஇயன போல இரவு மலர்நின்று
திருமுகத்து அலமரும் பெருமதர் மழைக்கண்
அலங்கிய காந்தள் இலங்குநீர் அழுவத்து
வேய்உறழ் பணைத்தோள் இவளோடு
ஆயிரவெள்ளம் வாழிய பலவே!''

**துறை: செந்துறைப் பாடாண் பாட்டு**
**வண்ணம்: ஒழுகு வண்ணம்**
**தூக்கு: செந்தூக்கு**
**பெயர்: அடுநெய் ஆவுதி**

சிறப்பினையும் (1-16) கள்ளினையும், யானையினையும் உடைய மண்படுமார்ப! (17-19) பூழியர் கோவே! மழவர் மெய்ம்மறை! அயிரைப் பொருந! வாழிய பலவே (20-38) என வினை முடிவு கொள்க.

சொல் = சொல்லிலக்கணம்; பெயர் = பொருள் இலக்கணம். நாட்டம் = சோதிடம், கேள்வி = வேதம், நெஞ்சம் = ஆகமம். என்ற ஐந்து உடன்போற்றி = என்ற ஐந்து நூல்களையும் ஒரு சேரக்கற்று. அவை துணையாக = அவை கற்றதனால் உண்டான அறிவு துணையாகப் பெற்ற. எவ்வம் சூழாது விளங்கிய கொள்கை = பிற உயிர்களுக்குத் துன்பம் தர நினையாத சிறந்த கொள்கையுடைமையாலும். காலை அன்ன சீர்சால் வாய்மொழி = ஞாயிறு போலத் தப்பாத வாய்மையே வழங்கும் சிறப்பாலும். உருகெழு மரபின் = கண்டார் அஞ்சி அடிபணியத்தக்க இயல்பினை உடையவராகிய. முனிவர்கள் பேணியர் = தாம் வழிபடு கடவுளரைப் பரவுதற்காக, கொண்ட தீயின் சுடர் எழுதோறும் = எடுத்த வேள்வித்தீயின் சுடர் ஓங்கி உயருத்தோறும்.

விரும்பு மெய்பரந்த = அவர் உள்ளத்தின் வேட்கை மிக்கு அவர் உடலிலும் வெளிபட்டுத் தோன்றுவதற்குக் காரணமாகும். பெரும் பெயர் ஆவுதி = பெறற்கரும் பெரும் பயன்தரவல்ல வேள்விப்புகையும். வருநர் = தம் மனை-நோக்கி வரும் புதியோர். வரையார் வாரவேண்டி = வரம்-பின்றி உண்ண வேண்டியும். விருந்து = விருந்தினர். கண்மாறுது = தம்இடம் விட்டு வேறிடம் சென்றுவிடாது. உணீஇய = ஈண்டே இருந்து உண்ண வேண்டியும் விரும்பி, பாசவர் ஊனத்து அழித்த வால் நினக் கொழுங்குறை = ஆட்டுவணிகர் கறிகொத்து மனையில் இட்டுக் கொத்திக் கொடுத்த வெண்ணிறக் ; கொழுப்பு படிந்த இறைச்சியை. குய்இடுதோறும் = கொதிக்கும் நெய்யில இட்டுத் தாளிதம் செய்யுந்தோறும், கடல் ஒலி கொண்டு = கடல் ஒலிபோல். ஆனது ஆர்ப்ப = ஓயாது ஒலிக்குமாறு. கெழுநகர் நடுவண் = வளம் கொழிக்கும் பேரூர் நடுவில். அடும்மை எழுந்து அடுநெய் ஆவுதி = அடுதலால் எழும் கரும்புகையோடு எழுந்த. அடிசிற்கண் பெய்யப்படும் சுடுநெய் எழுப்பும் புகையும். இரண்டுடன் கமழும் நாற்றமொடு = என்ற இரு-வகைப் புகையும் தரும் நறுமணத்தால். வானத்து நிலைபெறு கடவுளும் = வானுலகில் நிலைபெற வாழ்வோராகிய கடவுளரும். பேணிவிழைதக = பேணிவிரும்புமாறு. ஆர்வளம் பழுநிய = குறையாவளம் நிறைந்த. ஐயம் தீர் சிறப்பின் = உண்மையான சிறப்பினையும். மாரி அம் கள்ளின் = மழை நீர் போல் வார்க்கப்படும் மதுவினையும். போல்வல்யானை = போரில் வல்ல யானையினையும். போர்ப்புறு முரசம் கறங்க = ஆனேற்றுத்தோல் போர்த்த போர் முரசு முழங்க. ஆர்ப்புச் சிறந்து = போர் ஆரவாரம் மிகுத்து. நன்கலம் தருஉம் = பகைவர்தம் அரிய பெரிய நன்கலங்களைக் கைப்பற்றிக் கொண்டும். மண்படுமார்ப = போர்க்களப் புழுதியாம் மண் படிந்த மார்பினையும் உடையவனே! முல்லைக்கண்ணி பல்லான்

கோவலர் = முல்லைப் பூவாலான கண்ணியும், எண்ணித் தொலையா ஆனிரைகளும் உடையோராகிய ஆயர். புல்லுடை வியன்புலம் பல்லா பரப்பி = தம் ஆனிரை பலவற்றையும் புல் நிறைந்த மேட்டு நிலத்தில் மேயவிடுத்து. கல் உயர் கடத்திடை = மலைகள் மலிந்த மலைக்காட்டு வழியில். கதிர்-மணி பெறுஉம் = ஒளிகாலும் மாணிக்க மணிகளைப் பெறுதற்கு வாய்ப்பளிக்கும். மிதிஅல் செருப்பின் = கால் மிதியாகிய செருப்பு அல்லாத, செருப்பு எனும் பெயர் பூண்ட மலையிடை நாடாகிய. பூழியர் கோவே = பூழி நாட்ட-வரின் கோமகனே! குவியல்கண்ணி = பலவகைப் போர்ப் பூக்களும் ஒரு சேரத்தொடுத்த தலை மாலை அணிந்த. மழவர் மெய்ம்மறை = மழவர் என்ற மறக்குலத்தவரைக் கவசம் போன்று காக்கும் காவலனே! பல்பயம் தரீஇய = பல்வேறு பயன்களையும் தன்னகத்தே கொண்டதும். பயங்கெழு நெடுங்கோட்டு = மழைமேகம் தடுத்துப் பயன்படுதல் பொருந்திய நெடிய முடிகளை உடையதும். நீர் அறல் மருங்குவழிப்படா = நீர் ஓடும் போக்கிற்கு எதிர்த்து ஏறமாட்டாத. பாகுடிப் பார்வல் கொக்கின் பரிவேட்பு அஞ்சா = சேயமைக்கண் இருந்தும் கூர்ந்து நோக்கும் பார்வை பொருந்திய கொக்கின் குத்திற்கு அஞ்சா இயல்பு-டையதும். (அதாவது, அயிரை என்ற மீனைக் குறிக்காததது என்றவாறு) சீருடை தேஎத்த முனைகெட விளங்கிய = புகழ்மிக்க நாட்டின் எல்லைக்கண் அரணாக அமைந்து பகைவர், போர்முனை புகாவாறு தடுத்துப் போக்கும் புகழ் உடையது-மாகிய. நேர் உயர் நெடுவரை அயிரைப் பொருந = நிமிர்ந்து நிற்கும் நெடிது உயர்ந்த பக்க மலைகளைக் கொண்ட அயிரை மலைக்கு மன்னவனே! பயமழை யாண்டு பிழைப்பு அறியாது புரந்து = பயன் தரும் மழை யாண்டின் எப்பகுதியிலும் பொய்த்துப் போகாது பெய்வதால். நோய் இல் மாந்தர்க்கு ஊழியாக = பசியும், பிணியும் அற்ற மக்களுக்கு

ஊழ்ஊழி காலம் உண்டாகுமாறு. மண்ணுவாயில் மணங்கமிழ் கொண்டு = மண்ணாத போதும் நறுமணமே நாறி, கார்மலர் கமழும் = கார்காலத்தில் மலரும் இயல்புடையதான முல்லை மணமே மணக்கும். தாழ் இரும் கூந்தல் = நீண்ட கரிய கூந்தலும். ஒரீ இயன போல = தான்வளரும் பொய்கையை விட்டு வெளிப்பட்டு வந்தது போல். இரவு மலர் நின்று = இராக்காலத்தும் மலர்ந்தே கிடந்து காட்டு தாமரைபோலும். திருமுகத்து அலமரும் = அழகிய முகத்தில் சுழலும். பெருமதர் மழைக்கண் = அகன்ற பெரிய அருள் சுரக்கும் கண்களும். அலங்கிய காந்தள் = காற்றால் அலைப்புறும் காந்தள் மலர்கள். இலங்குநீர் அழுவத்து = மலர்ந்து விளங்கும் கானாற்றங்கரைக்கண் வளர்ந்திருக்கும் காரணத்தால், வேய்உறழ் பணைத்தோள் = மென்மையும், தன்மையும் வாய்ந்த மூங்கிலை நிகர்க்கும், பருத்த தோள்களும் உடையளாகிய. இவளோடு = உன் மனைவியோடு. பல ஆயிர வெள்ளம் வாழிய = பல்லாயிரம் வெள்ளம் ஆண்டுகள் வாழ்வாயாக.

வெள்ளம், ஆயிரம் கோடி என்பன போல் ஒரு பேரெண்ணைக் குறிப்பிடும், ஒரு சொல்; அதுபோல், ஆம்பல் என்பதும், அதுபோல் ஒரு பேரெண்ணைக் குறிக்கும்; மற்றொரு சொல். ''வெள்ள வரம்பின் ஊழி'' (ஐங்குறுநூறு: 281) ''ஆம்பல் ஆயிரவெள்ளி ஊழி வாழி'' (பதிற்றுப்பத்து : 63 19-21) என்ற வரிகளில் அச்சொல் ஆளப்பட்டிருப்பது காண்க.

## 2. கயிறுகுறு முகவை

பல்யானைச் செல்கெழுகுட்டுவனின் பெருமைகாணும் ஆர்வம் உந்த, அவன் உறையும் வஞ்சிமாநகர் வந்தடைந்த புலவர் பாலைக் கௌதமனார், அக்காலத்தே, தமிழகத்தில் அவனொத்த அரசர் பலர் வாழ்ந்திருக்கவும், அவர்களுக் கெல்லாம் இல்லாத பெரும்புகழ் அவனுக்கு வாய்த்திருப்பதற்காம் தலையாய காரணத்தைக் கண்டு கொண்டார். பல்யானைச்செல்கெழுகுட்டுவன் பிறந்தகுடி, பாராள்வதற்குரிய பண்பெலாம் நிறைந்த பழம்பெரும் குடியாகும். நல்லாட்சிக்கு அடித்தளமாம் நல்லியல்புகள் அனைத்தையும், அக்குடிவந்தார் ஒவ்வொருவரும் வழிவழியாகப் பேணிக் கொணர்ந்து, பல்யானைச்செல்கெழுகுட்டுவன்பால் தந்தே மறைந்துள்ளனர். அத்தொல்பெரும் செல்வங்கள் தொலைவின்றித் திரண்டிருந்தமையால், திறன்மிக்க நல்லாட்சி நடாத்தி தலைநிமிர்ந்து வாழ்கின்றான். விழுமிய ஆட்சியை விரும்புவார், விலக்க வேண்டுவனயாவை, விரும்பி ஏற்க வேண்டுவனயாவை என்ற தெளிந்த அறிவுடையனாய் விளங்கினான்.

அரசனுக்கு உறுதி பயக்கும் அறிவுரைகள் உரைத்து, உயர்விக்கும் துணைவர்களைத் துரத்திவிட்டு, அதனால் அவனையே யல்லாமல், அவனை அண்டி வாழ்பவரையும் அழிக்க வல்ல பேராற்றல் வாய்ந்தது சினம். அதனால், சேர்ந்தாரைக் சொல்லி எனப்பெயர் சூட்டி, அதைப் பழிப்பர் பெரியோர். ஆகவே, தன்னை எதிர்நோக்கி ஒரு பெரிய உலகமே வாழத் தக்க, பெரிய பொறுப்பு மிக்கோனாகிய அரசன், சினம் உடையனாதல் கூடாது.

கடமையில் கருத்தூன்றி நிற்பவர், காம உணர்வினராதல் கூடாது. கடமையும் காமமும், மாறுபட்ட இருவேறு இயல்புடையவாம். ஒன்று நிற்கும் இடத்தில் ஒன்று நிற்காது; நிற்கக் கூடாது. இரண்டையும் ஒருசேர மதித்து நடத்துவது இயலாது. ''காமம் விடு ஒன்றோ; நாண் விடு; நல்நெஞ்சே! யானோ பொறேன் இவ்விரண்டு'' என்ற வள்ளுவர் வாக்கையும் உணர்க. நாடுகாக்கும் கடமைமேற் கொண்ட அவன், மன்னவன் காமத்தில் ஆழ்ந்துபோன கருத்துடையனாகியவிடின், அவன் நாட்டில் நல்லாட்சி நடைபெறாது. அவனும் மன்னனாய் மாண்புறுதல் இயலாது. ''மனைவிழைவார் மாண் பயன் எய்தார்; வினை விழைவார் வேண்டாப் பொருளும் அது'' ஆகவே, கடமைநெறி நிற்கவேண்டிய காவலன், அறவே இயலாது என்றாலும், சிறிதே காமம் மறந்த காவலனாக வாழ்தல் இன்றியமையாதது.

சுற்றத்தாராகவும், உற்ற நண்பராகவும் தம்மோடு தொடர்பு கொண்டவர்களின், விழைவு வெறுப்புக்களையும் மதித்து நடந்துகொள்ள வேண்டுவது, ஒவ்வொருவர்க்கும் இன்றியமையாததே; கண்ணோட்டம் என்ற அப்பண்பு பொருந்தியிருப்பதினாலேயே, உலகியல் ஒழுங்காக நடைபெற்றுவருகிறது. ''கண்ணோட்டம் என்னும்கழிபெரும் காரிகை உண்மையால் உண்டு இவ்வுலகு'' என்றார் வள்ளுவர். ஆனால், அந்நெறியையே அரசியல் நெறியாகக் கொண்டுவிடின், அதுவே அரசழிவிற்கும் காரணமாகிவிடும்; ஆகவே, அதுவும், ஓர் அளவிற்குட்பட்டதாதலே நன்று. அரசியல் நெறிக்கு அழிவுரா வகையில் அதைக் கடைபிடித்தலே அரசர்க்கு அழகும் ஆக்கமுமாம். ''கருமம் சிதையாமல் கண்ணோட வல்லார்க்கு உரிமை உடைத்து இவ்வுலகு'' என வள்ளுவர் வகுக்கும் வரம்பினையும் நினைவு கூர்க. ஆகக், காவலன்மாட்டுக் கழிபெரும் கண்ணோட்டம் அமைத்துவிடுதல் குற்றமாம்.

வீரன் ஒருமுறையே இறப்பான்; கோழை நாழிகைக்கு நாழிகை இறப்பான் என்ருர் ஒரு பெரியார்; அரசன் ஒருவனுக்கு எத்துணைப்பெரிய கோட்டை, பாதுகாப் பளிப்பினும், அவன் உள்ளத்தில் அச்சம் குடிகொண்டு விடுமாயின், அக்கோட்டையால் பயன்பெருது, அழிந்தே போவன். "அச்சம் உடையார்க்கு அரண் இல்லை". "அஞ்சாமை அல்லாது துணை வேண்டா" எனபன, வள்ளுவர் கண்ட வழிமுறைகள். ஆகவே அஞ்சாமை, அரசனுக்குரிய பண்புகளுள் முதலிடம் பெறத்தக்க பெருஞ்சிறப்புடையதாகும். அஞ்சவேண்டிய பழிபாவம் கண்டும் அஞ்சாமை பேதைமை-யாவதைப் போலவே, அஞ்சத் தகாத பகைவர்புகுந்த களம் கண்டு அஞ்சுவதும், பேதைமையாம்.

வேந்தன் வாயிலிருந்து வெளிப்படும் ஒவ்வொரு சொல்லும், உலகத்தவரை வாழ்விக்கும் வான்சிறப்புடைய. அத்தகைய சொற்கள், பொய்யொடு கலந்து பொருளற்றன-வாகிவிடின், அவை உலகை உருக்குலைத்து விடுவதோடு, அவற்றை வழங்கிய வேந்தனையும் வீழ்த்திவிடும். ஆகவே, மறந்தும் பொய்வழங்கா மாண்புடையராதல், மன்னர்க்கு இன்றியமையததாம்.

அரசன் அன்பை ஆரப்பெற்ருருள் ஒருசிலர், "இந்-நாடாளும் வேந்தன் எம்பால் பெருவிருப்புடையவன்; அவனுல் நன்கு மதிக்கப் பெற்றவர் யாம்; ஆகவே யாம் எது செய்யினும் ஏற்றுக்கொள்வன்" என்று எண்ணி, ஆட்சிக்கு ஊறு விளைக்கும் அறமல்லாதனவற்றையும் ஒரேவழி செய்து விடுவர். அதனுல், அரசன் அன்புகாட்டும் நிலையிலும், ஓர் அளவிற்கு உட்பட்டே நிற்றல் வேண்டும். ஆக்கம் பெறுதற்காம் அரசியல் உண்மை-களுள் இதுவும் ஒன்ரும்.

கொலை புரிதல் போலும் குற்றம் புரிந்தார்க்குக், கொலையே தண்டமாகக் கொடுத்து நெறிகாப்பது, அரசர்க்கு அறமாம் என்றாலும், கொடிய தண்டங்கள் அளிப்பதையே, அரசர் அன்றாட வழக்கமாகக் கொண்டு விட்டால், அவர் அரசு வாழாது. ''கடுமொழியும் கைஇகந்த தண்டமும் வேந்தன் அடுமுரண் தேய்க்கும் அரம்''. ஆகவே தம் அரசவாழ்வு நின்று நிலைபெறுதலை வேண்டும் வேந்தர்கள், குற்றத்திற்கு ஏற்ற தண்டத்தைக் கூறுங்கால், கொடுமை கொள்பளிக்கக் கூறிச், செயல்படுத்துங்கால், கொடுமை குறைத்தே அளித்தல் வேண்டும். ''கடிது ஓச்சி மெல்ல எறிக; நெடிது ஆக்கம் நீங்காமை வேண்டுபவர்''. ஆகவே, கை இகந்த தண்டத்தைக், காவலர் கருத்துள்கொள்ளல் ஆகாது.

நாட்டில் நல்லரசு நடைபெற வொட்டாது, இடை நின்று தடுக்கும் கொடுமைகளாகிய கடுஞ்சினம், மிக்ககாமம், கழி கண்ணோட்டம், அச்சம், பொய், அன்புமிகவுடைமை, கையிகந்ததண்டம் ஆகியவற்றை, அறவே விலக்கித், தம் உள்ளத்திற்கும் எட்டாத தொலைவிடத்தே துரத்தி, நாடாண்டு நற்புகழ் பெற்றவர்கள், பல்யானைச் செல்கெழு குட்டுவனின் பண்டையோர். அம்மட்டோ! அல்லது கடிந்து ஆட்சிபுரிந்த அவர்கள் ஆட்சிக்கு, நல்லது புரிவனவற்றை, நாள்தோறும் பேணி மேற்கொண்டொழுகினர். அதனால் அவர் நாட்டு வயல்களேயல்லாமல், கடலும் காடுகளும் கணக்கின்றி வளம் நல்க வாழ்ந்தார்கள்; அதனால், நாடாண்ட அவர்களேயல்லா-மல், அவர் நாட்டில் வாழ்ந்த மக்களும், வற்றா வளம்பல பெற்றிருந்தமையால், வளம்வேண்டிப் பிறரைவருத்துவதோ, அவர் பொருள்பால் வேட்கைமிகுந்து கவரக்கருதுவதோ செய்திலர். இவ்வாறு அரசியல் முறையில், குறைசிறிதும் காணாப் பேரறிவுடையராகி, அவ்வறிவையும் செவ்விய நெறிக்கண் செயற்படுத்தும் திறமுமுடையராகி வாழ்ந்து

விளக்கம் பெற்ற அம்முன்னோர், மனையறத்துறையிலும் மாண்புடையராய் விளங்கினர். தம் பண்பும் பெருமையும் கண்டு, தம்பால் பெருங்காதல் கொண்ட பெண்டிரையே, பெருமனைக்கிழத்தியராகப் பெற்றிருந்தனர்; அவர்களை இமைப்பொழுதும் பிரிந்து வாழமாட்டாப் பேரன்பு கொண்டு பழகினார்கள். இவ்வாறு, வாழ்வாங்குவாழ்ந்த அவர்கள், தம்மை நாடி வருவார். பலர்க்கும் பொன்னையும் பொருளை-யும், அறுசுவை உணவையும், ஆடை அணிகளையும் அள்ளி அள்ளிக் கொடுத்துக், குன்றாப்புகழ் பெற்றார்கள். இவ்வாறு நாட்டுநிலை, வீட்டுநில ஆகிய இரு பெருநிலைகளிலும், குறை காணா நிறைவாழ்வே கொண்டமையால், அவர் உடல், பிணிகட்கு உள்ளாகிப் பயன் குன்றி மூப்புற்றுவிடவில்லை. நோய்காணா நல்லுடல் பெற்ற அவர்கள், நாள்தோறும் நல்லனவேபுரிந்து புரிந்து, பயன்மிகு நெறியிலேயே முதுமை பெய்துவராயினர். இவ்வாறு கல்தோன்றி மண் தோன்றாக்-காலந்தொட்டு வரும்முன்னோர் அனைவரும், இத்தகு பயன்மிகு பெருவாழ்வுடையராகவே வாழ்ந்து வந்தமையால், அவர் வழிவந்த பல்யானைச் செல்கெழுகுட்டுவன்பாலும், அப்பண்புகள் அனைத்தும் பொருந்தியிருக்கக் கண்டு, பேரின்பம் கொண்டார், பாலைக் கௌதமனார்.

குடிப்பெருமையால் குன்றாப் புகழ் படைத்த பல்யானைச் செல்கெழுகுட்டுவன், அம்முன்னோர் ஈட்டிய செல்வமே போதும், அதை உண்டு உயிரோம்புவதோடு தன்கடன் தீர்ந்தது என நினைக்கும் குறுகிய உள்ளம் உடையவன் அல்லன்; அவர்பால் தான்பெற்ற பெருநிலையைத், தன் உழைப்பால் தானும் சிறிது உயர்த்துதல் வேண்டும், அதுவே குடிப்பிறந்தார் கடனாம் என்ற உயர்ந்த உள்ளம் உடையவனாதலின், பற்பல வெற்றிப் புகழ்களை, அப்பேரரசு, அவன் காலத்தும் பெற்றது.

பல்யானைச் செல்கெழுகுட்டுவன் பெற்ற வெற்றிகளுள் தலையாயது, கொங்கரை அவன் வெற்றி கொண்ட கொற்றமே. கொங்கு நாட்டில் ஆணிரை ஒப்பும் தொழில் மேற்கொண்டவர்களாகிய அக்கொங்கர், ஆற்றல்மிக்க மறவர்களாகவும் விளங்கினர். கொங்குநாடு வன்னிலம் வாய்ந்த மேட்டுநிலமாதலின், ஆங்கு, ஆனிரைக்கு வேண்டும் நீர்தரும், நீர்த்தேக்கங்களைக் காண்பது இயலாது அதனால், கொங்கர், கோடாரி போலும் இரும்புக் கருவிகளைக்கொண்டு, அம்மலைநிலத்தையும் உடைத்து, ஆழம்மிக்க கிணறுகள் பலவற்றை ஆங்காங்கே தோண்டி வைத்திருப்பர்; அவ்வாறு அரும்பாடுபட்டுத் தோண்டிய அக்கிணறுகளிலும், தண்ணீர் பெருக வாராது. மாறாக, சிறிது சிறிதாகவே கசிந்து தேங்கிக் கிடக்கும் அந்நீரைப், பெரிய பெரிய குடங்களை இட்டு, முகப்பது இயலாது ஆதலாலும், ஒருகால் முகப்பது இயலுமா-யினும், அப்பெருங்குடங்களை அத்துணை ஆழத்திலிருந்து சேந்தி எடுப்பது இயலாது ஆதலாலல், நீண்ட கயறுகளில் சிறுசிறு முகவைகளைப் பிணித்து அந்நீரை மொண்டு மொண்டு ஊற்றுவர்; அவ்வாறு நீர் முகந்து ஊற்றும், அம் முகவைகளை, நீர் வேட்கைமிக்க ஆனிரைகள் கூட்டமாக மொய்த்துக்கொண்டு நீர் உண்டு செல்லும். ஆனிரை ஓம்பும் தொழில் அத்துணை அருமைப்பாடு உடையதாகவும், அத்-தொழிலில் தளர்ச்சி காணா ஆற்றல் மறவராகிய அக்-கொங்கரையும் வெற்றிகொண்டு, வீறுபடைத்த வேற்படைத் தலைவனாய் விளக்கம் பெற்றான், பல்யானைச்செல்கெழு-குட்டுவன்.

பல்யானைச்செல்கெழுகுட்டுவனைப் பணியாது, பகை-கொண்டு வாழ்ந்தார்கள், யாரோ சில குறும்பர்கள். அவர்கள் அவ்வாறு தன்னை எதிர்த்து நிற்பதற்கு யாது காரணம் என ஆராய்ந்து நோக்கியக்கால், அவர்பால், அகப்பா எனப்பெயர்

பூண்ட பெரிய கோட்டையொன்று இருப்பதைக் கண்டான்; அகப்பா என்ற, அவ்வரண், உண்மையிலேயே சிறந்த காப்பமையப் பெற்றது. அரணகத்து வீரரும், அரணை வளைத்து நிற்கும் பகைநாட்டுப்பெருவீரரும் போரிடற்கேற்ற பரந்து அகன்ற செண்டுவெளி மதிற்புறத்தே, காட்சி அளிக்க, மலையென உயர்ந்த மதிலகத்தே, நெடிய பெரிய வாயிற் கதவுகளை அடைத்துக் கணையமரம் சார்த்தப் பெற்றிருக்கும். வாயில்தோறும், பகைவர் படையைச் சேணெடும் தொலைவில் கண்ணுற்ற போதே, அம்புகளை விரைந்தேவவல்ல ஐயவித்துலாம் பொறியும் அமைக்கப் பெற்றிருக்கும். இவையே அல்லாமல், மதிலின் ஒவ்வொரு பகுதியிலும், கவணும், கூடையும், தூண்டிலும் துடக்கும், ஆண்டலை அடுப்பும், சென்றெறிசிரலும், நூற்றுவரைக்கொல்லியும் போலும் அரிய பொறிப்படைகள் பலப்பல பொருத்தப் பெற்றிருக்கும். கண்ணொளி புகாக் காவற்காடு, அடிகாணமாட்டா ஆழம் பொருந்தய அகழி, ஆகியவற்ருல் சூழப்பெற்றிருக்கும். உளை என்றும், தலையாட்டம் என்றும் அழைக்கப்பெறும் உறுப்பால், அழகுபெற்ற குதிரைகள், பொன்னரிமாலை அணிந்து, ஒளிவீசு மத்தகத்தால் மாண்புற்ற களிறுகள், வண்ணச் சீலைகளால் வனப்புற்ற, வானளாவும் நெடிய தேர்கள், போர்க்களப் புகழையே விரும்பிப், போர்க்களம்புகத் துடிக்கும் வீரர்கள் ஆகிய நாற்படைகளாலும் நிறைந்திருக்கும்.

அதனுல், அக்காலக் கோட்டை எதற்கும் இல்லாத தனிச்சிறப்பு அவ்வகப்பாக் கோட்டைக்கு இருப்பதை உணர்ந்தான் பல்யானைச் செல்கெழுகுட்டுவன். பற்றற்கரியது என்ற பாராட்டினைப் பெற்று விளங்கும் அவ்வரணைப் பற்றி அழிப்பதே தன் பேராண்மைக்கு அழகாம் எனக் கருதினுன். அதனுல், அவ்வகப்பாஅரண் நோக்கி, சேரநாட்டவரின் சிறந்த நாற்படைகளையும் நடத்திச் சென்று,

அதை முற்றி வளைத்து, இமைப்பொழுதில் அழித்து உட்புகுந்து தனதாக்கிக் கொண்டான். அவ்வெற்றிக்கு அறிகுறியாக, அவன் அன்று அணிந்த, உழிஞை மலர்மாலை, இன்றும் தன்பொன்னிறம் காட்டி மணவீசக் கண்டு, மகிழ்ந்தார் புலவர் பாலைக்கௌதமனார்.

அகப்பா அரண் வீழ்ந்ததும், பல்யானைச் செல்கெழுகுட்டுவன் சினமும் படையும், அவ்வரண்பெற்ற செருக்கால் பகைத்த பகைவர்நாட்டின் மீது பாய்ந்தன. பல்யானைச் செல்கெழுகுட்டுவன் பகைவர், பணியாது வாழ்ந்தமைக்கு, அகப்பா அரண் மட்டுமே காரணமாகிவிடாது; அவர் நாட்டு, வற்ரு வளமும் அதற்குக் காரணமாம். அப்பகைவர் நாடு அளந்தறியாப் பலவளம் பெற்ற பெருமையுடையது. அந்நாட்டில் நீர்வளக்குறைபாடு என்றும் நேர்ந்ததில்லை. ஆறுகள் கரைபுரண்டோட, நீர் நிலைகள் நிரம்பி வழிய, வாய்க்கால்களில் வெள்ளமெனப் பாய்ந்தோடும், நீர் ஆங்கங்குள்ள அணைகளையும், மதகுகளையும், மடைகளையும் உடைத்துவிட, அதை உழவர் பெருமக்களுக்கு அவ்வப்போது அறிவித்து, உடைப்பை அடைக்க அழைக்க எழுப்பும் பறையோசை, அந்நாட்டில் இரவு பகல் எப்போதும் ஓயாது ஒலித்துக் கொண்டேயிருக்கும். பேராறுகளில் புதுவெள்ளம் வருந்தோறும் நிகழும் விழாவில் கலந்து கொள்ளும் களிப்பு மிகுதியால், அந்நாட்டு மறவர், அம்பும் வில்லும் கொண்டு போர்ப்பயிற்சி பெறுவதையும் ஓரளவு மறந்து போவர். வயல்கள் நிறைய விளைந்து, வற்ருப் பெருவளங்களை வாரிவாரிக் கொடுப்பதால், அம்மக்கள் அவ்வப்போது எடுக்கும் பெருவிழாக்காலத்து எழும் பேரொலி, அந்நகர் வீதிகளில் ஒலித்துக் கொண்டேயிருக்கும்.

அத்துணை வளமும் சேரன் சீற்றம் கொண்டதும் சீரழிந்து போயின. அவன் படைபுக்கதும் பாழுற்றுப்போயின

விழாக்காலத்து ஆரவாரத்தால் மக்கள் திரளை வாவா என் வரவேற்கும் அப்பேரூர்களில் மக்கள் வழக்காறே அற்றுவிட்டது; இருண்ட காடுகளில் இரவுப்போதுகளில் மட்டுமே ஊளையிட்டு உலாவரும் நரிக்கூட்டம், நல்ல பகற்போதிலும் ஊளையிட்டுத் திரியலாயின. கோட்டான்கள் கூட்டமாகக் கூக்குரல் எழுப்பின; குள்ளநரி, கோட்டான்களின் குரல் ஒலிக்கேற்ப, பேய்கள் கூத்தாடித் திரியலாயின. அத்துணைப் பாழுற்றுப் போயின அப்பகை நாடுகள். பல்யானைச் செல்கெழுகுட்டுவன் படை வன்மை அத்துணைப் பெரிதாம்.

பல்யானைச் செல்கெழுகுட்டுவனின் இப்பெருமைகளையெல்லாம் கண்டும் கேட்டும் அறிந்து, அவன்பால் பெருமதிப்புற்ற புலவர் பாலைக் கௌதமனார், அவன் புகழ்பாடும் அழகிய பாவொன்றைப் பாடியருளினார். அப்பாட்டில், கிணற்றில் நீர் கொள்வான்வேண்டிக் கயிற்றில்பிணித்த முகவைகளைக் கிணற்றுள் இட்டுச் சேந்துவார், முகவைகள் கொணரும் நீரைச் சேந்துவதற்கு மாறாக, அக்கிணற்றில் முகத்தற்கு நீர் இல்லாமையாலும், முகக்கும் சிறிய நீரும் இடைவழியில் சிந்திப்போக, முகவை, அம்முகவைகளைப் பிணித்த கயிறு ஆகியவைகளையே சேந்துவராவர் என்றுகூறுமுகத்தான். நீர்பெரு அருமையை நிலைநாட்டும் சிறப்பு **'கயிறு குறுமுகவை'** என்ற தொடரின்பால் பொருந்தியிருக்கும் நயம்கண்டு வியந்தவர்கள், அப்பாட்டிற்கு அத்தொடரையே பெயராக்கி மகிழ்ந்தார்கள்.

**22.** ''சினனே, காமம், கழிகண்ணோட்டம்,
அச்சம் பொய்ச்சொல், அன்பு மிகஉடைமை,
தெறல் கடுமையொடு பிறவும் இவ்வுலகத்து
அறந்தெரி திகிரிக்கு வழியடையாகும்.
தீது சேண் இகந்து, ஒன்று மிகப்புரிந்து,

கடலும், கானமும் பலபயம் உதவப்,
பிறர்பிறர் நலியாது, வேற்றுப் பொருள் வெஃகாது,
மையில் அறிவினர் செவ்விதின் நடந்து, தம்
அமர்துணைப் பிரியாது, பாத்து உண்டு, மாக்கள்
மூத்தயாக்கையொடு பிணி இன்று கழிய,
ஊழி உய்த்த உரவோர் உம்பல்!
பொன்செய் கணிச்சித் திண்பிணி உடைத்துச்
சிரறுசில ஊறிய நீர்வாய்ப் பத்தல்
**கயிறு குறு முகவை** மூயின மொய்க்கும்
ஆகெழு கொங்கர் நாடு அகப்படுத்த
வேல்கெழுதானை வெருவரு தோன்றல்!
உளைப் பொலிந்த மா,
இழைப் பொலிந்த களிறு,
வம்பு பரந்த தேர்
அமர்க்கு எதிர்த்த புகல் மறவரொடு
துஞ்சுமரம் துவன்றிய, மலர் அகன் பறந்தலை,
ஓங்கு நிலை வாயில் தூங்குபு தகைத்த
வில்விசை மாட்டிய விழுச்சீர் ஐயவிக்,
கடிமிளைக், குண்டு கிடங்கின்,
நெடுமதில், நிரைப் பதணத்து
அண்ணலம் பெருங்கோட்டு அகப்பா எறிந்த
பொன்புனை உழிஞை வெல்போர்க் குட்டுவ!
போர்த்து எறிந்த பறையால் புனல் செறுக்குநரும்
நீர்த்தரு பூசலின் அழிக்குநரும்,
ஒலித்தலை விழவின் மலியும் யாணர்
நாடுகெழு தண்பணை சீறினை ஆதலின்,
குடதிசை மாய்ந்து குணமுதல் தோன்றிப்
பாய் இருள் அகற்றும் பயங்கெழு பண்பின்
ஞாயிறு கோடா நண்பகல் அமையத்துக்
கவலை வெண்நரி கூடமுறை பயிற்றிக்

கழல்கண் கூகையொடு குழறுகுரல் பாணிக்,
கருங்கண் பேய்மகள் வழங்கும்
பெரும்பாழ் ஆகும்மன் அளியதாமே!

**துறை : வஞ்சித்துறைப் பாடாண் பாட்டு**
**வண்ணம் : ஒழுகு, சொற்சீர்வண்ணங்கள்**
**தூக்கு : செந்தூக்கும், வஞ்சித்தூக்கும்.**
**பெயர் : கயிறுகுறு முகவை**

இகந்து, புரிந்து, நலியாது, வெஃகாது, நடந்து, பிரியாது, உண்டு, உய்த்த உரவோர் உம்பல்! (1-11) கொங்கர் நாடு அகப்படுத்த தோன்றல்! (12-16) மறவரொடு மரம், பறந்தலை, வாயில், விசை, ஐயவி, மிளை, கிடங்கு, மதில் பதணங்களையுடைய அகப்பா எறிந்த குட்டுவ! பணை சீறினை-யாதலின், பாழகும்மன், அளிய எனக் கொண்டு முடிக்க.

சினனே காமம் கழிகண்ணோட்டம் = மிக்க சினமும், மிக்க காமமும், மிக்க கண்ணோட்டமும். அச்சம் பொய்ச்சொல் அன்புமிக உடைமை = அச்சமும் பொய்யும், அளவிறந்த அன்புடைமையும். தெறல்கடுமையொடு பிறவும் = கைஇகந்த தண்டமும், இவை போல்வன பிறவுமாகிய. இவ்வுலகத்து = உலகில். அறம்தெரி திகிரிக்கு = அறம் அறிந்து நடாத்தும் அரசியல் முறைக்கு. வழியடை ஆகும் = இடையீடு செய்யும். தீதுசேண் இகந்து = தீங்குகளைத் தம்நாட்டின் எல்லைக்கும் அப்பால் துரத்திவிட்டு. நன்று மிகப்புரிந்து = நல்லறச்செயல் களையே மிகுதியாகச் செய்து. கடலும் கானமும் பலபயம் உதவ = கடலும் காடும் போலும் நால்வேறு நிலங்களும் பற்பல பயன்களை அளிக்கவும். மாக்கள் = தம்நாட்டு மக்கள். பிறர் பிறர் நலியாது = ஒருவரை ஒருவர் துன்புறுத்தாதும். வேற்றுப் பொருள் வெஃகாது = பிறர் பொருள்பால் வேட்கை

கொள்ளாமலும். மையில் அறிவினர் செவ்வித்தின் நடந்து = ஐயம் திரிபு அறக்கற்ற அறிவுடையராய், அறநூல் கூறும் நன்னெறிக்கண் வாழ்த்தும். தம் அமர்துணை பிரியாது - தம் காதல் மனைவியரைக் கணப்பொழுதும் பிரியாது. பாத்து-உண்டு = தாம் ஈட்டும் பொருளை வருவார்க்கு வழங்கி எஞ்சியதை உண்டு. மூத்த யாக்கையோடு = இந்நல்லற நெறியோடு முதுமையுற்ற உடலோடு. பிணி இன்று கழிய = நோய் அற்ற நல்வாழ்வு எய்துமாறும். ஊழி உய்த்த = ஊழி ஊழி காலமாக நாடாண்ட. உரவோர் உம்பல் = சிறந்தோர் வழியில் வந்த சேரவேந்தே! பொன் செய்கணிச்சி = கரும் பொன் ஆகிய இரும்பினால் செய்த கோடாரியால். திண்பிணி உடைத்து = திண்ணிய வன்னிலத்தைப் பிளந்து தோண்டிய. சிரறு சில ஊறிய நீர்வாய்ப் பத்தல் = சிதறுண்டு சிறிது சிறிதாக ஊறிய தண்ணீர் தேங்கும் கிணறுகளில். கயிறு குறு முகவை = நீண்ட கயிறு கட்டி நீர் முகக்கும் சிறு சிறு குடங்களை. மூயின மொய்க்கும் = நீர்வேட்கை மிகுதியால் கூட்டமாக மொய்த்து நிற்கும். ஆகெழு கொங்கர் நாடு அகப்படுத்த = ஆனிரைச் செல்வங்களைக் கொண்ட கொங்கர் களின் நாட்டை வென்று அகப்படுத்திக் கொண்ட. வேல்-கெழுதானை வெருவரு தோன்றல் = வேலேந்திய வீரர்களை-யுடைமையால் பகைவர்க்கு அச்சம் விளைவிக்கும் பெரியோனே! உளை பொலிந்த மா = தலையாட்ட அணியால் அழகுற்ற குதிரைகள். இழை பொலிந்த களிறு = பொன்னரி மாலை யால் அழகுபெற்ற யானைகள். வம்பு பரந்த தேர் = வண்ணச் சீலைகளால் வனப்புற்ற தேர்கள். அமர்க்கு எதிர்ந்த புகல் மறவரோடு = போர் என்றதும் புறப்பட்டு விடும் போர் வேட்கை மிக்க வீரர்கள் என்ற நாற்படைகளோடு. துஞ்சுமரம் = கணைய மரமும். துவன்றிய மலர் அகன் பறந்தலை = போர் வீரர்கள் நிறைந்த பரந்து அகன்ற செண்டு வெளியும். ஓங்கு நிலைவாயில் = உயர்ந்த மாடங்களைக் கொண்ட மதில-

கத்து வாயில்களையும். தூங்குபு தகைத்த வில் விசை = தொங்குமாறு கட்டிய விரைந்து அம்பு ஏவும் விற்பொறியும், மாட்டிய விழுச்சீர் ஐயவி=விற்பொறியோடு ஒருசேர மாட்டிய விழுமிய சிறப்பு வாய்ந்த ஐயவித்துலாம் எனும் பொறியும். கடிமிளை = காவற்காடும். குண்டுகிடங்கின் = ஆழ்ந்த அகழியும். நெடுமதில் நிரைப் பதணத்து = நெடிய மதில் முழுதும் வரிசைவரிசையாக அமைக்கப் பெற்ற அரிய பொறிப் படைகளும் உடைமையால். அண்ணல் அம் பெருங்கோட்டு அகப்பா = தலைமையும் சிறப்பும் வாய்ந்த உயர்ந்த அகப்பா என்ற அரணை. எறிந்த = அழித்து வென்ற. பொன்புனை உழிஞை = பொன்போலும் அகுழபெற்ற உழிஞை மலர்மாலை அணிந்த. வெல்போர் குட்டுவ = வெல்லும் போர்க்களமே காணும் குட்டுவனே; போர்த்து எறிந்த பறையால் புனல் செறுக்கு நரும் = தோல் போர்த்து அடித்து எழுப்பிய பறை- யொலி கேட்டு வந்து, பெருகிவரும் வெள்ளத்தை அணைகட்டித் தேக்கும் உழவர்களும். நீர்த்தரு பூசலின் = புதுப்புனல் வருங்கால் எடுக்கும் விழா ஆரவாரத்தால். அம்பு அழிக்குநரும் = வில்லும் அம்பு கொண்டு நடாத்தும் விற்பயிற்சியை மறக்குய் வீரர்களும். ஒலித்தலை விழாவின் மலியும் = ஆரவாரக் களியாட்டம் மிக்க பெருவிழாக்களில் ஒன்று திரண்டு மகிழ்தற்கு இடமான. யாணர்நாடு கெழுதண்பனை = புது வருவாய்மிக்க பகைவர் நாட்டின் மருதவளம் சான்ற வயல்கள். சீறினை ஆதலின் = நீ சினங்கொண்டாய் அதனால். குடதிசை மாய்ந்து குணமுதல் தோன்றி = மேற்கே மறைந்து கிழக்கே தோன்றி. பாய் இருள் அகற்றும் = உலகில் பரவிக்கிடக்கும் பேரிருளைப் போக்கும். பயம் கெழு பண்பின் = பயன் மிக்க பண்பாட்டினை உடைய. ஞாயிறு கோடா நன்பகல் அமைத்து = ஞாயிறனவன் கிழக்கிலோ, மேற்கிலோ சாயாமல் தலைக்கு மேலே நேரே நிற்கும் நடுப்பகற்காலத்திலும். 'கவலை' வெண்நரி கூமுறை பயிற்றி = பசியால் வருந்தும் குறுநரிகள் ஒருசேரக்

கூடி ஊளேயிட. கழல்கண் கூகை குழறுகுரல் பாணி = பருத்துப் பிதுங்கிய கண்களேயுடைய கோட்டான்களின் கூக்-குரலாகிய பாட்டிற்கு ஏற்ப. கருங்கண் பேய்மகள் வழங்கும் = பெரிய கண்களேயுடைய பேய்மகள் கூத்தாடும். பெரும் பாழாகும் = கொடிய பாழ் நிலமாகிப் பயன் அற்றுப்போம். தாம் அளிய = அவைதாம் அந்தோ அளித்தற்கு உரிய.

# 3. தலைநந்த காஞ்சி

பல்யானைச் செல்கெழுகுட்டுவனின் பேராற்றலையும், பெருங்கொடைப் பண்பையும் பலரும் பாராட்டக் கேட்டு, அவனைப் பார்த்துப் பாராட்ட வேண்டும் என்ற வேட்கை உந்த, அவன் நாடு நோக்கிப் புறப்பட்டார் புலவர் பாலைக்-கௌதமனார். காடுகளையும் மலைகளையும் கடந்து சேரநாடு நோக்கிச் செல்லும் புலவர், இடைவழியில் உள்ளதொரு நாட்டுள், புகுந்து போகவேண்டி நேர்ந்தது. அந்நாட்டைப் புலவர் பண்டே அறிந்திருந்தார்.

எப்போது பார்க்கினும், கிளி முதலாம் பறவைக்கூட்டம் ஒழிவற அமர்ந்திருப்பதால், ஓவெனும் இனிய ஒலி ஓயாது ஒலித்துக்கொண்டிருக்கும், மருதம் முதலாம் வகைவகையான மரங்கள், வரிசை வரிசையாக வளர்த்திருக்கும் அப்பெரு நாட்டில், மணல் பரந்த பெரிய நீர்த்துறைகளில், இளம் மகளிர் கூட்டத்தால், மலரும் தளிரும் பறிக்கப்படுதலால், சிதைவுண்டு தாழ்ந்த கிளைகளையுடைய காஞ்சி மரமும் முருக்க மரமும் நிற்கும் அடைகரை, அம்முருக்கின் செந்நிறமலர்கள் உதிரப்பெற்று, நெருப்பு மலைபோல் காட்சி அளிக்க, ஆங்கு, வெண்சங்குகளும் செங்கால் நாரைகளும் இரைதேர்ந்துண்டு மகிழ்ந்து உலாவரும். அவ்விடங்களுக்கு அணித்தாகக், கழனிகளுக்கு வேண்டும் தண்ணீரைத் தேக்கிவைத்துத் தருவதால், வயல்களின் வாயில் என மதிக்கத்தக்க பொய்கையைச் சார்ந்துகிடக்கும் விளைநிலங்களில், செந்தழல் நிகர்க்கும் செந்தாமரை மலர்களும், விளையாட்டு மகளிர் கொய்யாது விட்டமையால் மலர்ந்து மணம் வீசா நிற்கும். ஆம்பல் மலர்களும் நிறைந்து கிடக்கும் இவை

போலும் புதுப்புது வளங்களை இழக்காமல் பெற்ற, பரந்த பெரிய நாடு அந்நாடு.

அந்நாட்டின் இப்பெருவளத்தைப் பண்டு பார்த்து மகிழ்ந்த புலவர், அந்நாடு, பல்லாற்றுனும் பாழுற்றுக் கிடக்கும், இன்றைய நிலையையும் காணநேர்ந்தது. வாணிகம் முதலாம் பல்வேறு வளம் கருதி வருவோரும் பேவோருமாகிய வெளிநாட்டு மக்களால் மண்டிக்கிடக்கும் அந்நாட்டுப் பெருவழிகளில், இன்று வழங்குவார் ஒருவருல் இலராகவே, புல்லும், முள்ளும், முளைத்துச் சிற்றிடமும் வெற்றிடம் காணுதபடி மூடிக் கவின் இழந்து காட்சி அளித்தன. வானளாவ உயர்ந்த எழுநிலை மாடங்கள் மலிந்து, அம்மாடங்களில் வாழ்ந்த மனையறம் ஒப்பும் மாண்புமிகு மகளிர், தம்காதற்கணவரோடு களித்து உலாவிய அந்நாட்டுப் பேருமன்றங்ளெல்லாம், காளைகளோடு கூடிய காட்டுப் பசுக்கள் திரிதற்கேற்ப, பெருமரக் காடாகி விட்டன.

அக்கொடுங்காட்சிகளைக் கண்டு கலங்கிக் கண்ணீர் சொரிந்த புலவர், பண்டு அத்துணைப் பெருவளம் பெற்றுத் திகழ்ந்த அப்பெருநாடு, இவ்வாறு பாழுற்றுப் போனமைக்-காம் காரணம் யாதோ என அறியமாட்டாது அலைந்தார்; அந்நிலையில் ஆங்கு வந்தார் சிலரை அது குறித்து உசாவினர். அவர்கள் "புலவரேறே! பல்யானைச் செல்கெழுகுட்டுவனின் பேராற்றலையும் பெரும் புகழையும் அறியமாட்டாது, இந்-நாடாளும் வேந்தன், அவனோடு வைத்துக்கொண்ட அறியாமையின் விளைவு இது. அவன் படைப்பெருமை அறியாது, அவன் நாற்படையை எதிர்த்து நின்ற இந்நாட்டு அரசன், அறியாமையால் பல்யானைச் செல்கெழுகுட்டுவனின் படையும் புகுந்து விட்டது, நாடு பாழுற்றுப்போய் விட்டது" என்று கூறக்கேட்ட புலவர், அந்நாட்டிடன் அழிவு குறித்து

ஒருபால் ஆருத்துயர் கொண்ட அதேநிலேயில், பல்யானேச் செல்கெழுகுட்டுவனின் பேராற்றலே ஒருபால் வியந்து பாராட்டியும் மகிழ்ந்தார்.

அவ்வெண்ணச் சூழலால் சிறிது நாழிகை ஆங்கிருந்து விட்டுச், சேரநாடு நோக்கிய தம் செலவினே மீண்டும் தொடர்ந்தார். புலவர் சென்ற காலம், கொடிய கோடையால் நாடும் காடும் வறண்டுபோன காலமாகும். உன்னமரங்கள், தம் சின்னம் சிறு இலேகளும் உதிர்ந்துபோக மொட்டையாக நின்று காட்சி அளித்தன. கிளிமுதலால் பறையினம் இருந்து ஒலிக்கவேண்டிய அதன் சிறுகிளேகளில் சில்வீடு மட்டுமே குடிவாழ்ந்து, கேட்போர் காதுகடுக்க ஓயாது ஒலித்துக் கொண்டிருந்தது. இவ்வாறு நாடு வறண்டுபோனமையால், வயல்களும் வளம் இழந்து கிடந்தன. அதனுல் மக்களும் தம் வயிருர உண்பதை விடுத்துச், சிறிது சிறிதே உண்டு காலம் கழித்து வந்தனர். மழை பெருது வறண்ட காலத்தின் விளேவாம் இக்கொடுமைகளேக் கண்ணுற்றவாறே புலவர், பல்யானேச் செல்கெழுகுட்டுவனின் பேரூர்களுள் புகுந்தார்.

தலேநகரின் தலேவாயில் வழியாக உள்புகுந்த புலவரை, அப்பேரூர்ப் பொதுவிடத்தில் எழுந்த இசையொலி ஆங்கு ஈர்த்தது; அதுகேட்டு ஆங்கடைந்த புலவர், நடுவூர்மன்றத்தே பாணர், பொருநர், கூத்தர் முதலாம் பாடிப்பிழைக்கும் இரவலர்கள் பெருங்கூட்டமாய் வாழ்வதையும், அவர்கள், நாடு வறுமையால் வாடும் அப்போதும் பசியறியாப் பெரு வாழ்வும், தண்ணெளி வீசும் பொன்னணி பூணும் பெரு வளமும் உடையராய் வாழ்வதையும் கண்டார். அவர்க்கு இத்துணேப் பெருவாழ்வு, இந்நிலேயில் வாய்த்த விதம் எவ்வாருே என எண்ணி வியந்து நிற்கும்போது, அவர்கள் இசைக்கருவிகளே அடைத்து வைத்திருக்கும் பைகளே

அவிழ்த்துத் தத்தம் இசைக்கருவிகளை ஏந்தி இலக்கியவாறே, அப்பேரூர்ப் பெருந்தெருக்களில் புகுந்து, வேந்தன் விழுப்புகழ் விளங்கப்பாடிச் செல்வாராயினர். அவர்களைப் பின் தொடர்ந்தார் புலவரும். ஒவ்வொரு தெருவாகப் பாடிக் கொண்டே, அக்கூட்டம், இறுதியில் பல்யானைச் செல்கெழு-குட்டுவன் வீற்றிருக்கும் பெருங்கோயில் முற்றத்தை அடைந்தது. அவர் பாடல் கேட்டுப் புறம்போந்து, அவர் ஆடல் கண்டு மகிழ்ந்த அக்காவலன், அவ்விரவலர் கூட்டம் உள்ளம் நிறைந்து உவந்து கூத்தாடுமாறு, பெருஞ்சோறு படைந்ததோடு அமையாது அரிய பெரிய பொன்னணிகள் எண்ணிலாதவற்றை எடுத்து எடுத்துக் கொடுத்தான்.

கோடையால் வளம் இழந்து, நாட்டுப்பண்டாரராம் வறண்டிருக்கும் அந் நிலையிலும் பல்யானைச் செல்கெழு-குட்டுவன் பரிசிலர்க்குப் பெருங்கொடை அளிப்பது எவ்வாறோ? அப்பெருநிதியை அவன் யாண்டுப் பெற்றனனோ? என்று எண்ணமிட்டவாறே, பல்யானைச் செல்கெழுகுட்டுவன் வீற்றிருக்கும் திசையை நோக்கியபுலவர், ஆங்கு அவன் இருமருங்கிலும் அணிவகுத்து நிற்கும் நாற் படைநிலையினைக் கண்ணுற்றார். எத்துணைப் பெரும் படை-களையும் எளிதில் அழிக்கவல்ல பேராற்றல் வாய்ந்தது அப் படை என்பதை அதன் தோற்றமும் காட்டிற்றாகப், பல்யானைச் செல்கெழுகுட்டுவனின் பொருள் வளத்திற்காம் காரணம் புலவர்க்கு எளிதில் புரிந்து விட்டது. அப்படைத் துணையால் பகைநாடுகளையழித்துக் கைப்பற்றிக் கொணரும் பொருள் வளத்தால் அவன் கோயில் பண்டாரம் நிறைந்து வழி-வதனாலேயே, அவனால் வரையாது வழங்க முடிகிறது என உணர்ந்து, அந்நாற்படைகளையும், அப்படைகளைப் பணி கொண்டு புகழ்பெருக்கும் பல்யானைச் செல்கெழுகுட்டுவனின் பேராற்றலையும் புகழ்ந்து பாடினார்.

இப்பாட்டில், மகளிர் மலர்கொய்ய மாண்புமிகும் காஞ்சி மரத்தை, அம்மகளிரால் சிதைவுற்றுச் சீரழிந்தது என்று கூறிய நயம் விளங்க வந்த **ததைந்த காஞ்சி** என்ற தொடர் பேரின்பம் தருவல் கண்டு, அத்தொடரால் பெயர் சூட்டியுள்ளார்கள்.

21. ''அலந்தலை உன்னத்து அங்கவடு பொருந்திச்
சிதடி கரையப், பெருவறங் கூர்ந்து
நிலம் பைதற்ற புலம்கெடு காலையும்
வாங்குபு தகைத்த கலப்பையர், ஆங்கண்
மன்றம் போந்து மறுகு சிறைபாடும்
வயிரிய மாக்கள் கடும்பசி நீங்கப்,
பொன்செய் புனைஇழை ஒளிப்பப், பெரிது உவந்து
நெஞ்சுமலி உவகையர் உண்டு மலிந்து ஆடச்,
சிறு மகிழானும் பெருங்கலம் வீசும்
போர் அடுதானைப் பொலந்தார்க் குட்டுவ!
நின் நயந்து வருவேம் கண்டனம்; புல்மிக்கு
வழங்குநர் அற்றென மருங்குகெடத் தூர்ந்து
பெருங்கவின் அழிந்த ஆற்ற, ஏறுபுணர்ந்து
அண்ணல் மரைஆ அமர்ந்து இனிது உறையும்
விண்உயர் வைப்பின காடாயின; நின்
மைந்துமலி பெரும், புகழ் அறியார் மலைந்த
போர் எதிர் வேந்தர்; தார் அழிந்து ஒராலின்
மருது இமிழ்ந்து ஒங்கிய நளிஇரும் பரப்பின்
மணல்மலி பெருந்துறைத் **ததைந்த காஞ்சி**யொடு
முருக்குத் தாழ்பு எழிலிய நெருப்பு உறழ் அடைகரை
நந்து நாரையொடு செவ்வரி உகளும்
கழனி வாயில் பழனப் படப்பை
அழல் மருள் பூவின் தாமரை, வளைமகள்
குறுஅது மலர்ந்த ஆம்பல்
அறுஅ யாணர் அவர் அகன்தலை நாடே''.

துறை : வஞ்சித்துறைப் பாடாண்பாட்டு
வண்ணம் : ஒழுகு வண்ணம்
தூக்கு: செந்தூக்கு
பெயர்: ததைந்த காஞ்சி

குட்டுவ! (1-10), நின்புகழ் அறியார் மலைந்த வேந்தர் ஓராலின், அவர் அகன்தலை நாடு (15-75), அழிந்த ஆற்ற வாய் காடாயின (11-15); வருவேம் கண்டனம் (11).

அலந்தலை உன்னத்து = இலை உதிர்ந்த தலையினை- யுடைய உன்ன மரத்தின். அங்கவடு பொருந்தி = சிறுசிறு கிளைகளில் பொருந்தியிருந்தது. சிதடிகரைய = சில்வீடு எனும் வண்டுகள் ஒலிக்குமாறு. பெருவறம் கூர்ந்து = கொடிய வற்கடம் மிகுதலால். நிலம் பைதற்ற = நிலம் பசுமையற்ற. புலம் கெடுகாலையும் = வயல்கள் உலர்ந்து வளம் கெட்ட காலத்திலும். வாங்குபு தகைத்த கலப்பையர் = தொகுத்துக் கட்டிய இசைக் கருவிகளைக் கொண்ட பைகளை உடையவராய். மன்றம் போந்து = ஊர்ப் பொதுவிடத்தை அடைந்து. ஆங்கு மறுகு சிறைபாடும் வயிரிய மாக்கள் = அப்பேரூரில் வீதிகளில் புகுந்து, மனைமுன்றில்தோறும் நின்றுபாடும் பாணரும் கூத்தரும் ஆகிய பரிசிலர்களின். கடும்பசி நீங்க = கொடிய பசியானது அறவே நீங்குமாறும். பொன்செய் புனை இழை ஒலிப்ப= பொன்னாற் செய்த அழகிய அணிகலன்கள் ஆரவாரம் செய்யுமாறும். பெரிது உவந்து = பெருமகிழ்ச்சி கொண்டு. நெஞ்சுமலி உவகையர்= உள்ளம் நிறைந்த உவகை உடைராகி. உண்டு மலிந்து ஆட = மேலும் மேலும் உண்டு, மனச்செருக்குற்று மகிழ்ந்து ஆடுமாறும். சிறுமகிழானும்=வளம் அருங்கிய காலத்திலும். பெருங்கலம் வீசும் = அரியபெரிய அணிகலன்களை வாரி வாரிக் கொடுக்கும், போர் அடுதானை = போர் வெல்லும்

நாற்படைகளையும். பொலந்தார்=பொன்னால் செய்த மாலை-யினையும் உடைய. குட்டுவ = பல்யானைச் செல்கெழு-குட்டுவனே! நின் மைந்துமலி பெரும்புகழ் அறியார் = நின் ஆண்மையால் பெருகும் புகழ் நிலையினை அறியாது. போர் எதிர் வேந்தர் = உன்னோடு போரிட முன்வந்த வேந்தர்கள். தார் அழிந்த ஒராலின்=உன் தூசிந்படைக்கே தோற்று ஓடி விட்டமையால். மருது இமிழ்ந்து ஓங்கிய = மருத மரங்கள் தம்பால் இறைகொள்ளும் புள்ளினங்கள் எழுப்பும் ஆரவாரம் மிக ஓங்கி நிற்கும். நளி இரும் பரப்பின் = நனிமிகப்பரந்த. மணல் மலி பெருந்துறை = மணல் மிக்க பெரியதுறைக்கண். ததைந்த காஞ்சியொடு = மலர் கொய்து சிதைவுற்று காஞ்சி மரங்களோடு. முருக்கு தாழ்பு எழிலிய = முருக்க மரங்களும் தாழ வளர்ந்து அழகுசெய்த. நெருப்பு உறழ் அடைகரை = முருக்கின் செந்நிறமலர்கள் உதிர்ந்து கிடப்பதால் நெருப்பு மலையினை நிகர்க்கும் அடைகரையில். நந்து நாரையொடு செவ்வரி உகளும்= சங்குகளோடும், நாரைகளோடும் சிவந்த வரிகளையுடைய நாரையினப்பறவைகளும் உலாவித்திரியும். கழனிவாயில் பழனப்படப்பை = கழனிகளுக்கு வாயில்களாக விளங்கும் பொய்கைகளைச் சார்ந்த விளைநிலத்தில். அழல் மருள் பூவின் தாமரை = செந்தழல் போலும் பூக்களைக் கொண்ட தாமரை கொடிகளும். வளைமகள் குருது மலர்ந்த ஆம்பல் = வளையணிந்த இளம் மகளிர் பறிக்காமையால் மலர் காட்டும் ஆம்பல் கொடிகளும். அறுஅ யாணர் = அற்றுப் போகாமைக்குக் காரணமான புதுவருவாய்மிக்க. அவர் அகன்தலைநாடு = அப்பகைவரின் பரந்து அகன்ற பெரிய நாடுகள். வழங்குநர் அற்றென = வருவோரும் போவோரு மாகிய மக்கள் வழங்குதல் அற்றுவிட்டபடியால். புல்மிக்கு = புல் நிறைந்து. மருங்கு கெடத்தூர்ந்து = வெற்றிடம் சிறிதும் இல்லாதவாறு முட்கொடிகளால் தூர்ந்து. பெருங் கவின் இழந்த ஆற்ற = தம் பண்டைப் பேரழகை இழந்து

விட்ட பெருவழிகளையுடையவாகி. அண்ணல் மரை ஆ = பெரிய பெரிய காட்டுப் பசுக்கள். ஏறுபுணர்ந்த = தாம் விரும்பும் ஆனேறுகளோடு கூடி, அமர்ந்து இனிது உறையும் = விரும்பி இன்புற்று வாழ்தற்கு இடமாகிவிட்ட. விண்உயர் வைப்பின் = வானளாவ உயர்ந்த நெடிய பெரிய மரங்களைக் கொண்ட. காடாயின் = காடுகளாக்விட்டன. நின்நயந்து வருவேம் = உண்ணைக்காணும் விரும்பி வரும் யாமும் என் சுற்றமும். கண்டனம் = அவற்றைக் கண்டேம்.

# 4. சீர்சால் வெள்ளி

பல்யானைச் செல்கெழுகுட்டுவன், பாரெலாம் போற்றும் பேரரசனாய் வாழ்தற்காம் காரணம் யாது என்பதை, அவன் அரசவைக்கண் சிலநாள் வாழ்ந்து பழகியதால் அறிந்து கொண்டார் புலவர். பல்யானைச் செல்கெழுகுட்டுவன் போர் நுணுக்கம் அறிந்தவன்; நாடாளும் நன்னெறியை நன்கு தேர்ந்தவன்; மனையற மாண்பு உணர்ந்தவன். எத்துறையி லும் கைவந்தவன். அவன் ஆற்றலை அளந்து காணல் எவராலும் ஆகாது.

அணிவகுத்து நிற்கும் பகைவர் படையுள் பிளவுகண்டு உட்-புகுதல் இயலாது என்ற செய்தியை, அவன் கேட்கப்பொறுன். அந்நிலை வந்துற்றக்கால் பகைப்படையும் அவன் ஆற்றல் பொறுது. வானத்து மின்னலென ஒளிவீசும் தன் வாளைப் புலித்தோலால் ஆன உறை கழித்து ஏந்திக் களம் புகுவன். தன்னைப் போலவே வாளேந்தி நிற்கும் வீரர்க்குத், தானே தலைவனாகி, ஒருசில வீரர்களைக் கொண்ட அச்சிறு தூசிப்-படையை மட்டுமே, உடன் கொண்டு சென்று, உட்புகற்கு அரியது என உரம் பேசி நிற்கும் பகைப்படை அணிவகுப்பைத் தாக்கிப் போரிட்டுச் சிதறடித்துச் செருவென்று மீள்வன். அவன்தலைமை தாங்கும் அவன் தூசிப்படை. அத்துணை ஆற்றல் மிகுந்ததாகிவிடும். பகைவர்களின் பேரண்களை மட்டுமேயல்லாமல், அப்பகைவரின் பெரிய பெரிய கோட்டை-களையும் பாழ்செய்து விடும், பல்யானைச் செல்கெழுகுட்டுவன் தலைமைக்கீழ்ப் பணிபுரியும் சேரநாட்டுத் தூசிப்படை.

களம் புகுந்தால் வெற்றியல்லது தோல்வி காணு விறல் படைத்த அவன், அரசவை அமர்ந்து அறநெறி அரசு நடாத்தும் வழிவகைகளையும் விளங்க அறிந்திருந்தான். அரசியல் நெறிகாட்டும் அறநூல்களைத், தான் எத்துணைதான் ஐயமறக் கற்றுத் தேர்ந்திருந்தாலும், அறநூல்களை அறிதலும் அறிவித்தலும், அவைகூறும் வேள்விகளை எடுத்தலும் எடுப்பித்தலும், வறியார்க்கு ஈதலும், வளமுடையார்பால் தாம் ஏற்றலும் ஆகிய இவ்வாறு தொழில் அல்லது வேறு தொழி லறியாமையால் விளங்கிய அறிவினராய்த் திகழும், எக்காலமும் அறநினைவாகவே வாழும் அந்தணர் உள்ளிட்ட ஆன்றோர்களை வழிபட்டு, அவர் கூறும் வழிநின்று நாடாளும் வழக்கம் உடையவன் அவன். அதனால் புலவர் பாடும் புகழ் உடைய-யனுயினன். உலகம் அனைத்தும் அவன் உரைவழி நின்று ஒழுகவே, அவன் புகழ் உலகெங்கும் சென்று பரந்தது. அதனால் புகழ் தேடி அவன் போகானாகவும், புகழ்தானே அவனைத் தேடிச் சென்றடையலாயிற்று. இவ்வாறு கற்றும் கேட்டும் சிறந்தோனாய் வாழ்ந்த அவன் சிறப்பியல்பு-களெல்லாம், அவன் வழங்கும் பயன்மிகு இன்சொல் வழியே புலப்படக் கண்டு, பாராட்டிற்று உலகம்.

இவ்வாறு நாட்டவர் போற்றும் நல்லோனாப் நாடாண்ட பல்யானைச் செல்கெழுகுட்டுவன், கணவரைப் பிரிந்த கடுந்-துயரால், தம்மை ஆடை அணிகளால் ஒப்பனைசெய்து கொள்ளவும் விரும்பாது, கண்கலங்கி நிற்கும் காரிகையர் போல் அல்லாது, கணவன்மார், இமைப்பொழுதும் பிரியாது உடனுறையப் பெற்ற பெருமுது பெண்டிரேபோல், அரசமா-தேவி, அணிபல அணிந்து, அழகின் திருவுருவாய் அன்பு கலந்த இன்ப வாழ்க்கையுடையராய் வாழுமாறு, மனையற மாண்பு கண்ட மன்னனாகவும் வாழ்ந்து காட்டி, வியா விழுப்-புகழ் பெற்று விளங்கினான்.

"மனை விழைவார் மாண் பயன் எய்தார் வினைவிழைவார் வேண்டாப் பொருளும் அது" என்ப. நாடாளும் மன்னவன் மனையற வாழ்க்கையிலேயே நாளைக் கழித்துவிடின், அவன் நாடு நலம்பெறாது. மனையறம் எத்துணைதான் மாண்புடை-யேதயாயினும், மனைவி மக்கள் மகிழ, மனையின் கண் இருக்க வேண்டுவது மன்னனுக்கும் வேண்டுமானாலும், பேரரசர்கள் தம் வாழ்நாளின் பெரும் பகுதியை நாடுகாவல் குறித்த பாசறையிலேயே கழித்தல் வேண்டும். நாட்டின் நல்-வாழ்விற்கு அது நனிமிக இன்றியமையாதது. தன் நலனைக்-காட்டிலும், தன் நாட்டவர் நலனையே நாடுவர் நல்லரசர். இதை உணர்ந்தவன் பல்யானைச்செல்கெழுகுட்டுவன். அதனால், வில்நாணைத் தளர்த்தாமலும், தேர்ந்தெடுத்த அம்புகளைக் கைநழுவ விடாமலும், எந்நாழிகையிலும் போர் உணர்வே உடையராய், விழித்தகண் விழித்தபடியே வீற்றிருக்கும், வில்வீரர்கள் போலும் போர் நலம் பலவற்றாலும் நிறைந்துதிருக்கும் பாசறை வாழ்க்கையினையே, பல்யானைச்-செல்கெழுகுட்டுவன் பெரிதும்விரும்பி மேற்கொண்டு வாழ்ந்து வந்தான்.

நீரின் தன்மையையும், அகழ்வாரைத் தாங்கும் நிலத்தின் பொறையையும், தீயின் அழிவாற்றலையும், மலைமுடி உருட்டும் காற்றின் பேராற்றலையும், வானத்தின் பரப்பையும் அளந்து காணல் எவர்க்கும் ஆகாது? அவற்றை ஒரோவழி அளந்து காண்பது இயலும் என்றாலும், பல்யானைச் செல்கெழு குட்டுவனின், அண்டினோரை ஆட்கொள்ளும் அருளுடைமை' நண்பர் பிழைபொறுக்கும் பொறையுடைமை, பகை அழிக்கும் பண்பு, அசைக்கலாகா மெய்வன்மை, பரந்து அகன்ற பேரறிவு ஆகியபண்புகள், ஆகியவற்றை அளந்து காணல் இயலாது, அவன்பால் அத்துணைப் பெருமளவில் அவை குடிகொண்டிருந்தன.

ஆக்க, ஆற்றல், அருமுயற்சி ஆகிய தலைமையல்பால் தன்னேரின்றி வாழ்ந்த பல்யானைச் செல்கெழுகுட்டுவனுக்கு இயற்கையின் பெருந்துணையும் பொருந்த வாய்ந்திருந்தது. ''கோன்நிலை திரிந்திடின் கோள்நிலைதிரிம்; கோள் நிலைதிரியின் மாரிவறங்கூரும். மாரிவறங்கூரின் மன்னுயிர் இல்லை'' என்பது உலகம் கண் உண்மை. பல்யானைச் செல்கெழு-குட்டுவன் அறமுறை அரசு செலுத்தும் அமைவுடைமையால், ஏனைய விண்மீன்களுக்கு இல்லாப் பேரொளி வாய்ந்து வானத்தில் உலாவரும் வெள்ளியாகிய கோள், உலகநலம் காட்டும் குறிப்போடு சிறிதே வடக்கே தாழ்த்து நிற்பதோடு ஏனைய கோள்களும் நலங்குறிக்கும் இடங்களில் நிற்கும். அதனால், பேரொலி எழுப்பும் இடிமுதலாம் கருவிகளோடு மலை முடிகளில் படிந்து, உலகத்து உயிர்கள் எல்லாம் உய்யும் பொருட்டு, வலமாக எழுந்து இடிக்கும், வடகிழக்கிலிருந்து வந்து வீசும் கொண்டல் கொண்டு வரும் நீர் உண்ட கார்-மேகங்கள் தாம் பெய்யவேண்டிய கார்காலத்தில் பெய்யாது பொய்த்து விடுமாயிம், பல்யானைச் செல்கெழுகுட்டுவன் நாட்டில் நாள்தோறும் புதுப்புது வருவாய்கள் பெருகும். அதனால் இவ்வளவுதான் கிடைக்கும் ஆகவே இவ்வளவே உண்டல் வேண்டும் என்ற வரையறை வேண்டாது, வேண்டுமளவு உண்பவரும், தின்பவரும் ஆகிய விருந்தினர்கள் யாவரும், வள்ளைப்பாட்டு என்ற உலக்கைப்பாட்டு ஓயாது ஒலிக்க நெல்லைக் குற்றிக்குற்றிக் பூண் தேய்ந்து போன உலக்கைகளையும், ஆங்காங்கே அடுக்கி வைக்கப்பெற்-றிருக்கும் சோறு சமைக்கும் பெரும்பானைகளையும், ஊனைக் கத்திகொண்டு கொந்தியதால் அதன் குருதிக்கறை படிந்து செந்நிறம் பெற்ற கரிகொந்தும் சட்டைகளையும், அள்ள அள்ளக் குறையாப் பெருஞ்சோற்று மலைகளையும் கண்டு மருண்டு, பல்யானைச் செல்கெழுகுட்டுவன் நாட்டுப் பெருவளப் பெருமையை வியந்து பாராட்டுவர்.

பல்யானைச் செல்கெழுகுட்டுவனின் இப்பெருமையெலாம் கண்டு பேரின்பம் கொண்ட புலவர் பாலைக் கௌதமனார், அப்புகழ் பெருகப் பாராட்டிப் பாடிய பாட்டில், வானகம் விளக்கம் பெறும்படி பேரொளி பரப்பி, வறிதே வடக்கில் தாழ்ந்த, சிறப்பமைந்த என்ற பல்வேறு பொருள் கொண்ட அருந்தொடர்கள் அணியசெய்ய நிற்கும் **சீர்சால் வெள்ளி** என்ற தொடரே அரிய பொருள்நலம் அமைந்திருப்பது கண்டு அப்பாட்டிற்கு அத்தொடரையே பெயராக்கியுள்ளார்கள்.

**24.** ''நெடுவயின் ஒளிறும் மின்னுப் பரந்தாங்குப்
புலி உரை கழித்த புலவு வாய் எஃகம்
மேவல் ஆடவர் வலன் உயர்த்து ஏந்தி
ஆரரண் கடந்த தார் அருந்தகைப்பில்
பீடுகொள்மாலைப் பெரும்படைத்தலைவ !
ஓதல், வேட்டல், அவை பிறர்ச்செய்தல்,
ஈதல், ஏற்றல் என்று அறுபுரிந்து ஒழுகும்
அறம்புரி அந்தணர் வழிமொழிந்த ஒழுகி
ஞாலம் நின்வழி ஒழுகப் பாடல் சான்று
நாடுடன் விளங்கும் நாடா நல்லிசைத்,
திருந்திய இயன்மொழித் திருந்தி இழை கணவ !
குலை இழிபு அறியாச் சாபத்து, வயவர்
அம்புகளைவு அறியாத் தூங்கு துளங்கு இருக்கை
இடாஅ ஏணி இயலறைக் குருசில் !
நீர் நிலம் தீ வளி விசும்போடு ஐந்தும்
அளந்து கடை அறியினும் அளப்பருங்குரையை; நின்
வளம் வீங்கு பெருக்கம் இனிது கண்டிருமே.
உண்மரும் தின்மரும் வரைகோள் அறியாது,
குரைத்தொடி மழுகிய உலக்கை, வயின்தோறு
அடைச் சேம்பு எழிந்த ஆடுறு மடாவின்,
எஃகுறச் சிவந்த ஊனத்து, யாவரும்
கண்டு மதிமருளும் வாடாச் சொன்றி,

வயங்கு கதிர் விரிந்து வானகம் சுடர்வர
வறிது வடக்கு இறைஞ்சிய **சீர்சால் வெள்ளி**
பயங்கெழு பொழுதொடு ஆநியம் நிற்பக்
கலிழும் கருவியொடு கையுற வணங்கி
மண் உயிர் புரைஇய வலன் ஏர்பு இரங்கும்
கொண்டல் தண்தளிக் கமஞ்சூல் மாமழை
கார் எதிர்பருவம் மறப்பினும்
பேரா யாணர்த்தால்; வாழ்க நின் வளனே!''

**துறை: இயன்மொழி வாழ்த்து**
**வண்ணம்: ஒழுகுவண்ணம்**
**தூக்கு: செந்தூக்கு**
**பெயர்: சீர்சால் வெள்ளி**

படைத்தலைவ! திருந்திழை கணவ! குருசில்! அளப்பருங்குரையை, நின் பெருக்கம் இனிது கண்டிகும் (1-17) வெள்ளி நிற்ப, மழை மறப்பினும் (22-29) உண்மரும் தின்மரும் (18) யாவரும் (21) உலக்கை, மடா, ஊனம் கண்டு மருளும் வாடாச் சொன்றிப் (18-22) பேராயாணர்த்து வாழ்க நின் வளன். (30) என கொண்டு கூட்டிப் பொருள்கொள்க.

நெடுவயின் ஒளிறும் மின்னு = உயர்ந்த வானத்தின் கண் ஒளிவீசும் மின்னல். பரந்தாங்கு = பரந்து வெளிப்பட்டது போல். புலி உறைகழித்த = புலித்தோலால் ஆன உறைகழிக்கப் பெற்ற. புலவு வாய் எஃகம் = பகைவர்களின் குருதிக்கறை படிந்துள்ளமையால் புலால் நாறும் வாளை. மேவல் ஆடவர் = எக்காலமும் போரே விரும்பும் வீரர்கள். வலன் உயர்த்து ஏந்தி = வலக்கைகளில் வன்மையாக ஏந்தி. ஆர் அரண் கடந்ததார் = பகைவர்களின் பற்றற்கரிய கடத்தற்கரிய பகைவரது படை வரிசையுள் பாய்ந்து, பீடு கொள்மாலை = வெற்றி கொள்ளும் இயல்பினை உடைய.

பெரும்படைத் தலைவ = பேராண்களை வென்ற தூசிப் படையால். அருந்தகைப்பின் = பகைவரின் பெரிய படைத்தலைவனே. ஓதல் வேட்டல் அவை பிறர்ச் செய்தல், ஈதல் ஏற்றல் என்று அறு புரிந்து ஒழுகும் = வேதம் ஓதல், வேள்விவேட்டல், வேதம் ஓதுவித்தல், கேள்வி வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என்ற ஆறு தொழில்களையும் விரும்பிச் செய்யும். அறம்புரி அந்தணர் = அறநூற் பயனையே விரும்பும் அந்தணர்களை. வழிமொழிந்து ஒழுகி= வழிபட்டு ஒழுகி. ஞாலம் நின்வழி ஒழுக = அதனால் உலகத் தவர் உன்னை வழிபட்டு ஒழுக. பாடல் சான்று = புலவர் பாடும் புகழால் நிறைந்து. நாடு உடன் விளங்கும் = உலகனைத்தும் பரந்த விளங்கும் நாடா நல் இசை = தானே வந்தடைந்த நல்ல புகழையும், திருத்திய இயல்மொழி = திருந்திய இனிய சொற்களையும் உடைய. திருந்திழை கணவ = சிறந்த அணிகள் அணிந்த அரசமாதேவியின் கணவனே! குலை இழிவு அறியாச் சாபத்து=நாணைத்தளத்தி அறியாத வில்லையும். களைவு அறியா அம்பு வயவர்=கைகளி-லிருந்து களைந்து அறியாத அம்புகளையும் உடைய வீரர்கள். தூங்கு துளங்கு இருக்கை = போர் வேட்கையால் விரைந்து செல்லும் விருப்போடு திரண்டிருக்கும் இருக்கையும். இடாசு ஏணி இயல் அறை = வன்மைக்கு ஏதுவாகிய எல்லா நலங்-களும் பொருந்த அமைக்கப்பெற்ற பாசறையும் உடைய குருசில் = வேந்தே. நிலம் நீர் தீ வளி விசும்போடு ஐந்தும் அளந்து கடை அறியினும் = நிலம், நீர், நெருப்பு, காற்று விசும்பு என்ற ஐந்தினையும் அளந்து முடிவு காணினும். அளப்பருங்குரையை = அறிவு முதலிய நின் அரும்பண்பு-களில் அளந்து காண்பதற்கு அரியை ஆகுவை. நின்வளம் வீங்கு பெருக்கம் இனிது கண்டிகும் = நின்வளம் மிக்க பெருநலத்தையாம் இனிது கண்டு மகிழ்ந்தோம். வயங்கு கதிர் விரிந்து = விளங்குகின்ற ஒளிக்கதிர்கள்

விரிதலால். வானகம் சுடர்வர=வானம் எங்கும் ஒளிபெற. வறிது வடக்கு இறைஞ்சிய சீர்சால்வெள்ளி=சிறிதே வடக்கில் சாய்ந்து தோன்றும் புகழ் பொருந்திய வெள்ளியாகிய கோள். பயங்கெழு பொழுதொடு = பயன் பொருந்திய பிற நாண் மீன்களோடு. ஆநியம் நிற்ப=தனக்குரிய நிலைகளிலே நிலைபெற நிற்பதால். கலிழும் கருவியோடு=நீர் சொரியும் மழைத் தொகுதியோடு. கையுறுவணங்கி = பக்கமலைகளில் படிந்து. மன்னுயிர் புரைஇய = உலகத்து உயிர்களை வாழ்-விப்பான் வேண்டி. வலன் ஏர்பு இரங்கும்=வலமாக எழுந்து இடித்து முழங்கும். கொண்டல்தண்தளிக் கமஞ்சூல் மாமழை =கொண்டல் என்னும் கீழ்க் காற்று கொண்டுவரும் குளிர்ந்த நீர்த்துளிகளால் நிறைந்த சூல் கொண்ட கருமுகில் கூட்டம். கார் எதிர் பருவம் மறப்பினும்=மழையை எதிர் நோக்கும் கார் காலத்தில் பெய்யாது பொய்ப்பினும். வரைகோள் அறியாது=வரைந்து உண்ணும் வழக்கத்தை அறியாது. உண்மரும் தின்மரும் = உண்ணுவோரும், தின்னுவோரும். யாவரும்=பிற அவர் ஒழிந்த பிறர் அனைவரும். குரைத்-தொடி மழுகிய உலக்கை = வள்ளைப்பாட்டு ஒலிக்கு ஏற்பக் குற்றிக் குற்றிப் பூண் தேய்ந்துபோன உலக்கைகளையும், வயின்தொறு=காணும் இடம் எங்கும். அடைச்சேம்பு எழுந்த ஆடுறுமடாவின் = இலையோடு கூடிய சேம்பு போலும் வடிவுடைய சோறுசமைக்கும் பெரும்பானைகளையும். எஃகு உறச் சிவந்த ஊனத்து = ஊனை வாள்கொண்டு வெட்டிக் கொந்துவதால் ஊனில் இருந்து ஒழுகும் குருதி படிந்து செந்நிறம் பெற்ற கரிகொந்து கட்டைகளையும். கண்டு = பார்த்து. மதிமருளும் = அறிவு மயங்குதற்குக் காரணமாக. வாடாச் சொன்றி=வற்றாச் சோற்று வளம் வாய்ந்த. பேராயாணர்த்து = நீங்காத புது வருவாயினை உடைத்து. நின்வளன். வாழ்க = அத்தகைய உன் பெருவளம் வாழ்வதாக.

# 5. கான் உணங்கு கடுநெறி

ஒருநாள், புலவர் பாலைக்கௌதமனாரோடு அமர்ந்து அளவளாவிக் கொண்டிருந்த பல்யானைச் செல்கெழுகுட்டுவன், அண்மையில் நிகழ்ந்தபோரில் தன் படைவீரர் பெற்ற வெற்றிப் பெருமை குறிக்கும் பாட்டொன்றைப் பாடியருளுமாறு வேண்டிக் கொண்டான்.

போர் குறித்துப் புறப்பட்டுப் போன நாற்படைப் பெருமையைத் தலைநகரின் தலைவாயிற்கண் இருந்து கண்ணுற்ற புலவர், அப்படையோடு சென்று, அதுபுகுந்த பகைநாட்டு வளத்தையும், அந்நாட்டுப் பேரூர் நலத்தையும் பார்த்து மகிழ்ந்த தம் இருகண்களால், அவை, அப்பெரும் படைகளால் பாழுற்றுப் போன காட்சிகளையும் கண்டவராதலின் வேந்தன் வேட்கையை நிறைவாக்கும் விழுமிய பாட்டை, அப்போதே புனைந்து பாடி, அரசனைப் பேரின்பக் கடலில் ஆழ்த்தினர்.

பல்யானைச் செல்கெழுகுட்டுவன், பகைவர் ஏமாந்திருக்கும் இடமும் காலமும் கருதியிருந்து போர் தொடுக்கும் பழிமிகு போர்ப்பண்பு உடையவனல்லன். அதனால், தன் படையெடுப்பு நிகழ்ச்சியைப், பகை முன் கூட்டியே உணர்ந்து கொள்வார்களாக என்ற உள்ளுணர்வோடு, தன் நாற்படை புறப்படுவதன் முன்பே போர் முரசை முழக்கிவிட்டான். இடியொலியோடு மாறுபடும் பேரொலி எழ முரசு, முழங்கி ஓய்ந்ததும் நாற்படை புறப்பட்டுவிட்டது.

மலைபோல் உயர்ந்த நெடிய பெரிய தேர்களில் வரிசை வரிசையாகப் பூட்டப் பெற்ற போர்க்குதிரைகள் இறக்கை

பெற்றுப் பறக்கும் புள்ளினப் பிறப்புடைய கொல்லோ எனப் பார்ப்பவர் வியக்கும் வகையில் விரைந்தீர்த்துச் செல்ல, தேர் முகட்டில்கட்டப்பெற்ற, விற்பொறித்த வெண்நிற கொடிகள், வானாளாவ உயர்த்த மலை முடிகளிலிருந்து, வெண்ணுரை தெரிக்க உருண்டோடி வரும் மலையருவிகளின் மாண்புமிகு காட்சியைக் காட்டின.

தேர்ப்படைகளைத் தொடர்ந்து சென்ற யானைகளின் கடுத்த பார்வை, கண்டவரைக் கலக்க முறுத்துவதாக, அவற்றின் மத்தகத்திலிருந்து பெருகி வழியும் மதநீர் நாற்றம், பகைவர் நாட்டிலும் சென்று நாறி, அந்நாட்டு மக்களை முன்கூட்டியே மருட்டுவதாயிற்று.

களிற்றுப் படையைப் பின்பற்றிச் சென்றது காலாட்படை. ''படைவீரர் சென்றிரீலர் கொல்லோ? படைக்கலங்கள் மட்டுமே சென்றனகொல்?'' எனப், பார்த்தவர் ஐயுறுத்தக்க வகையில், வாளும், வேலும், வில்லும், கணையுமே எங்கும் காட்சி அளிக்க, வீரர்கள் அணிவகுத்துச் சென்றனர்.

அவ்வாறு சென்ற அவன் நாற்படையைப் பின்பற்றிச் சென்ற புலவர், அப்படை நிகழ்ச்சிகளையும் நேரில் கண்டார். காற்றெனை விரைந்த குதிரைகள், வரிசை வரிசையாகக் குதித்துக் குதித்து ஓடி, வலமும் இடமுமாக வளைய வந்ததன் விளைவால், அந்நாட்டு மேட்டுபுலக் கொல்லைகளெல்லாம் குழிப் பள்ளங்களாகி விடவே, ஏர் நடத்தற்கு இயலாப் பார் நிலங்களாகிப் பாழுற்றுப் போயின. மலைகளோ என மருளத்தக்க பருவுடல் படைத்த யானைகளின், பனையடி நிகர்க்கும் பெரிய கால்களால், பலகால் மிதியுண்ட நன்செய் நிலங்களெல்லாம் அழுந்தி அழுந்தி, கலப்பையின் கொழு முனையும் நுழையலாகா வன்னிலங்களாய் மாறி மாண்பிழந்து போயின. வாள்

வீரரும், வில் வீரரும், வேல் வீரருமாகிய வீரர் கூட்டம் புறநகர் எல்லையை அணுகி விட்டதை அறிந்ததுமே, அப்பேரூர் மக்களெல்லாம் அஞ்சி அகன்று விட்டனராக, மக்கள் வழக்காறு அற்றுப்போன அப்பேரூர் மன்றங்களைக் கழுதையேர் கொண்டு உழுது, வெள்ளைவரகும் கொள்ளும் விதைத்துப் பாழ் செய்து விட்டது, அப்பெரும்படை.

பகைவர்க்குரிய நாட்டையும் நகரத்தையும் இவ்வாறு பாழாக்கிய பின்னர், அந்நாற்படை, அந்நாட்டின் அகத்தே அமைந்திருந்த அரணை வளைத்துக் கொண்டது. நன்செயும் புன்செயுமாகிய நானில வளங்கள் நலிவுற்றன; நகரங்கள் நிலைகுலைந்தன; மக்கள் நாட்டையும் வீட்டையும் மறந்து வெளியேறி விட்டனர் என அடுத்தடுத்து வந்த செய்திகளைக் கேட்டுக் கேட்டுக் கலங்கிக் கையொடிந்து போன அந்நாட்டுக் காவலனும், அந்நாட்டு மக்களேபோல், அரணைவிட்டு வெளியேறி ஓடிவிடவே, அரண் வாயிற் கதவுகளை அடைத்துக் காக்கும் கருவியாம், தாழ்ப்பாள், இடப்படாமல் வந்தே விடப் பட்டது. கடுங்காற்று வீசுங்கால் பற்றி எரியும் காட்டுத் தீயால் இயல்பாகவே அழிவுற்றுக் கிடக்கும் அந்நாட்டுக் காடுகளையும், காட்டுக் கோழியும் பிற காட்டின உயிர்களும் களித்து உலாவும், காட்டு வழிகளையும் வெட்டியும் வீழ்த்தியும், தீயிட்டுப் பொசுக்கியும், அந்நாற்படை மேலும் அழிவுக்குள்ளாக்கி விடவே, அவை, கால்கடுக்கக் கடந்து செல்லும் வறியோரையும், வழிமடக்கிக் கொன்றுயிர் போக்கிவிட்டு, அவர் கொண்டு செல்லும் சிறு கைப்பொருளைக் கொள்ளை யிட்டு வயிறு வளர்க்கும் கொடியோர்களின் வாழிடங்களாக மாறிவிட்டன.

இக்காட்சிகளையெல்லாம் நேரில் கண்டவராதலின், புலவர், தாம் கண்ட அக்காட்சிகளை அப்படியே படம்

பிடித்துக்காட்டுவதுபோலும் அழகிய பாட்டை, அரசன்கேட்ட அப்போதே பாடி, அவனையும் அவனைச் சூழ அமர்ந்திருக்கும் அரசியல் அலுவலரையும் மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதக்கப் பண்ணிப் பேரின்பம் கண்டார்.

காட்டுத் தீயால் வெந்தும், நிழல் தரும் மரங்களை இழந்தும், தண்ணெனக் குளிர்ந்த வெண்மணல் விரவப் பெருமலும் வழிச்செல்வோர் கால்களை வருத்துவதோடு, ஆறலை கள்வர் உடைமையால் வழிச்செல்வோரின் உடலையும் உள்ளத்தையும் ஒருசேர வருத்தும் காட்டு வழியைக் **கான் உணங்கு கடுநெறி** என்று பெயர் சூட்டி அழைத்த பெருமையால், அப்பெயரே பெறுவதாயிற்று.

**25.** “மா ஆடியபுலம் நாஞ்சில் ஆடா;
கடாஅம் செண்ணிய கடுங்கண் யானை
இனம் பரந்த புலம் வளம் பரப்பு அறியா;
நின் படைஞர், சேர்ந்த மன்றம் கழுதை போகி,
நீ உடன்றோர் மன் எயில் தோட்டி வையா;
கடுங்கால் ஒற்றலின் சுடர் சிறந்து உருத்துப்
பசும்பிசிர் ஒள் அழல் ஆடிய மருங்கின்,
ஆண்டலை வழங்கும் **கான் உணங்கு கடுநெறி**
முனை அகன் பெரும்பாழாக மண்ணிய
உரும் உறழ்பு இரங்கும் முரசின், பெருமலை
வரை இழி அருவியின் ஒளிறுகொடி நுடங்கக்
கடும்பரிக் கழற்சிறகு அகைப்ப, நீ
நெடுந்தேர் ஓட்டிய பிறர் அகன்தலை நாடே”.

**துறை : வஞ்சித்துறைப் பாடாண்பாட்டு**
**வண்ணம்: ஒழுகு, சொற்சீர்வண்ணங்கள்**
**தூக்கு: செந்தூக்கும், வஞ்சித்தூக்கும்,**
**பெயர்: கான் உணங்கு கடுநெறி**

முரசோடு, கொடிநுடங்க, பரி அசைப்ப, நீ தேரோட்டிய பிறர்நாடு (10-13), நாஞ்சில் ஆடா; வளம் பரப்பு அறியா; மன்றம் கழுதைபோக, எயில் தோட்டிவையா; அழல் ஆடிய மருங்கோடு, கடுநெறி பாழாக மன்னிய (1-9) எனமாற்றி வினைமுடிபு கொள்க.

உரும் உழற்பு இரங்கும் முரசின் = இடியோசையோடு மாறுபட்டு முழங்கும் போர் முரசொடு. பெருமலைவரை இழி அருவியின் = பெரிய மலைகளைச் சேர்ந்த பக்க மலைகளிலிருந்து உருண்டோடி வரும் அருவிகள்போல், ஒளிறு கொடி நுடங்க = ஒளிவீசும் வெண்துகிற் கொடிகள் அசையுமாறு. கடும்பரி = இயல்பாகவே விரைந்தோடவல்ல குதிரைகள். கதழ்சிறகு அசைப்ப = விரைந்து பறக்கும் சிறகுகள் கொண்ட புள்ளினங்கள் பறந்து ஓடுமாறு. நீ நெடுந்தேர் ஓட்டிய பிறர் அகன்தலைநாடு = நீ நின் நெடிய பெரிய தேரை செலுத்தின பகைவரின் பரந்தகன்ற பெரிய நாட்டில். மாஆடிய புலம் நாஞ்சில் ஆடா = உன் குதிரைப் படைசென்று போரிட்ட கொல்லைகள், கலப்பைகள் தொழில் புரியலாகாக் கரம்பை-களாய் மாறிப்பயன் இழந்தன. கடாஅம் சென்னிய = மதம் சொரியும் மத்தகமும். கடுங்கண் = கருத்த பார்வையும் உடைய. இனம் பரந்தபுலம் = யானைக் கூட்டம் புகுந்த வயல்கள். வளம் பயப்பு அறியா = மீண்டும் வளம்தருதலை அறியாவாறு அழிந்து வன்னிலங்களாகிவிட்டன. நின்-படைஞர் சேர்ந்த மன்றம் = உன் காலாட்படையினர் புகுந்து போரிட்ட பேரூர்ப் பொதுவிடங்கள். கழுதை போகி = கழுதை ஏர் உழுது பாழுற்றுப் போக. நீ உடன்றோர் மன் எயில் = நீ சினந்து படைதொடுத்த நின் பகைவர்க்குரிய நிலைபெற்ற அரண்கள். தோட்டிவையா = தாழ் இட்டு அடைக்க-வேண்டாதவாறு அழிவுற்றுப் போயின. பசும்பிசிர் ஒள் அழல் = செந்நெருப்புப் பொறிகள் சிதறும், ஒள்ளிய நிறம்

வாய்ந்த. கடுங்கால் ஒற்றலின் = கொடிய சூருவளி சுழன்று வீசுவதால். சுடர் சிறந்து = சுடர்விட்டு எழுந்து. உருத்து= கொடுமை மிகுந்து. ஆடிய மரங்கள்=பரந்த இடங்களொடு. ஆண்டலை வழங்கும் = காட்டுக்கோழிகள் திரியும். கான் உணங்கு கடுநெறி = காடுகள் தீய்ந்துபோன கொடிய காட்டு வழிகளும். முனை அகன் பெறும் பாழாக = ஆறலை கள்வர்வாழும், பரந்த பெரிய பாழிடங்களாகுமாறு. மன்னிய = நிலைத்த அழிவுடையவாயின.

ஆடக் கூடாத மா ஆடவே, ஆடவேண்டிய நாஞ்சில் ஆடாதுபோன கொடுமையைக் கூறும் நிலையிலும், ''மா ஆடிய'', ''நாஞ்சில் ஆடா'' என முரண் தொடர் அமைத்துச் செய்யுள் நயம்கொட்ட யாத்திருக்கும் பாலைக் கௌதமனாரின் புலமை நலம் பாராட்டற்குரியது.

தேரில் கட்டப் பெற்றுப் பறக்கும் வெண்துகில் கொடிக்கு, நெடியமலை முகட்டிலிருந்து வெண் நுரை தெறிக்கப் பாயும் நீர் வீழ்ச்சியை உவமை கூறுமுகத்தான், அக்கொடி பறக்கும் தேரின் மலைநிகர் நெடிய வடிவை நினைவு படுத்தும் புலவரின் ஆழ்ந்த புலமை நலத்தில் நாமும் ஆழ்ந்து போவோமாக.

வெற்றி கொண்ட நாட்டின் நிலத்தைக் கழுதை பூட்டிய ஏர் கொண்டு உழுது, வெள்ளை வரகும் கொள்ளும் விளைத்தலை வெற்றியின் சின்னமாகக் கொள்வது மரபாக இருந்து வந்துளது. ''கடுந்தேர் குழித்த ஞெள்ளல் ஆங்கண், வெள்வாய்க் கழுதைப் புல்லினம் பூட்டிப் பாழ்செய்தனை'' (புறம்: 15: 1-3) ''வெள்வாய்க் கழுதைப் புல்லினம் பூட்டி, வெள்ளை வாகும் கொள்ளும் வித்து'' (புறம்: 392: 9-10)

''வடதிசை மன்னர் மன்னெயில் முருக்கிக் கவடி
வித்திய கழுதை ஏர் உழவன்''

(சிலம்பு: 27: 225-226) என்ற தொடர்களைக் காண்க.

# 6. காடுறு கடுநெறி

பல்யானைச் செல்கெழுகுட்டுவன் படைப் பெருமையை-யும், அப்படையால் நலிவுற்ற அவன் பகை நாட்டுப் பாழுற்ற நிலையையும் கூறும்தம் பாட்டைக் கேட்டு மகிழ்ந்து, தம்பால் பெருமதிப்புற்றிருக்கும் நிலைநோக்கி, அவன் படைச் செருக்கால் பிற நாட்டவர்க்கு அளிக்கும் பெருந்துன்பத்தை யும் அவனுக்கு எடுத்துக்காட்டி, அவன் போர் வெறியைப் போக்க விரும்பினார் புலவர் மாலைக் கௌதமனார்.

அவ்விருப்பம் வரப்பெற்ற புலவர் அரசனை அணுகி, "பல்யானைச் செல்கெழுகுட்டுவ! உன் படை வீரரின் பேராற்றலையும் பெருமையையும் பாருலகோர் அனைவரும் அறிவர். அனைத்துயிர்களையும் அழிப்பதல்லது, தான் அழிவுற்றுப் போகா ஆற்றல் வாய்ந்த கூற்றுவன் அனைய ஆற்றல் படைத்தவர் உன் படைவீரர். அவர்கள் சினந்து புகுந்த பேரூர்கள், முருகவேள் சினந்து புக்க சூரன்மூதூர், பீடும் பெருமையும் கெட்டுப் பெரும்பாழ் உற்றதுபோல் உருக் குலைந்து போகும். அத்துணை ஆற்றல் வாய்ந்த அவர்கள், தம் ஆண்மையால் அறிவிழந்து, அறநெறி மறந்து அழிபோர் புரியும் இழிவுடையராகி விட்டனர். கைப்படை இழந்துவிட்ட காளையர், காதல் நெறிகண்டு கற்பு நெறிகாக்கும் காரிகையர் போலும், பொரற்குரியரல்லாதார் மாட்டு மறந்தும் படை தொடாத் தறுகண்மை வாய்ந்தவர். அப்படை புகுந்த உன் பகைவர் நாடுகளில், பேரூர்களெல்லாம் வாழ்வோர் போகிய பாழ் ஊர்களாகி விடவே, அவ்விடத்து மனைகளெல்லாம், பீர்க்கும் பிறவும் படர்ந்த வேலிகளையே யுடையவாகி மாண்பிழந்து போயின. அந்நாட்டுப் பெருவழிகள்,

நெருஞ்சி முட்செடிகள் காடுபோல் வளர்ந்து வழக்கற்றுப் போயின.

''வேந்தே! வாழிடங்களும் வழிகளும் இவ்வாறு வனப்பிழந்துபோகக் கண்டும், அந்நாட்டு மக்கள், இவற்றிற்கெல்லாம், தங்கள் நாட்டு அரசனின் ஆற்றல் இன்மையும், உன்படையாளரின்ஆற்றல் உண்மையுமே காரணங்களாம் என்பதறிந்து, தங்கள்அரசன் மாட்டு அவலமோ, உன் மாட்டு ஆறுச்சினமோ கொண்டு அது தீர்க்கும் வழிவகை வகுக்க முயலாது, 'பருவந்தொறும் பொய்யாது பெய்யும் மழை பொய்த்துப் போகவே, நிலமும் நாடும் வெம்மை மிகுந்து வளம் இழந்து போயின. நம் அல்லற் காலத்தின் விளைவாம் இதுகுறித்து குறித்து யாம் என் செய்ய வல்லேம்? தாம் எத்துணைதான் முயன்றாலும், காலம், தன் கொடுமையைக் காட்டியே தீரும்' என்று எண்ணி, 'அக்காலக் கொடுமை தீருவது எக்காலமோ? அதுகாறும் யாம் வாழ்வது எவ்வாறோ? அந்தோ! யாம் என் செய்வேம்? அவலம்! அவலம்!! எனச் செயல் இழந்து சிந்தை நொந்து, கைபிசைந்து கலங்கி நிற்கும் சிறுமையுடையவராகி விட்டனர்'', என்று கூறி, அவன் வீரர் தம் ஆற்றலை விளங்கப் பாடிப் பாராட்டிப் பெருமை செய்தார்.

புலவர் பாராட்டிய படைப்பெருமை கேட்டு பெருமகிழ்ச்சியுற்ற பல்யானைச் செல்கெழுகுட்டுவன், அவ்வாறு பாராட்டிய புலவர்பால் பெருமதிப்புயுடையனாகி, அவர் மேலும் கூறுவனவற்றைக் கருத்தோடு கேட்கும் பெருவேட்கையுடையனாயினான். அந்நிலையை எதிர் நோக்கியிருந்த புலவர் உடனே ''வேந்தே! இன்று ஊக்கமும் உறமும் இழந்து, செய்வதறியாது சிந்தை கலங்கிச் சிறுமையுற்றுப்போன அந்நாட்டவரையும், வளம் அழிந்து வனப்பிழந்து கிடக்கும் அவர்

நாட்டையும் பண்டு காணும் பேறு பெற்றவர் எவரும், அக்காலே, அந்நாட்டவர்பால், பொருந்தியிருந்த அயரா முயற்சியும், அசைக்கலாகா உள்ளுரத்தையும், அவர்தம் உழைப்பால் உயர்ந்து, உலகு பாராட்டும் உயர்புகழ் பெற்று விளங்கிய அந்நாட்டு வளத்தையும் நினைத்து நினைத்து, அந்தோ! அவர்க்கா இக்கதி; அவர் நாட்டிற்கா, இத்துணைப் பேரழிவு என விழி நீர்சேர, வெந்தழல் மெழுகென, நொந்து மனம் நெகிழ்வர்.

''பல்யானைச் செல்கெழுகுட்டுவ! அந்நாட்டுச் செல்வர்கள் ஊர்ந்து செல்லும் தேர்கள் ஓடுவதினுலேயே அந்நாட்டு நஞ்செய்கள் எல்லாம் நிறை சேருகிவிடும். கோனுக்கிழங்கு தேடும் பன்றிக் கூட்டம் கிளறி விடுவதினுலேயே, புன்செய்கள் எல்லாம் புழுதியாகிவிடும். அதனுல், உழவர்கள் ஏர்கொண்டு உழவேண்டாமலே, உரம்மட்டும் இட்டு விதைத்து விடுவர். அத்துணைத் தொழில்வளம்மிக்கது அந்நாடு. கறவைகளைக் கணக்கின்றிப் பெற்றிருக்கும் அந்நாட்டுப் பேரூர் மனை ஒவ்வொன்றிலும், விடியற்போதில், தயிர் கடைந்து வெண்ணெய் திரட்டும் மத்தொலி முழங்குமாதலின், அக்காலே அம்பேரூர் வீதிகளில், பாணர் முதலாம் இசைவாணர் எழுப்பும் இன்னிசை எதுவும் எவர் காதிலும் புகாது. அத்துனைப் பெருவளனைப் பார்த்து மகிழ்ந்த பல்லோருள் யானும் ஒருவன். அப்பண்டைப் பெருவளனைப் பார்த்து மகிழ்ந்தவர், அந்நாட்டின் இன்றைய பாழ்ப்பட்ட நிலையைப் பார்க்க நேர்ந்தால் அவர் நிலை என்னும்! அவர் உள்ளம் கொள்ளும் துன்பம் எத்துணைக் கொடிதாம்! அந்தோ! அவர் நிலை நினைந்து நெகிழ்ந்து நெக்குருகி நிறைதுயர அடைகிறது என் நெஞ்சு'' என்று கூறிப்புலம்பி, அந்நாட்டின் கொடுமை, அவன்கண்ணிலும் கருத்திலும் படுமாறு பண்ணிவிட்டார்.

சின்னம் சிறு இலைகளும் பெரிய பெரிய முட்களும் மண்டி, மாவும் மாக்களும் கால் ஊன்றிச் செல்லாதவாறு கொடுமை செய்யும் நெருஞ்சிப் புதர் படர்ந்த வழியை, மாவும் மாக்களும் வழிகண்டு செல்லமாட்டாது தளிரும் தழையும் மண்டிக் கொடுமை செய்யும் காட்டு வழியாக உருவகம் செய்யப்பெற்ற சொல்லை அடையாக ஏற்ற, **காடுறு கடுநெறி** என்ற இனிய தொடர் வழங்கப் பெற்றமையால், இப்பாட்டிற்கு அத்தொடரையே பெயராகச் சூட்டிப் பெருமை செய்து உள்ளார்கள் தொல்பொருள் நல்லோர்.

**26.** "தேஎர் பரந்த புலம் ஏஎர் பரவா;
களிறு ஆடிய புலம் நாஞ்சில் ஆடா!
மத்து உரறியமனை இன்னியம் இமிழார்;
ஆங்குப், பண்டு நற்கு அறியுநர் கெழுவளம் நினைப்பின்,
நோகோயானே! நோதக வருமே!
பெயன்மழை புரவு இன்றுகி வெய்துற்று
வலம் இன்று அம்ம! காலையது பண்பு' எனக்
கண்பனி மலிந்நிறை தாங்கிக் கைபுடையூ
மெலிவுடை நெஞ்சினர் சிறுமை கூரப்,
பீர் இவர் வேலிப் பாழ்மனை, நெருஞ்சிக்
**காடுறு கடுநெறியாக** மன்னிய;
முருகு உடன்று கறுத்த கலிஅழி மூதூர்
உரும்பில் கற்றத்து அன்ன நின்
திருந்து தொழில் வயவர் சீறிய நாடே".

**துறை : இயன்மொழி வாழ்த்து**
**வண்ணம் : ஒழுகு வண்ணம்**
**தூக்கு : செந்தூக்கு**
**பெயர் : காடுறு கடுநெறி**

மூதூர் கூற்றத்தன்ன வயவர் சீறியநாடு (12-14), காலையது பண்பு வலம் இன்று அம்ம எனக் கைபுடையூ, நெஞ்சினர் சிறுமை கூர, மாலையாகவும், நெறியாகவும் மன்னிய (6-11), அறியுநர் வளம் நினைப்பின் நோதகவரும்; யான் நோகு (1-5) எனமாற்றி வினைமுடிவு கொள்க.

முருகு உடன்று கறுத்து கலி அழி மூதூர் = முருகவேள் சினம் கொண்டு செருமேற்கொண்டு சென்றதினால் தம் செல்வக்களிப்பிழந்து போன மூதூர்களில் தன் அழிவுத்-தொழிலின் ஆற்றல் காட்டி நின்ற. உரும்பில் கூற்றத்து அன்ன = பிறரால் அழிக்கலாகா ஆற்றல் வாய்ந்த கூற்றுவனை ஒத்த. நின் திருந்து தொழில் வயவர் = அறப்-போர் புரியும் இயல்பினரான உன் படைவீரர். சீறிய நாடு = சினங்கொண்டு புகுந்த நாடுகள். பெயல்மழை = காலம் தவறாது பெய்யும் இயல்புடைய மழை. புரவு இன்றாகி = பெய்யாமல் பொய்த்தமையால், வெய்துற்று = வெப்பம் மிகுந்து. வலம் இன்று = வளம் இல்லாமல் போய்விட்டது. காலையது பண்பு = இது நம் அல்லற்காலத்தின் இயல்பு போலும். என = என்று எண்ணி. கண்பனிமலிந் நிறை தாங்கி = கண்களில், குளிர்ந்து நிறைந்த கண்ணீர்த் துளிகளைத் தாங்கி, மெலிவுடை நெஞ்சினர் = உள்ளுரம் இழந்துபோன அந்நாட்டு மக்கள், கைபுடையூ = செயல் அற்று, அதுகாட்டும் வகையில் கைபிசைந்து. சிறுமை கூர = வருந்திக் சீர் அழிந்து போகுமாறு. பீர்இவர் வேலிப் பாழ்மனை = பீர்க்குப் படர்ந்த வேலிகளையே கொண்ட பாழ்-மனைகளை உடையவராகவும். நெருஞ்சிக் காடு உறு கடுநெறி யாக= நெருஞ்சிப்புதர்கள் காடுபோல் படர்ந்த கொடிய வழி களைஉடையவாகவும், மன்னிய=நிலைத்த அழிவுடையவாகி-விட்டன. ஆங்கு = இவ்வாறு அழிவுற்றுப் போன அந்நாடு களில். தேளர் பரந்த புலம் ஏளர் பரவா = பண்டு, செல்வர்

ஊரும் தேர்கள் செல்வதால் சேறுபட்ட வயல்களில், ஏர்கள் உழுழவேண்டுவது இல்லையாகும். களிறு ஆடிய புலம் நாஞ்சில் ஆடா = கோரைக்கிழங்கு தேடும் பன்றிகள் கிளறியதால் புழுதிபட்ட கொல்லைகளில், கலப்பைகள் தொழில்புரிய வேண்டுவது இல்லையாகும். மத்து உரறியமனை — மத்தொலி முழங்கும் மனைகளில். இன்னியம் இமிழா=இனிய இசை-யொலிகள் எழவேண்டுவது இல்லையாகும்; அல்லது இனிய இசையொலிகளைக் கேட்பது இயலாததாகும். பண்டு நற்கு அறியுநர் = அந்நாட்டின் பண்டைய இப்பெருவளத்தை நன்கு அறிந்திருந்தவர். செழுவளம் நினைப்பின் = இன்று சீரழிந்து போன அச்சிறந்த வளப் பெருமையை நினைந்து பார்ப்பராயின். நோ கவரும்=மிகவும் மனம் நோகவேண்டி-நேரும். யான்நோகு=அந்நாட்டின் நிலையும், அந்நாட்டின் அழிவுநிலை கண்டு கண்கலங்குவார் நிலையும் கண்டு யானும் வருந்துகின்றேன்.

இசைக்கு உருகா உயிரே இல்லை என்பர்; ஆனால் அந்த இசையும் ஒருசில இடங்களில், சில ஒலிகளுக்குத் தோற்றுப் போவது உண்டு. தம் மக்களின் மழலைமொழி கேட்டு மயங்குவார் காதுகளுக்குக் குழலும் யாழும் இன்பம் ஊட்டுவது இல்லை, "குழல் இனிது யாழ் இனிது என்பர். தம் மக்கள் மழலைச்சொல் கேளாதவர்", என்பர் திருவள்ளுவர். அதேபோல், ஒரு தொழிலில் ஒன்றிப்போன தொழிலாளியின் காதுகள், அத்தொழிற்சாலையில் எழும் ஒலி களில் இன்பம் காணுவது இல்லைபோல், அத்தகு தொழில் வளமனம் படைத்தவர் ஆயர் என்பதை விளக்க வந்த புலவர், பாணர் முதலாம் இசைவல்லுநர்கள், விடியற்போதில் ஆயர், பாடி வீதிகளில், தம் இசைத்திறம் எல்லாம் காட்டி ஏழிசை முழக்கினும், ஆயர், தம் இல்லத்தில் தயிர் கடையும் மத்தொலி எழுப்பும் ஒலி கேட்க மகிழ்வதுபோல், அவ்-

வேழிசை கேட்க மகிழ்வது இல்லை, — "மத்து உரறிய மனை இன்னியம் இமிழா"—எனக் கூறிய திறம், பாராட்டிற்கு உரியது.

சென்ற பாட்டில் "மா ஆடிய புலம் நாஞ்சில் ஆடா; யானை இனம் பரந்தபுலம் வளம் பரப்பு அறியா" என்றும்; இந்தப் பாட்டில், "தே ஏர் பரந்தபுலம் ஏளர் பரவர்; களிறு ஆடிய புலம் நாஞ்சில் ஆடா" என்றும் முரண்தொடர் அமையப் பாடியிருந்தாலும், முரண்பாட்டு நிலைமை ஏற்படுவதற்காம் காரணம், இரண்டிலும் ஒன்று அன்று. சென்ற பாட்டில், நாஞ்சில் ஆடவேண்டாவாறு அழிவு செய்து விட்டது மா ஆடல்; வளம்பார்க்க இயலாவாறு அழிவு செய்து விட்டது யானைப் படைப் பரப்பு என்று கூறிய நிலையையும், இந்தப் பாட்டில், நன்செய் நிலங்களை ஏர்கொண்டு உழ வேண்டாவாறு, நன்கு உழுது சேறுக்கி, உறுதுணை புரிந்து விட்டது தேர் ஓட்டம். புன்செய் நிலங்களை நாஞ்சில் கொண்டு ஊழவேண்டாவாறு, உழுது விழுதாக்கி உறுதுணை செய்து விட்டன. கோரைக்கிழங்கு தேடி மண்ணைக் கிளறும் பன்றிகள் என்று கூறிய நிலையையும் காண்க. முன்னதில் காட்டிய காரணம் அழிவை அடிப்படையாகக் கொண்டது. இதில் காட்டிய காரணம் ஆக்கத்தை அடிப்படையாகக் கொண்டது. ஆக, இரு செய்யுள்களிலும், முரண்தொடர் இடம்பெறப் பாடியது மட்டுமல்லாமல், இரு செய்யுள்களிலும் காரணம் முரண்படப் பாடியிருக்கும் புலமை போற்றிப் பாராட்டற்கு உரியது.

# 7. தொடர்ந்த குவளை

பல்யானைச் செல்கெழுகுட்டுவன் பேணிப்பெருமை செய்ய, அரண்மனை விருந்தினராய் வீற்றிருந்த புலவர் பாலைக்-கௌதமனார், ஒருநாள், அவன் நாளோலக்கச் சிறப்பைக் காண அரசவைக்குச் சென்றிருந்தார். ஆங்கு அரசன் சினத்தால் சிவந்த கண்களுடையனாய் வீற்றிருக்கக் கண்டு அண்மையிற்சென்று, அவனுக்குச்சினம் வரப் பண்ணிய சிறு-மதியாளன் யாவன் என வினவினார். தன் சினத்திற்காம் காரணம் இன்னது என்பதையும், அச்சினத்தைச் செந்தீ மூட்டி வளர்த்தவன் இன்ன நாட்டினன் என்பதையும் எடுத்துக் கூறினான் மன்னவன்.

மன்னவன் கூறிய அம்மதியிழந்தானையும், அவன் இருந்து ஆளும் நாட்டினையும் புலவர்பண்டே அறிந்திருந்தார். ஆள்வோன் அறிவின்மையால் அழியப் போகும் அந்நாட்டின் பெருவளக்காட்சி புலவர் கண்களில் நீர் கலங்கப்பண்ணி-விட்டது. சினத்தைக் கிளப்பியவன் செருக்கை அழிக்க வேண்டுவது அரசன் கடமையேயென்றாலும், அதனால் வளம் இழந்து நலிவுறப் போவது நாடும் நாட்டவருமே என்பதை எண்ணியதும், எவ்வாறேனும் அவ்வழிவு நிகழாவண்ணம் தடுத்து நிறுத்துவது இயலாதோ என்ற ஏக்கம் புலவர் உள்ளத்தில் இடம் பெற்றது. பல்யானைச் செல்கெழுகுட்டுவன் படைபுகுந்துவிட்டால், பகைநாட்டு வளம், முற்றும் பாழுற்றுப் போகும் என்பதையும், அவன் படையெடுக்கத் துணிந்து விட்டனாயின் அதைத் தடுத்து போக்குவது இயலாது என்பதையும் அறிவார் என்றாலும், தன்படையெடுப்பால் பாழுறப்போகும் அந்நாட்டின் பல்வளப் பெருமையை

எடுத்துக் கூறினால், 'இத்துணைச் சிறப்புற்ற நாடு சீரழிந்து போவதா? அத்துணைச் சீர்கேட்டிற்கும் நானே காரணமாவதா?' என்று எண்ணிப், படையெடுப்பு நிகழ்ச்சியை ஒருவேளை கைவிடுதலும் கூடும் என்ற நம்பிக்கை எழவே, ஆருச் சினம் மிக்கு நிற்கும் அரசனை அணுகிக் கீழ்வருமாறு கூறலுற்றார்.

''வேந்தே! சினம் மிக்க உன்நோக்கு சென்று விட்டது அந்நாட்டில். ஆகவே, அந்நாட்டின் நலம் அனைத்தும் இன்றே அழிவுற்றுப் போயின. அதில் சிறிதும் ஐயம் இல்லை. அரசே! அவ்வாறு அழிவுறப்போகும் அந்நாட்டின் பண்டைய பெருமையை நீ பார்த்தனையோ? யான் பார்த்திருக்கின்றேன் பன்முறை; கூறுகின்றேன் கேள்; வளம் பெருக வாழ்ந்து, அமைதி நிலவும் நல்லாட்சி நடைபெறும் நாட்டில் மட்டுமே, இசை முதலாம் நுண்கலைகள் நன்கு வளர்ந்திருக்கும் என்ப. உன் பகையை இன்று தேடிக்கொண்ட அந்நாட்டில், இசையை இனிமையுற இசைக்கவல்ல எண்ணிலா இசைவாணர் வாழ்கின்றனர். தொடுத்த மலர் வாடி உதிர்ந்ததும், அதனிடத்தில் புதுப்பூ இட்டுத் தொடுத்து, அவ்வினமலரே ஆங்குத் தொடர்ந்து இடம் பெறும் வகையில் குவளை மலர்களைக் கலந்து அவற்றின் இடையிடையே அன்றலரும் ஆம்பற் பூக்களைத் தொடுத்த தழையுடை உடுத்து, சுருண்டு சுருண்டு கடை குழன்று அழகு செய்யும் தனைமயிரில், பல்வகைப் பூச்களும் கலந்து கட்டிய கண்ணி சூடி, வடித்தெடுத்த கள்ளுண்டு களித்த, ஏழிசைகளையும் எழுப்பித் தாமும் இன்புற்று, பிறரையும் இன்புறுத்துவர் அந்நாட்டு இசைவாணர். அந்நாட்டில் இசைவாணர் மட்டுமே இசையில் வல்லவர் என்பது இல்லை. அவ்விசைவாணர்களின் குடியிருப்புகளுக்கு அணித்தாகவுள்ள வயல்களில் இரைத் தேடித் திரியும், தம் தொழிலால் இட்ட பயிர்களை அழித்துவிட்டு, அணித்தாக

இருக்கும் மருத மரங்களில் சென்று அமரும் பறவைக் கூட்டத்தை, அம்மரங்கள் மீதே ஏறி ஓட்டும் மகளிர் எழுப்பும் ஒலியும், ஏழிசைபோலும் இனிமையே தருவதால், அக்குரலொலி கேட்கும் ஆங்கு வாழ் மயில்கள், அஞ்சி அகன்று ஓடிவிடுவது செய்யாது. அக்குரலை இசைவாணர் எழுப்பும் இசையொலியாகவே எண்ணி மகிழ்ந்து, அம்மகிழ்ச்சி மிகுதியால் தம் தோகை விரித்துக் களித்து ஆடத் தொடங்கிவிடும்.

''மன்னவ! ஏழிசை வளர்க்கும் பண்பாடுமிக்க அந்நாட்டின் வளப்பெருமையையும் சிறிது கூறுகிறேன்; கேட்பாயாக! நீர் தேங்கிக் கிடக்கும் நெடிய குளக்கரையில், நீர் போக அமைத்திருக்கும் மதகுகளில், நாட்டு ஆடவர் மகளிர் அனைவரும் ஏழி இசை இசைக்கவல்லளர். இட்டு அடைத்திருக்கும் ஆதலின் வழியாகக் கசிந்து வெளிப்படும் நீர் பாய்ந்தே வளம் பெருக்கும் வயல்களெல்லாம் அத்தகு நீர் வளம்மிக்க அவ்வயல்களில் நெய்தல், தேனீக்கூட்டம், திரண்டு வந்துசேருமாறு தேன் துளிக்களும் மலர்கள் மலர்ந்து மணம் நாறும். அவ்வயல்களின் இடையிடையே அமைந்திருக்கும் வழிகளின் ஊடே ஊர்ந்து செல்லும் வண்டிகளின் உரம்மிக்க உருளிகள், வயல் சேற்றில் விழ்ந்து ஆழப்புதைந்து போவுழி, வண்டியை ஈர்த்துச் செல்லும் நல்லெருதுகளுக்கு உரமும் ஊக்கமும் ஊட்டுவான்வேண்டு, வண்டியோட்டிகள் எழுப்பும் ஆரவாரப் பேரொலிக் கேட்டிருப்பரே அல்லது, அந்நாட்டுமக்கள், பகைவர் எழுப்பும் போர் ஆரவாரப் பூசலை இன்று வரையும் கேட்டது இல்லை. அத்துணைவளம் மிக்கது அந்நாடு. புதுப்புது வருவாய்களைத் தந்து பெருங்கவின் பெற்றது அந்நாடு. அந்த நாடு இன்று அழிந்துவிட்டது, உன் ஆற்றொணச் சினத்தினால்''.

இவ்வாறு, அவன் சினத்தீயின் சிறப்பு உரைப்பார் போல், அது, எந்நாட்டின் எத்தகைய பெருநலனை அழிக்கப் போகிறது என்பதை எடுத்துக் காட்டும் முகத்தான் தாம் கருதிய கருமத்தை ஒருவாறு நிறைவேற்றினர் புலவர்.

இப்பாட்டில், தொடுப்போர் தொடர்ந்து தொடுப்பதால் இடையற்றுப் போகாமல் இருந்து காட்சி நல்கும் குவளை மலரைத் தொடுப்போர் வினை, தொடரவறாமல், தொடுக்கப்படும் குவளையினைத் **தொடர்ந்த குவளை** என்று கூறியுள்ள நயம் கண்டு, அத்தொடரால் பெயர் சூட்டியுள்ளார்கள், செய்யுள் நலம் காணும் நல்லோர்கள்.

27. ''சிதைந்தது மன்ற, நீ சிவந்தனை நோக்கலின்
**தொடர்ந்த குவளைத்** தூநெறி அடைச்சி
அலர்ந்த ஆம்பல் அகமடிவையர்,
சுரியலம் சென்னிப், பூஞ்செய் கண்ணி,
அரியல் ஆர்கையர், இனிது கூடு இயங்க,
துறைநணி மருதம் ஏறித் தெறுமார்
எல்வளை மகளிர் தெள்விளி இசைப்பின்
பழனக் காவில் பசுமயில் ஆலும்,
பொய்கை வாயில் புனல்பொரு புதவின்
நெய்தல் மரபின் நிரைகள் செறுவின்
வல்வாய் உருளி கதுமென மண்ட
அள்ளல் பட்டுத் துள்ளுபு துரப்ப
நல்எருது முயலும் அளறுபோகு விழுமத்து
சாகாட்டாளர் கம்பலை அல்லது
பூசல் அறியா நன்னாட்டு
யாணர் அறு அக் காமறு கவினே-''

துறை : செந்துறைப் பாடாண் பாட்டு]
வண்ணம்: ஒழுகு வண்ணம்
தூக்கு: செந்தூக்கு
பெயர்: தொடர்ந்த குவளை

மடிவையரும், சென்னி கண்ணிகளையுடைய ஆர்கையரும் ஆகிய இயவர் வாழும் துறை நணிமருதம் ஏறி மகளிர் இசைப்பின், மயில் ஆலும், செருவில் உருளி மண்ட, துள்ளுபு துரப்ப சாகாட்டாளர் கம்பலை அல்லது பூசல் அறியா நன்னாட்டுக் கவின் (2-16) நோக்கலின் சிதைந்தது, எனக் கூட்டிப் பொருள் கொள்க.

தொடர்ந்த குவளை = இடையறவு இன்றித் தொடுக்கப் பெறும் குவளையின். தூநெறி அடைச்சி = முழுமலரையும் சேர்த்து. அலர்ந்த ஆம்பல் அகமடிவையர் = அன்றலர்ந்த ஆம்பல் மலர்களை இடையே தொடுத்து ஆக்கிய தழையாடை உடையவரும். சுரியல் அம் சென்னி = சுருண்ட அழகிய மயிரும். பூஞ்செய்கண்ணி = பூக்களால் ஆன கண்ணியும் உடையவரும். அரியல் ஆர்கையர் = வடித்தெடுத்த கள்ளுண்டு களிப்பவரும் ஆகிய. இனிது கூடு இயவர் இசை இனிது கூட இசைக்குப் இசைவாணர் வாழும். துறைநணி மருதம் ஏறி = நீர்த்துறைக்கு அணித்தாக உள்ள மருத-மரத்தில் ஏறி. தெறுமார் = நெற்கதிர்களைத் தின்னும் பறவைகளை ஓட்டுவான் வேண்டி. எல்வளை மகளிர் = ஒளி வீசும் வளையணிந்த இளம் மகளிர். தெள்விளி இசைப்பின் = தெளிந்த தம் குரலை எடுத்து ஒலி எழுப்புவராயின். பழனக்காவில் வயலைச் சார்ந்திருக்கும் சோலைகளில். பசுமயில் ஆலும் =பசிய மயில்கள் தம் தோகை விரித்து ஆடிக்களிக்கும் இயல்புடையதும். பொய்கை வாயில் புனல்பொரு புதவின் = பொய்கையின் வாயிலிடத்தே அமைந்து புனலால்

தாக்கப்படும் கதவுகளின் கசிகால்களில் பூக்கும். நெய்தல் மரபின் நிரைகள் செறுவின் = நெய்தல் மலர்களில் தேன் உண்ணும் மரபினை உடையவாய வண்டுக் கூட்டம் வந்து மொய்க்கும் வயல்களில் தொழில் புரியும். வல்லாய் உருளி = வண்டியின் உரம் மிக்க உள்வாய் கொண்ட உருளைகள். அள்ளல்பட்டு கதுமெனமண்ட=சேற்றில் இறங்கிச் சட்டென ஆழ்ந்து விட்டனவாக நல்லெருது முயலும், அளறு போகு-விழுமத்து = வண்டியில் பூட்டிய வலிய எருதுகள் கரையேற முயலும், அச்சேற்றினைக் கடந்தேறலாகும் தொழில் தளர்ச்சியின் போது. சாகாட்டாளர் = வண்டியோட்டிகள். துள்ளுபுதுரப்ப = துள்ளி உரப்பி எருதுகளுக்கு உரமும் ஊக்கமும் ஊட்டுவான் வேண்டி எழுப்பும். கம்பலை அல்லது = ஆரவாரப் பேரொலி அல்லது. பூசல் அறியா நன்னாட்டு = பேர்ப்பூசல் அழியா நன்மையுடையதுமாகிய அந்நாட்டின், யாணர் அரு அக்காமருகவின் = புதுவருவாய் குறையாத, கண்டார்விரும் பேரழகு. நீ சிவந்தனை நோக்கலின்=நீ சினந்து பார்த்துவிட்டமையால். சிதைந்தது மன்ற = உறுதியாகச் சிதைந்து விட்டது காண்.

மருத நிலத்து வயல்களில் வளர்ந்திருக்கும். நெல் மணிகளை மயில் கூட்டம் கலந்துண்ண முனைவதும், அவற்றை மகளிர் கூட்டம் ஓட்ட முனைவதும் அம்மயில்கள், மகளிர் ஓட்டவும். ஓடி விடுவதற்கு மாறுக, அவ்வயல் வரம்புகளில் வானளாவ வளர்ந்து நிற்கும் மருதமரத்துக்கிளைகளில் சென்று தங்குவதுமாகிய. இனிய காட்சிகளை இலக்கிய நயம் சொட்டப் பிற புலவர்களும் பாடியுள்ளனர். ''செந்நெல் உண்ட பைந்தோட்டு மஞ்ஞை, செறிவளை மகளிர் ஒப்பலின் பறந்தெழுந்து துணை நணி மருதத்து இறுக்கும் மூதூர்'' (புறம்: 344: 1-3) என்ற பாடலைக் காண்க.

சேற்றில் சிக்குண்ட பெரும்பாரம் ஏற்றிய வண்டியினை ஈர்த்து ஏற்றுமாறு எருதுகளைத் துரத்தும் வண்டியோட்டியும், உழவர்பெருமக்களும் உரத்து எழும்பும் ஒலி, மருத நிலவளத்திற்கு ஓர் இனிய எடுத்துக்காட்டாகப் புலவர்கள் பாடி-யுள்ளனர். ''அள்ளல் தங்கிய பகடுறு விழுமம், கள்ளார் களமர் பெயர்க்குப் ஆர்ப்பு'' (என்ற மதுரைக்காஞ்சி வரிகளைக் (259-60) காண்க.

# 8. உருத்துவரு மலிர்நிறை

பல்யானைச் செல்கெழுகுட்டுவனின் பாராளும் பெருநெறியை நேரிற் காணவிரும்பிய புலவர் பாலைக் கௌதமனார், சேரநாட்டின் சிற்றூர் பேரூர்களையெல்லாம் சுற்றிப் பார்த்து வரப் புறப்பட்டார். அவ்வாறு அவர் புறப்பட்ட காலம், கொடிய கோடைகாலம். மாரிக்காலத்தில் உண்ட மழை நீரைக் கோடைக்காலத்தில் அருவிகள் வாயிலாக உமிழும் இயல்புடைய பெருமலைகள் மலிந்தது அவன்நாடு. உயர்ச்சி மிகுதியால் குளிர்ந்து மழைநீர் மிகுதியால் மரங்களும் செடிகளும் மலிந்து மாண்புற்றுத் திகழும் அம்மலைகளும், அருவிகள் வறண்டு வெடித்துப் பொடிபட்டுப் பொலிவிழந்து போகுமாறு வெப்பத்தை வாரிக்கொட்டும் கொடுமை மிக்கது அக்கோடை.

கோடையின் கொடுமை தாங்கமாட்டாது தளர்ந்த நிலையில் சேரநாட்டுள் புகுந்த புலவரை வரவேற்றது பேரியாறு. சோணாட்டிற்குக் காவிரி போலவும், பாண்டி நாட்டிற்கு வையை பொருநை போலவும், சேரநாட்டிற்கு வளங்கொழிப்பது பேரியாறு. அது, அக்கோடையிலும் இருகரை புரண்டோடிக் கொண்டிருந்தது. சேரநாட்டவர் சிறந்த அறிவுடையவர். உழவின் சிறப்பறிந்தவர். உழைப்பின் பெருமை அறிந்தவர். அவர்கள், கோடையிலும் பெருக்கெடுத்தோடும் பேரியாற்றுத் தண்ணீர் பயனற்றுப் போக விடுவரோ? சிறியவும் பெரியவுமாய வாய்க்கால்களை வரம்பின்றி வெட்டி வைத்திருந்தனர். அவ்வாய்க்கால் வழியே புகுந்தோடிய பேரியாற்றுநீர், நீர் ஏறிப் பாயமாட்டா மேட்டுநிலம், ஆகவே ஆடும் மாடும் மேய்வதற்காம் மேய்-

புலக்கரம்பையாகியக் கழிக என ஒதுக்கிவிட்ட கரம்புகளிலும் புகுந்து, அந்நிலத்து வெடிப்புகளையும் நிரப்பிப் பாய்ந்தது சேரநாட்டோடு பகைகொண்டு சினம்மிகுந்து, போர்ப்பூ அணிந்து சீறிப் பாய்ப்பவர்போல், இடைவழியில் குறுக்கிட்ட மலரும் தழையும் மறைக்க விரைந்தோடி வரும் பேரியாற்றின் பேரிரைச்சலும், ஆற்று நீரைக் கால்வாய்களில் கட்டித் திருப்புவோரும், அது உடைத்துக் கொண்டு ஓடும் மடைகளை அடைப்போருமாகிய உழவர் எழுப்பும் ஆரவாரப் பேரொலியு-மல்லது, பகைவர் புகக் கண்டோ, பசியும் பிணியும் வருத்தக் கண்டோ கண்ணீர் சிந்தி அழுவார் ஒலி நாட்டில் இல்லை.

பேரியாற்றின் பெருமை, அப்பேரியாற்றைப் பயன் கொண்டு வளம் பெருக்கும் அந்நாட்டு மக்களின் மாண்பு ஆகியவற்றைச் கண்டு களிப்புற்றவாறே, புலவர் சேர நாட்டின் நலைநகருள் புகுந்தார். ஆங்கு அவர் கண்டகாட்சி பல்யானைச் செல்கெழுகுட்டுவனின் பகைவெல்லும் போர் வன்மையைப் பறை சாற்றுவதாய் இருந்தது.

பல்யானைச் செல்கெழுகுட்டுவனின் பகைவர் ஆற்றல் அற்றவரோ, படைவலம் இழந்தவரோ அல்லர். போர் முறை தெரிந்தவர். அறிந்த போர் முறை நெறி நின்று, எதிர்த்தாரை அழித்தொழிக்கவல்ல பேராண்மையும், போர்த் தந்திரமும் கைவரப் பெற்றவர். அவர்பால் கணக்கற்ற களிறுகளைக் கொண்ட பெரிய நாற்படையும் இருந்தது. அத் துணை ஆற்றல் வாய்ந்த அப்படைகளையும் அழித்து, அவ்வரசர்களையும் வென்று, வீறு பெற்றான் பல்யானைச் செல்கெழுகுட்டுவன். அவனுக்கு அத்துணைப் பெருவெற்றி கிட்டத் துணை புரிந்தவர், அவன் வில்வீரர். காலில் கழல் புனைந்து களம் புகுந்தால், அவர்கள் விற்களிலிருந்து புறப்படும் அம்புகள், ஆழப் புதைந்து ஆக்கிய பகைவர்

மார்ப்புப் புண்களிலிருந்து பெருக்கெடுத்துப் பாயும் குருதி வெள்ளத்தால் கழலும் காலும் கறைபட்ட நிலைகண்ட பின்னரும், களம்விட்டுப் பெயரார் அப்படை வீரர். பகைவர் அறவே அழிந்து, குறைவிலாப் பெருவெற்றி பெற்றுன் கோமகன் என்பதை அறிந்த பின்னரே வில்நாணைத் தளர்த்துவர். இதையெல்லாம் பலர் கூறப், புலவர் பண்டே அறிந்திருந்தார்.

அத்துணைச் சிறந்த வில்லாளராகிய அவர்கள் நிலையை இன்று நோக்கிய புலவர், அவ்வில் வீரர்தாமா இவ்வில்வீரர் என்று ஐயுறவேண்டியவரானுர். வில்லில் நாண் பூட்டுவது எவ்வாறு என்பதும் அவர்களுக்குத் தெரியவில்லை. தம் விற்-போர் முறையை அந்த அளவிற்கு மறந்துவிட்டிருந்தார்கள். அந்நிலை கண்டு வியப்பு மேலிட்ட புலவர், அவர்களையே அணுகி, ''ஆற்றல்மிக்கீர்! இந்நாட்டின் அமைதி நிலவும் நல்லாட்சிக்குக் காரணமாய் உங்கள் வில்லாற்றலை உலகம் வியந்து பாராட்டக் கேட்டுளேன். ஆனுல், அத்துணைச் சிறந்த வில் வீரர்களாகிய உங்களை நேரில் கண்டக்கால், உங்களுக்கு அவ்விற்போர் முறையில் தொடக்க நிலை அறிவு தானும் வாய்க்கப் பெறவில்லை என்பதைக் காணுகின்றேன். என்னே இம்முரண்பட்டநிலை! இத்தகு மாற்றத்திற்குக் காரணம் என்னையோ? மனைவி, மக்களை மறந்து, மறவுணர்வு மிக்கு, போர்க்கள வாழ்க்கையில் தம்மை இணைத்துக் கொண்டு, வாழ வேண்டியவர்கள். மனைவி மக்களோடு மகிழ்ந்து வாழும் மனையற வாழ்க்கையில் மகிழ்ந்து கிடக்கின்றனரே; என்னையோ இதற்குக் காரணம்!'' என்று வினவினுர்.

அது கேட்ட அவ்வில்வீரர்களுள் தலையாய ஒருவன், ''அறிவுசான்ற பெரியீர்! நீவிர் எம்மைக் குறித்துக் கேட்டதும்

உண்மை; இன்று காண்பதும் உண்மை. பண்டு பேராற்றல் பெற்றிருந்த யாங்கள், இன்று போர் முறையையே மறந்து கிடப்பதற்கு எம் அரசன் ஆட்சி முறையே காரணம். அவன் ஆட்சி நலத்தால் நாடு பகையற்று விட்டது. பகையில்லாது போகவே, போர் நிகழ்ச்சிக்கு இடம் இல்லாது போயிற்று இந்நிலைப் பல்லாண்டு காலமாகத் தொடர்ந்து நிலை பெறுவதால், படைக்கலத்தைத் தொடவேண்டிய வாய்ப்பே எங்களுக்கு கிட்டாது போயிற்று. அதனால், அப்பயிற்சியும் அறவே மறந்து போய்விட்டது. யாதுசெய்வோம்! அம்மட்டோ? கோடையினும் கரைபுரண்டு ஓடும் பேரி-யாற்றைப் பெற்றுளது நாடு; அதனால் வயல் வளமும், அது தொடர்பாகப் பல்வேறு வளமும் நாட்டில் மண்டிக்கிடக்-கின்றன. அதனால் போர் குறித்து மட்டுமல்லாமல், பொருள் தேடல் குறித்தும், பிறிதோரிடம் செல்ல வேண்டிய நிலை எங்களுக்கு வாய்க்கவில்லை. ஆகவே, மனைவி மக்களோடு வீட்டிலேயே அடைபட்டுக் கிடக்கிறோம் நாங்கள்'' என்று விடையிறுத்தான். அது கேட்ட புலவர் உள்ளம், பல்யானைச் செல்கெழுகுட்டுவனின் பாராளும் பெருமையை எண்ணிப் பெருமிதம் கொள்ள, அவர் வாய் நாவாரப் பாராட்டிப் பாடல் புனைந்து பெருமை செய்தது.

அப்பாட்டில், பகைவர் படைகொண்டு புக அஞ்சும் பேராற்றல் வாய்ந்தவன் பல்யானைச் செல்கெகுட்டுவன் என்ற உண்மையையும், பேராற்றுப் பாய்ச்சலால் பயன்மிகும் பெருமை வாய்ந்தது அவன் நாடு என்ற உண்மையையும் போர்ப்பூ அணிந்து புகும் பகைவர் படைபோல், மலரும், தழையும் மறைக்க மண்டிப் பெருகும் பேரியாறு என்ற பொருள் பொதிந்த **உருத்துவரு மலிர்நிறை** என்ற தொடர் உணர்த்தும் நயம் கண்டு, அத்தொடரால் அப்-பாட்டிற்குப் பெயர் சூட்டியுள்ளார்கள் நல்லோர்.

28. ''திருவுடைத்து அம்ம! பெருவிறல் பகைவர்
பையங்கண் யானைப் புணர்நிரை துமிய
உரம் துரந்து எறிந்த கறை அடிக் கழற்கால்
கடுமா மறவர் கதழ் தொடை மறப்ப
இளைஇனிது தந்து விளைவு முட்டுறுது
புலம்பா உறையுள் நீ தொழிலாற்றலின்
விடுநிலக் கரம்பை விடர் அளை நிறையக்,
கோடை நீடக், குன்றம் புல்லென,
அருவிஅற்ற பெருவறற் காலையும்
நிவந்து கரை இழிதரும் நனந்தலைப் பேரியாற்றுச்
சீருடை வியன்புலம் வாய்பரந்து மீகீஇயர்,
உவலை சூடி உருத்துவரு மலிர்நிறைச்
செந்நீர்ப் பூசல் அல்லது
வெம்மை அரிது நின் அகன்தலை நாடே''.

**துறை: நாடு வாழ்த்து**
**வண்ணம்: ஒழுகு வண்ணம்**
**தூக்கு: செந்தூக்கு**
**பெயர்: உருத்துவரு மலிர்நிறை**

நீ தொழில் ஆற்றலின் (1-6) நின் அகன்தலைநாடு (14) வெம்மை அரிது(14) திருவுடைத்து(1)எனக் கூட்டிப் பொருள் கொள்க.

பெருவிறல் பகைவர் = பெருவலி படைத்த பகைவருடைய. பைங்கண் யானைப் புணர்நிரை துமிய = கூரியகண்களை உடைய யானைகளைக் கொண்ட படைவரிசை அழியுமாறு. உரம் துரந்து எறிந்த = ஆற்றல் அனைத்தும் காட்டிப் போரிட்டு வென்ற. கறை அடிக் கழற்கால் கடுமா மறவர் = பகைவர் குருதிக்கறை படிந்த, வீரக்கழல் புனைத்த

கால்களையுடைய, குதிரைபோல் விரைந்து போரிடவல்ல வில்-வீரர்கள். கதழ்தொடை மறப்ப = விரைவாக அம்பேவும் தம்தொழிலை மறந்து போடும்படி. இனை இனிது தந்து = நாடுகாவல் தொழிலை நன்கு நடாத்தி. விளைவு முட்குறுது = விளைநலம் குறைவுறுமல் புலம்பா உறையுள் நீ தொழில் = ஆற்றலின் இல்லக்கிழக்தியரை விட்டுப் பிரிந்து தனித்-துறையும் வாழ்க்கையைப் பெறவேண்டுவதில்லா நின் வீரரை போலவே. கூடிவாழும் வாழ்க்கைநலம் வாய்க்கப் பெற்ற நீ ஆட்சி புரிவதால். கோடை நீட = கோடைகாலம் நீட்டித்தலால். குன்றம் புல்வென = குன்றுகள் பொலிவிழந்து போடுமாறு. அருவி அற்ற பெருவற்ற காலையும் = அருவிகள் நீர் அற்றுப் போன பெரிய வறட்சி உற்ற காலத்திலும், விடுநிலக்கரம்பை = மேய்புலத்திற்கு எனக் கழித்து விடப்பட்ட கரம்பு நிலங்களின். விடர் அளை = நிறைய வெடிப்புகளிலும் நீர் நிறைந்து தேங்குமாறு. நிவந்து = பெருகி. கரை இழிதரும்=கரைபுரண்டு ஓடும். நனந்தலைப் பேரியாற்று= இடம் அகன்ற பேரியாற்றின், சீருடை வியன்புலம் = பாய்ச்சலால் பயன் கொண்டு சிறப்புமிகும் விளை வயல்கள். வாய்பரந்து மீகீஇயர் = மிகப்பலவாகி மேலும் வளர்தல் வேண்டி, உவலை குடி=தழைகளைச் சுமந்து, உருத்துவரு மலிர் நிறை=கிம்மிக்கு விரைந்து பாயும் பேரியாற்றின், செந்நீர்ப் பூசல் அல்லது = நீர்பாய்வதால் எழும் ஆரவாரமல்லது, நின்அகன்தலை நாடு = பரந்து அகன்ற உன் நாடு. வெம்மை அரிது = வேறு கொடுமையை அறியாது, திருவுடைத்து = ஆகவே கண்டாரால் விரும்பப்படும் கவின் உடைத்து.

மாலையும், கண்ணியும் சூடி விரையும் மன்னர் போல் மலரும் தழையும் மிதக்கப் பாயும் பேரியாற்றின் பெருமையை, "கோங்கம் வேங்கை, தூங்கிணர்க் கொன்னை, நாகம், திலகம், நறுங்காழ் ஆரம், முதிர்பூம் பரப்பின் ஒழுகு புனல்

ஒழித்து, மதுகரம், ஞிமிறொடு வண்டினம் பாட நெடியோன் மார்பில் ஆரம் போன்று பெருமலை விலங்கிய பேரியாறு'' (சிலம்பு : 25: 17-22) என இளங்கோவடிகளார் பாடப் பாராட்டியுள்ளார்.

# 9. வெண்கை மகளிர்

மருத்வளத்தால் மாண்புற்றது அந்நாடு. நீர்வளமும் நிலவளமும் ஒருங்கே பெற்றிருந்தமையால் பார்க்குமிடம் எங்கும்,நெல்விளையும் நன்செய்களே காட்சி அளிக்கும். வளம் மிகுதியால், நெற்கதிர்கள் நிமிர்ந்து நிற்கமாட்டாக் கனமுடையதாகித் தலைசாய்ந்து, வரப்புகளிலும் வயல்களிலும் வீழ்ந்து கிடக்கும். வயல்களிலும் வாய்க்கால்களிலும் நீர் அடையறுதிருக்குமாதலின், அவ்விடங்களில் அயிரை முதலாம் பல்வேறு மீன் வகைகள் ஒன்று பலவாகப் பெருகி விளையாடித் திரியும். வயல்களை அடுத்து வாழைகளும், அவற்றிற்கு அணித்தாக, மா மருதம் காஞ்சி போன்ற மரங்களும் வளமுற வளர்ந்து வானளாவ உயர்ந்து நிற்கும். வாழையும் நெல்லும் வளங்கொழிக்கும் அவ்வயலருகே, வளையணியும் பருவமும்-வாய்க்கப்பெறாத கன்னிஇளம்மகளிர் ஆடியும் பாடியும் திரிவர். அவர்கள், வயலில் முற்றித் தலைசாய்ந்து கிடக்கும் செந்நெற்கதிர்களைக் கொய்து வத்து, உரலில் இட்டு அவல் இடித்து உண்டும், அது தீர்ந்ததும், உலக்கைகளைச் சார்த்த வேறு சார்பிடம் காணாமையால் வாழை மரங்களில் சார்த்தி-விட்டு, வயல்களில் மலர்ந்து மணக்கும் வள்ளைமலர்களைப் பறித்துச் சூடி மாண்புற்றும், இடையிடையே வயல்களில் இரைதேடி அலையும் நாரைகளையும், வாய்க்கால்களில் அயிரை மீன் உண்டு பசியாறிய பின்னரும், அவ்விடம் விட்டு அகலாமல், வயலருகு மரங்களில் அமர்ந்திருக்கும் கொக்கும் புறாவும், உள்ளலும் போலும் நீர்ப்பறவைக் கூட்டங்களை விரட்டி அடித்தும் விளையாடி மகிழ்வர்.

இவ்வாறு வயல்வளத்தால் சிறந்து விளங்குதலின், அப்பேரூர்களில் எக்காலமும் ஏதேனும் ஒவ்வொரு காரணம்

கருதி எடுக்கும் விழாக்கள் ஒழிவின்றி நிகழ்ந்து கொண்டே யிருக்கும். விழாக்காண வேற்றூர் மக்களும் வந்து குழுமுவர். அதுகுறித்து வரும், பாணர் முதலாம் இசைவாணர்கள், தம் இசைக்கருவிகளோடு, அப்பேரூர்ப் பொதுவிடங்களிலும், வீதிகளிலும் புகுந்து இசைபாடிச் செல்வர். இத்தகைய பெருவளமும் பண்பாடும் மிக்க பேரூர்கள், பலப்பல கொண்ட பெருமையுடையது அந்நாடு.

ஆனல், அந்நாட்டின் இப்பெருமையெல்லாம் ஒரு காலத்தில் இருந்தன. இன்று, அதை நாடு எனக்கூறுவதற்கும் நாவராது. அத்துணைக் கேடுற்றுவிட்டது அது. பண்டொரு காலத்தில், அது அத்துணைப் பெருமை பெற்றிருந்தது உண்மை. அது, பல்யானைச் செல்கெழுகுட்டுவனின் படை, அந்நாட்டின் மீது போர் தொடுக்காத முன்பு.

வளம் மிக்க நாடு பெற்ற அந்நாட்டு அரசனுக்கு, ஒரு பேரரசன் பகையைத் தேடிக் கொள்வது பொருந்தாது என்ற அறிவாவது இருக்க வேண்டும். அல்லது தன் நாட்டின் பெருவளம் கண்டு பிறநாட்டவர் போர் தொடுத்தால், அப் படையெடுப்பை எதிர்த்து அழித்துத், தன் நாட்டைக் காத்துக் கொள்ளவல்ல, வரம்பின்றிப் பெருகிய பெரும்படையாவது வைத்திருக்க வேண்டும். இரண்டும் இல்லை அவன்பால். அவன் நிலை இருவாக இருப்பவும், பல்யானைச் செல்கெழுகுட்டு வனின் பகையைத் தேடிக் கொண்டான் அந்நாட்டரசன்.

மயிர் சீவாது, ஆனல் அம்மயிர் அகத்தே அடங்கிப் புறம் தோன்ருமல் இருக்குமாறு போர்த்துப் பண்ணிய போர் முரசிற்குத், தினை முதலாம் கலங்களை, வீரர் தம் மார்பைக் சீவிக் கொண்ட குருதியில் கூலந்து தூவிப் பலியூட்டிப், போர் முரசு கொட்டி விட்டான் பல்யானைச் செல்கெழுகுட்டுவன்,

அம்முரசொலி கேட்டாவது, அந்நாட்டரசன் அஞ்சி அடங்கினனு என்ருல் இல்லை. எதிர்த்து நின்ருன். தன்பால் ஓர் அரிய கோட்டை உளது என்ற செருக்கு அவனுக்கு. அதனுல் சீரழிந்து போனுன். பல்யானைச் செல்கெழுகுட்டுவனின் வரம்பிலாப் பெரும் படையில், ஓர் அங்கமாய் வரும் யானைக் கூட்டத்திற்கு, அக்கோட்டை எம்மாத்திரம்! அதன் தாக்குதலை அரைநாழிகையும் தாங்க மாட்டாது தகர்ந்து விட்டது கோட்டை. அரண் அழிவுற்றதும், அப்படை நாட்டுள் புகுந்தது. படை புகுந்தால் பாழுருத நாடும் உண்டோ? வளம் அழிந்து, வனப்பு இழந்து பாழுற்றுப் போய்விட்டன; அந்நாட்டுப் பேரூர்கள் எல்லாம். பண்டு விழாமலிந்திருந்த வீதிகளில், இன்று வாழ்வோரைக் காண்பதும் அரிதாகிவிட்டது. அக் கொடுமையைக் கூறவும் கூசிற்று நாக்கு.

தன்நாட்டு இயற்கைப் பொருள்களின் நிகழ்ச்சியைத், தன் அரசியல் நிகழ்ச்சியோடு தொடர்பு படுத்திக்காணும் அறிவு, அவ்வரசனுக்கு இருந்திருக்குமாயின், அவ்வழிவினை வராது தடுத்திருக்கலாம். அவல் இடிக்கும் மகளிர்பாடும் வள்ளைப்பாட்டின் ஒசை கேட்ட அப்போதே, நாரை முதலாம் நீர்ப் பறவைகள், ''மகளிர் வந்துவிட்டனர்; ஆகவே, வயல்களை விட்டு வெளியேறி, அவர் கண்ணிற்படா இடம் சென்று,கரந்து கொண்டால், அவர் மறைத்ததும் இரைதேடும், நம் தொழிலை இழவாமல் மீண்டும் தொடங்கலாம்'' என்று எண்ணி அகன்ருேடி அடங்கியிருந்தால், மகளிர் அவற்றை, அவற்றின் வாழிடமாகிய மரங்களிலும் தங்கவிடாது விரட்டி யிருக்கமாட்டார். அதைவிடுத்து, அவர் வந்தபிறகும், அயிரை கவரும் தம் அடாத் தொழிலை விடாது மேற்கொண்டமையால், அவர்களால் விரட்டப் பெற்றன. இதை உணர்ந்து பல்யானைச் செல்கெழுகுட்டுவன் முரசொலி கேட்டபோதே

அஞ்சி ஓடி அடங்கியிருந்தால், சேரலாதன் படை அச்சிற்றரசன் நாட்டில் புகுந்திராது. அப்படை, அவன் நாட்டைக் கடந்து அப்பாற் சென்றதும், பண்டேபோல், தன் பெருவளப் பேரின்ப வாழ்வில் மிதந்திருக்கலாம். ஆனால், அம்முரசொலி கேட்டும், அடங்காது எதிர்சென்றதால் வந்துற்றது இவ்வழிவுநிலை.

பகைவன் நாட்டு இயற்கை நலத்தைப் பாராட்டுவார்போல், பகைவன் அறிவின்மையே இவ்வழிவிற்குக் காரணமல்லது, பல்யானைச் செல்கெழுகுட்டுவனின் போர் வெறி காரணமாகாது என்பதை, உரையாது உணர்த்துச் சென்றுள்ளார் புலவர். புலவர் பாடிய இப்பாட்டின் ஒவ்வொரு சொல்லும் இனிக்கிறது என்றாலும், வளையல் அணியவும் அறியாத இளம்மகளிர், ஆடுதல் தவிர்த்து அடுதல் முதலாம் தொழில் எதுவும் கல்லாத கன்னியர் எனப் பல்வேறு பொருள்நலம் தோன்றத் தொடுத்துள்ள **வெண்கை மகளிர்** என்ற தொடரே, சாலச் சிறப்புடைத்தாதல் கண்டு, இப்பாட்டிற்கு, அத்தொடரையே பெயராகச் சூட்டிப் பெருமை செய்துள்ளார், யாரோ ஒரு பெரியார்.

**29.** "அவல் எறிந்த உலக்கை வாழைச் சேர்த்தி
**வளைக்கை மகளிர்** வள்ளை கொய்யும்
முடந்தை நெல்லின் விளைவயல் பரந்த
தடம்தாள் நாரை இரிய, அயிரைக்
கொழுமீன் ஆர்கைய மரந்தொறும் குழாஅலின்,
**வெண்கை மகளிர்** வெண்குருகு ஒப்பும்
அழியாவிழிவின், இழியாத் திவவின்,
வயிரிய மாக்கள் பண் அமைத்து எழீஇ,
மன்றம் நண்ணி மறுகு சிறைபாடும்
அகன்கண் வைப்பின் நாடு மன்; அளிய!
விரவு வேறு கூலமொடு குருதி வேட்ட

மயிர்புதை மாக்கண் கடிய கழற
அமர்கோள் நேர் இகந்து ஆர் எயில்கடக்கும்
பெரும்பல் யானைக் குட்டுவன்
வரம்பில் தானை பரவா ஊங்கு''.

**துறை : வஞ்சித்துறைப் பாடாண்பாட்டு**
**வண்ணம் : ஒழுகு வண்ணம்**
**தூக்கு: செந்தூக்கு**
**பெயர்: வெண்கை மகளிர்**

தானை பரவாவூங்கு (11-15) நாடு மன்! அளிய! (1-10) எனக் கூட்டிப் பொருள் கொள்க.

விரவு வேறு கூலமொடு = வேறு வேருகக்கலந்த, தினைமுதலாம் பல்வேறு கலங்களோடு. குருதி வேட்ட = குருதிப் பலியும் விரும்பிப் பெற்ற. மயிர் புதை மாக்கண் = மயிர் மறையும்படிப் போர்த்தியகரிய கண்அமைந்த போர் முரசு. க டி ய க ழ ற = சேணிடத்தில் உள்ளாரும் கேட்டு நடுங்குமாறு முழங்க. அமர்கோள் நேர் இகந்து = பகைவர் போர்கொண்டு எழுதலை ஏற்று அவரை வென்று கடந்து. ஆர் எயில் கடக்கும் = கைப்பற்றுதற்கு அரிய அப்பகைவர் கோட்டையை அழித்து கைப்பற்றும். பெரும்பல்யானைக் குட்டுவன் = பல்யானைச் செல்கெழுகுட்டுவனின். வரம்பில் தானை = வரம்பற்ற பெரும்படை. பரவாவூங்கு = பரந்து சென்று அழிப்பதன்முன், பகைவர் நாடுகள். வளைக்கை மகளிர் = வளையணிந்த மகளிர். அவல் எறிந்த உலக்கை = அவல் இடித்த உலக்கையை; வாழை சேர்த்தி = வாழை மரத்தில் சார்த்திவிட்டு. வள்ளை கொய்யும் = வள்ளை பூப்பறிக்கும் நாடாகவும். முடந்தை நெல்லின் விளைவயல் பரந்த = முற்றித் தலைசாய்ந்து கிடக்கும் நெற்கதிர்கள் விளையும் வயல்-

களில் பரந்து கிடந்து இரைமேயும். தடம்தாள் நாரை இரிய = பெரிய கால்களைக் கொண்ட நாரைகள் அகன்று போகுமாறு. அயிரைக் கொழுமீன் ஆர்கைய = அயிரையாகிய கொழுத்த மீன்களைத் தின்பனவாகிய கொக்கு முதலாம் நீர்ப்பறவைகள். மரந்தொறும் குழாஅலின் = மரங்கள் தோறும் கூடியிருப்பதால். வெண்கை மகளிர் = வளையணியா வறுங்கையினராகிய இளம் மகளிர். வெண்குருகு ஒப்பும் = அவ்வெண்பறவைக் கூட்டத்தை ஒட்டித்திரியும் நாடாகவும். அழியாவிழவின் = இடையறு விழாக்களையுடைமையால், இழியாத் திவரின் வயிரிய மாக்கள் = குற்றமிலா இசை எழுப்பும் யாழ் உடையராகிய பாணர்கள். பண் அமைத்து எழிஇ = பண்ணொடு பொருந்திய இசையை எழுப்பியவாறே. மன்றம் நண்ணி=மன்றங்களை அடைந்தும். மறுகு சிறைபாடும் = வீதிகளில் புகுந்து வீடு தோறும் சென்று பாடிச் செல்லும். அகன்கண் வைப்பின் நாடு மன்= அகன்ற இடங்களை உடைய பேரூர்களைக் கொண்ட நாடாகவும் விளங்கின. அளியமன் = அந்நிலை இப்போது கழிந்து போகவே, பெரிதும் இரங்குதற்குரியவாயின.

# 10. புகன்ற ஆயம்

வஞ்சி மா்நகர்க்கண் உள்ள மன்னவன் பெருங்கோயிலில், வேந்தன் விருந்தினராய் வாழ்ந்திருந்து, பல்யானைச் செல்கெழுகுட்டுவனின் பெருமைகளை ஒவ்வொன்ருக உணர்ந்து, உணர்ச்சிப் பெருக்கால் உயர்பெரும் பாக்கள் பல புனைந்து பாராட்டி வந்த புலவர் பாலைக்கௌதமனுர், ஒருநாள் அவன் போர்முரசின் ஒலிகேட்டார். அம்முழக்கிற்காம் காரணம் யாது என்பதைக் காணவிரும்பி, விருந்தினர் மாளிகைவிடுத்து வெளிப்பட்டு, பிறநாட்டு அரசியல் தூதுவர்கள் வாழும் வீதியில் புகுந்து நடக்கலானுர். தமிழ்-நாட்டில் அரசோச்சும் பிறவேந்தர்களுள் தலையாயவர்களாகிய சோழர் பாண்டியர் என்ற முடியுடை மன்னர்களின் தூதுவர்-களோடு, வேளிர் வழிவந்த பிற குறுநிலத்தலைவர்களின் தூதுவர்களும் அவ்வீதியில் வாழ்ந்திருந்தனர். அவர்கள் வளத்தால் குறைந்த நாடுடையவரோ, எல்லை சுருங்கிய சிறு-நாடுடையவரோ அல்லர். ஐந்திணை வளமும் அமையப்பெற்ற அகன்ற பெரிய நாடாளும் நல்வாய்ப்புடையவர் அவர்கள்.

மகளிர் விரும்பும் வனப்புமிகு மலர்களைக் கொண்ட புலி நகக்கொன்றை மரங்கள், வரிசை வரிசையாக வளர்ந்திருப்ப-தால் உரம் பெற்ற கரைகளையும், அக்கரைக்கண் அமைந்த படித்துறைகளையும் கொண்டு, கருநீல மலர்களையும் பசுமைநிற இலைகளையும் உடைய நெய்தற்கொடி படர்ந்து, நீலமணிகள் இழைத்துப் பண்ணப்பட்ட கலம்போல் காட்சி நல்கும் கழிகளில் மீன்கவர்ந்து உண்டு உறுபசி தீர்ந்த நீர்ப்பறவைகள் அமர்ந்து இளைப்பாறும் இடமாகவும், ஆடவரும்மகளிருமாய் மக்கள், மாலை இன்பம் வேட்டுக் கூட்டமாய் வந்து அமரும்

இடமாகவும் பயன்படும் கானற்சோலைகளைச் சுற்றி, வேலியாக இடப்பட்ட மணல் மேட்டில் முளைத்துக் கடல் நோக்கிப் படர்ந்திருக்கும் அடும்பங்கொடிகளை அலைத்து அழிப்பதுபோல், கரை நோக்கிப் பாயும் திரைகள் கொண்டு வந்து ஒதுக்கிய சங்குகள், இடம் மாறிய இடர்பாட்டினை எண்ணி ஓவெனும் ஒலி எழுப்பி, முரல, அது கேட்டு ஆங்கு அடையும் மக்கள், அச்சங்குகளோடு அலைகொணர்ந்து குவிக்கும் வெண்முத்துச் சிப்பிகளையும், செம்பவளக் கொடிகளையும் வாரிச்சென்று பயன்கொள்வர். வேந்தர்க்கும் வேளிர்க்கும் உரிய, கடற்கரை நாட்டின் கவின் அத்தகைத்து.

காந்தள் மலர்களால் ஆன கண்ணி தலையில் கிடந்து மணக்க, குறித்த உயிர்களைத் தப்பாது கொல்லவல்லவில், கையில் நிமிர்ந்து நிற்க, மலையையும் காட்டையும் ஒட்டினாற்போல் உள்ள பாலைக்காட்டிற்குள் புகும் வேட்டுவர், காட்டு ஆமாவின் கூரிய கொம்புகளைக் கண்டோ, வேழங்களின் மதம் பட்ட நிலைகண்டோ சிறிதும் அஞ்சாது, அவற்றை எதிர்த்து வேட்டையாடி வீழ்த்தி, காட்டுப்பசுவின் கறியையும் வேழத்தின் வெண்கோடுகளையும் மட்டுமே கொண்டு, பேரூர்க் கடைவீதிகளில் நுழைந்து, ஆங்குத் தொழில் புரியும் வணிகர், அவற்றிற்கு விலையாகப் பொற்கட்டிகளையே தரக்காத்திருக்கவும், பொன்னைப் பொருளென மதியா மனத், திட்பம் உடைமையால், அவற்றைப் பொன்னுக்கு விற்காது, வடித்தெடுத்த புதுக்கள்ளிற்கு விற்றுவிட்டுத் தம் வாழிடம் மீள்வர்வேந்தர்க்கும் வேளிர்க்கும் உரிய பாலை நிலத்தின், பண்பும் பெருமையும் அன்ன.

நிலவளமும் நீர்வளமும் குறைவறப் பொருந்தியிருந்தமையால், நஞ்செய்களில் கரும்பு, காலம் அல்லாக்காலத்திலும், அதாவது, பருவத்தே பயிர் செய் என்ற

முதுமொழியையும் பொய்ப்படுத்தும் வகையில் விளைந்து முற்றுவதால், கரும்பை வெட்டிச் சாறு பிழிந்து வெல்லம் ஆக்கும் தொழிலும், காலங்கடந்த நிலையிலும் ஒழியாது நிகழ்ந்து கொண்டேயிருக்கும். பழையது போக்கிப் புதியது பதிப்பான்வேண்டி, கரும்பரிந்த தாள்களைத் தீயிட்டு அவிப்பதன் முன்னர், அவ்வரிகால்களில் மலர்ந்து மணம் நாறும் பல்வகைப் பூக்களையும் பறித்துக் கொண்டாடும், மகளிரின் மலர்கொய் விழாவும், காலம் அல்லாக்காலத்திலும் நடைபெறும். கரைகளில், தேன்படுமலர்களால் நிறைந்து மாண்புற்று நிற்கும் மருதம் முதலாம் பல்வேறு மரங்களையும் வேரோடு வீழ்த்தி விட்டு, வெண்ணிற நுரைகள் அலைபாயச் செக்கசெவேலென வரும்புது வெள்ளம், மதகுகளையும், மடைகளையும், கரைகளையும், கல்லணைகளையும் அழித்துவிட்டு எங்கும் பரந்து பெருகிற்றாக. அதன் போக்கைப் பண்டேபோல ஒழுங்குபடுத்தும் ஊக்கமும் உரமும் உடையராய் ஊரே ஒன்று திரண்டு வந்து, வைக்கோற்புரிகள் சுற்றிக் கட்டிய பெரிய பெரிய மணற்சரிசைகளை வெள்ளத்திற்கு அணை-யாக்கிட, அவ்வெள்ளம் அக்கரிசைகளையும் கரைத்துவிட்டுப் பெருக்கெடுத்துப்பாய, கரிசைகளால் ஆகாது என்பதறிந்து, கல்லும் இட்டிகையும் பெய்து அரும்பாடுபட்டு அழிக்கலாகா அரண் அமைத்து, ஆற்று வெள்ளத்தை அணைக்குள் தேக்கி-விட்ட வெற்றிக்களிப்பால், ஆரவாரப் பெருமகிழ்ச்சி கொள்ளும் சிற்றூர் மக்கள், தம்மூர்க்கு அணித்தாக உள்ள பேரூர்களில், விழாக்குறித்து எழும் முரசொலிகேட்டு விரைந்து சென்று விழாக்கண்டு களித்து வீடு அடைவர். வேந்தர்க்கும் வேளிர்க்கும் உரிய, வயல்வளம் சான்ற மருதநில மண்ணின் மாண்பு அத்தகைத்து.

தினை வளர்த்து உண்ணும் உழவர், வரகுவைக்கோல் வேய்ந்த சின்னஞ்சிறு குடிசைகளில் வாழும் செல்வச் சிறுமை

உடையவரேனும், தம் வாழிடம் வந்துசேரும் விருந்தினர்க்கும், வழிப்போகும் புதியோர்க்கும், சிலேமாவை, இன்று ஒருவர், நாளை ஒருவர் என முறை வகுத்துக்கொண்டு பலநாள் தந்து ஓம்பும் பேருள்ளம் படைத்தவராவர். மன்னர்க்கும் மாநிலத் தலைவர்க்கும் உரிய காட்டு நாட்டை ஒட்டிய மலைநாட்டு மக்களின் வாழ்க்கை வனப்பு, அத்தகைத்து.

இத்தகு பயன்மிகு நிலப்பரப்புகளோடு, பயன் இழந்த இடங்கள் சிலவும், அவர்க்கு உரிமையுடையவாய் இருந்தன. மணத்தாலும், மாண்புமிகு நிறத்தாலும் பல்வேறு வகைப்படும் மலர்கள் மலர்வதும் உதிர்வதுமாய பயன், அற்றுப் போக, செவ்வரக்குப் போலும் நிறம் பெற்ற செம்மணல் பரந்த சிறு சிறு குன்றுகள், பற்பல குறுக்கிடும் மலைக்காட்டு வழிகள், மகளிர் மிதியணிந்தல்லது கடக்க மாட்டாக் கொடுமையுடைது. வானளாவ உயர்ந்த மலையிடையே அமைந்த இத்தகைய வழிகளைக் கொண்டன போலும் நிலப்பகுதிகளையும் அவர் நாடு பெற்றிருந்தது.

ஐந்திணை வளமும் அமையப் பெற்ற அவர் நாடு அரண் அற்றுப், பகைவர் எளிதில் புக இடம் அளிக்கும் இழிவுடையதோ என்றால், அதுவும் இல்லை. அவர் நாடு, கடலும் காடும் ஆகிய இயற்கை அரண்களோடு, அடர்ந்த காவற்காடு, ஆழ்ந்த அகழி, அரிய பொறிபடை பற்பல அமைந்த பெருமதில் ஆகியவற்றைக் கொண்ட பெரிய பெரிய கோட்டைகளையும் கொண்டுளது. அங்ஙனமாகவும், அவ்வரசியல் தூதுவர்கள். பல்யானைச் செல்கெழுகுட்டுவனின் போர்முரசின் முழக்கம் கேட்ட அந்நிலையே அஞ்சி விதிர் விதர்க்கின்றனர் என்றால், அவன் ஆற்றல் பெருமை கண்டு, புலவர் வியந்து நிற்பதில் வியப்பில்லையே.

இவ்வாறு, தமிழகத்தில், அக்காலை அரசோச்சி வாழும் தன்னைத்தவிர்த்த அரசர் அனைவரும் அஞ்சி நடுங்குதற்குக் காரணமாய் முழங்கும் பல்யானைச் செல்கெழுகுட்டுவன் போர் முரசின் பெருமையையும், அது, அப்போது முழங்கற்காம் காரணத்தையும் காணத்துடிக்கும் ஆர்வம் உந்த, புலவர், முரசுறையும் மன்றம் நோக்கி விரைந்தார்.

ஆங்கு, அது, நன்கு நீராட்டி மாலைசூட்டி நிறுத்தப்பெற்றிருந்தது. நாள்தோறும் வழிபாடாற்றும் விழுக்குடியில் பிறந்தான் ஒருவன், வழிபாட்டிற்குரிய வீரமந்திரத்தை, கேட்டக்கால் பேயும் கைவிதிர்த்து நடுங்குமாறு கடுங்குரல் எடுத்து ஒலித்து, வீரர்குருதி கலத்துகொண்ட பலிச்சோற்றை, முரசை வலமாகவும் இடமாகவும் மும்முறை சுற்றி வீசினனாக. கையால் தொட, பேயும் அஞ்சும், அணுக, எறும்பும் அஞ்சும் அப்பலி சோற்றுத்திரளைப், பிணம் தின்று பழகிய பருந்தும் காக்கையும் மட்டுமே வந்து வயிறுர உண்ணலாயின. அந்நிலையில், போர்க்களத்தில் முன்வைத்த காலைப் பின் வைத்து அறியாப் பேராண்மைப் பெரும்புகழும், அப்புகழ்கண்டு கட்டிய வீரக் கழலும் உடையவரும், பெரிய பெரிய போர்க்களங்களிலெல்லாம் வெற்றி கண்ட வீறும் விருப்பமும் உடையவரும் ஆகிய வீரர்களுக்குச், சிறப்புச் செய்வான் வேண்டி, நிலம் அதிர ஒலிக்கும், இடியோசைபோலும் போர் ஒலியை கேட்டும் கேட்டுப் பழகிய அவர் காதுகள் இன்னிசை கேட்டு மகிழ்க. மாற்றூர் மண்கொண்டல்லது சோற்றுணவு கொள்ளேம் எனச் சூளுரைத்துப் போர்க்களம் புகும் அவர் வயிறு, வகைவகையான உணவால் நிறைக என்ற வேட்கை யுடையவனாய், பேரிசை விருந்தும், பெருஞ்சோற்று விருந்தும் அளிக்கும் காட்சியைக் கண்டார். அவ்விருந்திற்கு வீரர்களை அழைக்கும் வேண்டுகோள், குறித்தது அம்முரசொலி. அதுவே அவ்வேந்தர்க்கும் வேளிர்க்கும் அத்துணை அச்சம் ஊட்டிற்று

எனஅறிந்து, அவன் வெற்றிச்சிறப்பையும், அவ்வெற்றிற்குக் காரணமாம் வீரரைப் புரக்கும் பண்பாட்டுப் பெருமையையும் கண்டார் புலவர்; ஆகவே அவனைப் பாராட்டி மகிழ்ந்தார்.

பாய்ந்து வரும் பகைவர் பெரும்படையை, எதிர் நின்று தடுத்துப் போரிட்டு வெற்றி பெற்றுச் சிறைசெய்து மகிழும் படைவீரர், மேலும் போர் விரும்பும் எம்போல், பாய்ந்துவரும் பெருவெள்ளத்தின் இடைபுகுந்து அணைஅமைத்து வெற்றி கண்டு ஆரவாரிக்கும் உழவர் பெருமக்களைப் **புகன்ற ஆயம்** எனச் சிறப்பித்த நயத்தால், இப்பாட்டிற்கு அதுவே பெயராய் அமைந்தது.

30. "இணர்ததை ஞாழல் மா இதழ் நெய்தல்
மணிக்கலத்தன்ன மாயிதழ் நெய்தல்,
பாசடைப் பனிக்கழி துழைஇப் புன்னை
வால்இணர்ப் படுசினைக் குருகு இறைகொள்ளும்
அல்குறு கானல் ஓங்கு மணல் அடைகரை
தாழ் அடும்பு மலைந்த புணரி வளை நரல
இலங்கு நீர் முத்தமொடு வார்துகிர் எடுக்கும்
தண்கடல் படப்பை மென்பாலனவும்,
காந்தளம் கண்ணிக் கொலைவில் வேட்டுவர்
செங்கோட்டு ஆமான் ஊனொடு, காட்ட
மதனுடை வேழத்து வெண்கோடு கொண்டு
பொன்னுடை நியமத்துப் பிழிநொடை கொடுக்கும்
குன்று தலைமணந்த புன்புல வைப்பும்,
காலம் அன்றியும் கரும்பு அறுத்து ஒழியாது
அரிகால் அவித்துப் பலபூ விழவின்,
தேம்பாய் மருதம் முதல்படக் கொன்று
வெண்தலைச் செம்புனல் பரந்து வாய்மிகுக்கும்
பல்சூழ் பதப்பர் பரிய வெள்ளத்துச்
சிறைகொள் பூசலின் **புகன்ற ஆயம்**

முழவு இமிழ் மூதூர் விழவுக் காணூஉப் பெயரும்
செழும் பல்வைப்பின் பழனப்பாலும்,
ஏனல் உழவர் வரகு மீது இட்ட
கான்மிகு குளவிய அன்புசேர் இருக்கை
மென்தினை நுவணை முறைமுறை பகுக்கும்
புன்புலம் தழீஇய புறவுஅணி வைப்பும்,
பல்பூம் செம்மல் காடு பயம் மாறி
அரக்கத்தன்ன நுன்மணல் கோடு கொண்டு
ஒண்ணுதல் மகளிர் கழலொடு மறுகும்
விண்ணுயர்ந்து ஓங்கிய கடற்றவும் பிறவும்
பணைகெழுவேந்தரும் வேளிரும் ஒன்றுமொழிந்து
கடலவும் காட்டவும் அரண்வலியார் நடுங்க,
முரண்மிகு கடுங்குரல் விசும்பு அடைபு அதிரக்
கடுஞ்சினம் கடாஅய் முழங்கும் மந்திரத்து
அருந்திறல் மரபின் கடவுட் பேணியர்
உயர்ந்தோன் ஏந்திய அரும்பெறல் பிண்டம்
கடுங்கண் பேய்மகள் கைபுடையூஉ நடுங்க
நெய்த்தோர் தூஉய நிறைமகிழ் இரும்பலி
எறும்பு மூசா இறும்பூது மரபின்
கடுங்கண் காக்கையொடு பருந்து இருந்து ஆர
ஓடாப் பூட்கை ஒண்பொறிக் கழற்கால்
பெரும்சமம் ததைந்த செருப்புகல் மறவர்
உருமுநிலன் அதிர்க்கும் குரலொடு கொளைபுணர்ந்து
பெருஞ்சோறு உகுத்தற்கு எறியும்
கடுஞ்சின வேந்தே! நின் தழங்கு குரல் முரசே''.

**துறை: பெருஞ்சோற்று நிலை**
**வண்ணம்: ஒழுகு வண்ணம்**
**தூக்கு: செந்தூக்கு**
**பெயர்: புகன்ற ஆயம்**

மென்பாலன்வும் (1-8), புன்புல்வைப்பும் (9-13), பழனப் பாலும் (14-21), புறவணி வைப்பும் (22-25) கடற்றவும் பிறவும் ஆகிய நிலத்துக்குரிய வேந்தரும் வேளிரும் நடுங்க, (26-31) குரல் அதிர (32), சினம் கடாஅய், முழங்கும் மந்திரத்தால், கடவுட் பேணியர், உயர்ந்தோன் ஏந்திய பிண்டத்தையும் (33-35), பேய் மகள் நடுங்க, தூஉய இரும்பலியையும் காக்கையொடு பருந்து ஆர (36-39) மறவர் (40-1), கொளைபுணர்ந்து சோறு உகுத்தற்கு முரசு எறியும் (42-44) எனக்கூட்டிப் பொருள் கொள்க.

இணர்ததை = பூங்கொத்துக்களால் நிறைந்த ஞாழல்புலிநகக்கொன்றை மரங்கள் வளர்ந்த. கரைகெழு பெருந்துறை = கரையைக் கொண்ட பெரிய தண்ணீர்த்துறையாகிய. மணிக்கலத்தன்ன = நீல மணியால் செய்த கலம் போன்ற தோற்றம் உடையதான, மா இதழ் நெய்தல் = கரிய இதழ்களைக் கொண்ட நெய்தல் மலர்களையும், பாசடை = புதிய இலைகளையும் உடைய. பனிக்கழி குளிர்ந்த கழியில். துழைஇ = மீன் தேர்ந்து உண்டு. புன்னை = புன்னை மரத்தின் வால்இணர்ப்படுசினை = வெண்ணிற மலர்களைக் கொண்ட தாழ்ந்த கிளைகளில். குருகு = கொக்கு முதலாம் நீர்ப் பறவைகள். இறை கொள்ளும் = தங்கும் இயல்புடையதும். அல்குறு கானல் மாலைபோதில் மக்கள் வந்து இளைப்பாறும் இயல்புடையதுமாகிய கானற்சோலையின். ஓங்கு மணல் அடைகரை = உயர்ந்த மணல் மேடால் ஆகிய கரையில். தாழ் அடும்பு மலைந்த = படர்ந்திருக்கும் அடும்பங்கொடிகளை அலைத்த. புணரி வளை ஞரல = திரைகொண்டு வந்து ஒதுக்கிய சங்குகள் ஒலிக்க. இலங்கு நீர் முத்தமொடு = ஒளி வீசும் வெண் முத்துக்களோடு. வார்துகிர் எடுக்கும் = நீண்ட பவளக் கொடிகளை மக்கள் வாரிக் கொள்ளும் வளம் வாய்ந்த. தண்கடற்படப்பை = குளிர்ந்த கடலைச் சார்ந்த

ஊர்களைக் கொண்ட. மென்பாலனவும் = நெய்தல் நிலமும், காந்தள் அம்கண்ணி = காத்தட்பூவால் ஆன கண்ணியினை யும். கொலையில் வேட்டுவர் = கொலை புரியும் கொடிய வில் லினையும் உடைய வேட்டுவர். செங்கோட்டு, ஆமான் ஊனொடு — கூரிய கொம்புகளையுடைய காட்டுப் பசுவின் இறைச்சி கொண்டு. காட்ட மதனுடை வேழத்து = காட்டில் வாழும் மதம் மிக்க யானைகளின் வெண்ணிறக் கோடுகளையும் வேட்டையாடிக்கொண்டு. பொன்உடை நியமித்து = பொன் வளம் மிக்க பேரூர்க்கடை வீதிகளில். பிழிநொடை கொடுக்கும் = கள்விலைக்கு பிற்கும்வளம் வாய்ந்த. குன்று தலைமணந்த = குன்றுகள் பலமலிந்த. புன்புலவைப்பும் = முல்லை, குறிஞ்சி நிலங்களைச் சேர்ந்த புன்புலத்துச் சிற்றூர் களும். காலம் அன்றியும் = காலம் அல்லாக் காலத்திலும். கரும்பு அறுத்து ஒழியாது =கரும்பினை அறுத்துக் கொள்-வதோடு ஒழியாது. அரிகால் அவித்து - அதன் அரிகாலையும் அகழ்ந்து அழித்து. பலபூவின் = ஆங்கு மலர்ந்திருக்கும் பல்வேறு மலர்களைக் கொய்யும் மலர்கொய் விழாவினையும். தேம்பாய் மருதம் முதல்படக் கொன்று = தேன்துளிர்க்கும் மலர்களைக்கொண்ட மருதமரங்கள் வேரற்று விழுமாறு வீழ்த்தி விட்டு. வெண்தலைச் செய்புனல் = வெண்ணுரை மிதக்கும் செம்புனலானது. பரந்து வாய் மிகுக்கும்=எங்கும் பரந்து இடம் அனைத்தையும் அடைத்துக் கொள்ளும். வெள்ளத்து — வெள்ளத்தில். பல சூழ் பதப்பர் பரிய — அணையாக இட்ட பற்பல வைக்கோற் புரிகளைச் சுற்றிப் பண்ணிய மணற்-கோட்டைகளெல்லாம் கரைந்து போக. சிறைகொள் பூசலின் = கல்லும் இட்டிகையும் பெய்து அணைகட்டும் ஆரவாரத்தை. புகன்ற ஆயம்=விரும்பி மேற்கொண்டு முடித்த மக்கட் கூட்டம். முழவு இமிழ் மூதூர் விழவுக்காணூப் பெயரும் = முழவு ஒலிக்கும் பேரூர்களில் நிகழும் விழாக்கண்டு மீள்தற்கு இடமான. செழும் பல் வைப்பின் = வளம்மிக்க எண்ணிலாச்

சிற்றூர்களையும் கொண்ட. பழனப்பாலும் = மருத நிலப்பகுதி களும். ஏனல் உழவர் = தினைவிளைத்து உண்ணும் உழவர். வரகுமீது இட்ட = வரகு வைக்கோலை மேலே இட்டு வேய்ந்த. கான் மிகு குளவிய = காட்டில் மலரும் காட்டுமல்லிகை வளர்ந்த. அன்புசேர் இருக்கை = அன்பு ததும்பும் தம் மனைகளில். மென்தினை நுவணை = மென்மை வாய்ந்த தினைமாவுணவை. முறைமுறைபடுக்கும் = விருந்தினர்க்கு முறையே அளித்து விருந்தோம்பும். புன்புலம் தரீஇய = புன்செய் நிலங்களைக் கொண்ட. புறவு அணி வைப்பும் = முல்லை நிலத்தைச் சேர்ந்த சிற்றூர்களும். பல்பூஞ் செல்மல் காடு = பல்வேறு பூக்களின் காய்ந்த உலர்ந்த சருகுகள் பரந்த காடுகள். பயம் மாறி = பயன்படும் தன்மைகெட்டு. அரக்கத்தன்ன நுன்மணல் கோடு கொண்டு = அரக்குபோல் சிவந்த செம்மணல் மேடுகளாகிய குன்றுகளை உடையவாகி. ஒண்ணுதல் மகளிர் = ஒளிவீசும் நுதலினராய இளம் மகளிர். கழலொடுமறுகும் = காலில் செருப்பணிந்தே செல்லதக்க கொடுமையுடையதாகும். விண் உயர்ந்து ஓங்கிய கடற்றவும் பிறவும் = வானளாவ உயர்ந்த மரங்கள் செறிந்த காட்டு வழி களும் பிறிவும் ஆகிய ஐந்திணை வளங்களையும் ஒருங்கேபெற்ற. பணைகெழுவேந்தரும் வேளிரும்மும் = மும்முரசு முழங்கும் முடியுடை வேந்தரும் பிறகுறு நிலத்தலைவர்களும். ஒன்று. மொழிந்து = ஒன்று கூடிப் பேசி ஒத்த கருத்துடையராய். கடலவும் காட்டவும் அரண் வலியார் = கடல் அரணும் காட்டரணும் அமைத்து வலியராகவும். நடுங்க = அஞ்சி நடுங்குமாறு. முரண்மிகு கடுங்குரல் = மாறுபாடுமிக்க போர் நிகழ்ச்சியைப் புலப்படுத்தும் போர்முரசின் கடிய ஒலியானது. விசும்பு அடைபு அதிர = விசும்பகமெல்லாம் பரவி எதிரொலிக்க. கடும் சினம் கடாஅய் = கேட்கும் வீரர் உள்ளத்தில் கொடிய சினம் மூளப்பண்ணி. முழங்கும் மந்திரத்து = வாய்விட்டு ஒலிக்கும் மந்திரத்தால். அருந்-

திறல் மாவின் கடவுள் பேணியர் = வெல்லற கரிய திறல் படைத்த போர் முரசுக்கடவுளை வழிபடுவான் வேண்டி, உயர்ந்தோன் = வழிபாடற்றும் உரிமைமிக்க உயர்குடிப்பிறப்பாளன். ஏந்திய = படைத்த. அரும்பெறப் பிண்டம் பெருதற்கு அரிய பலியினை. கருங்கண் பேய்மகள் = கரியபெரிய கண்களை உடைய பேய்மகள். கைபுடையூ நடுங்க = கைகளைப் புடைத்துக் கொண்டு நடுங்க. நெய்த்தோர் தூய = குருதி தூவிய. நிறைமகிழ் இருப்பலி = மிக்க மதுவோடு கூடிய பெரிய அப்பலி. எறும்புமூசாஇறுப்பூது மாயின் = எறும்புப் மொய்க்காத வியப்பிற்கு உரியதாகவும். கருங்கண் காக்கையொடு பருந்து இருந்து ஆர = (அப்பலியினைக்) கரிய கண்களையுடைய காக்கையுடன் பருந்துகள் இருந்து உண்ணுமாறு. கடுஞ்சின வேந்தே = மிக்க சினம் உடைய வேந்தே! ஓடாப் பூட்கை = போரில் பின்னிடாத கொள்கையினையும். ஒண்பொறிக் கழற்கால் = சிறந்த பாராட்டினுக்குரிய வெற்றிச் செயல்கள் பொறிக்கப்பட்ட வீரக்கழல் கட்டிய கழல்கால்களையும் உடைய. பெரும் சமம் ததைந்த = பெரிய போர்க்களங்களில் பகைவர் போர்த் தந்திரங்களை யெல்லாம் கெடுத்துவிட்ட செருப்புகல் மறவர் = போர்த் தொழிலை எப்போதும் விரும்பும் வீரர்கள். நிலன் அதிர்க்கும் உருமுக்குரலொடி = நிலத்தை நடுங்கப்பண்ணும் இடிபோலும் தம் பெருங்குரலோடு. கொளைபுணர்ந்து = இசை விருந்தையும் கலந்து. பெருஞ்சோற்று = உணவை விருந்தாகப் படைத்தற் பொருட்டு. நின்தழங்கு குரல் முரசு எறியும், = உன்னுடைய ஓயாது முழங்கும் கொடைமுரசும் அடித்து முழங்கப்படுகிறது.